janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

மலர் 86 | 2023 செப்டம்பர் 10 - செப்டம்பர் 16 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 23




## ஒருங்கிணைப்புக்குழு, தேர்தல் வியூகக்குழு உட்பட 4 குழுக்கள் அமைப்பு

# எதேச்சதிகார ஆட்சியை வீழ்த்த 2024 நாடாளுமன்ற தேர்தலுக்கு தயாராகிறது 'இந்தியா' கூட்டணி

**மும்பையில் கூடிய 'இந்தியா' (Indian National Developmental Inclusive Alliance - INDIA) கூட்டணியின் மூன்றாவது கூட்டம், 2024 மக்களவைத் தேர்தலுக்கான பணிகளை துவங்குவதாக அறிவித்துள்ளது.**

### இந்திய முழுவதும் மாபெரும் பிரச்சாரப் பொதுக்கூட்டங்களுக்கும் அறைகூவல்

### 63 தலைவர்கள்

இதில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலாளர் து. ராஜா, காங்கிரஸ் தலைவர்கள் மல்லிகார்ஜூன கார்கே, சோனியா காந்தி, ராகுல் காந்தி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் சீத்தாராம் யெச்சூரி, ராஷ்ட்ரிய ஜனதா தளம் தலைவர் லாலு பிரசாத், தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார், திமுக தலைவரும் தமிழ்நாடு முதல் வருமான மு.க.ஸ்டாலின், திரிணாமுல் தலைவரும் மேற்குவங்க முதல் வருமான மம்தா பானர்ஜி, ஐக்கிய ஜனதாதளம் தலைவரும் பீகார் முதல்வருமான நிதிஷ் குமார், ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளரும் தில்லி முதல்வருமான அரவிந்த் கெஜ்ரிவால், பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான், ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன், சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ், ராஷ்ட்ரிய லோக்தளம் கட்சித் தலைவர் ஜெயந்த் சவுத்ரி, தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் உமர் அப்துல்லா, மக்கள் ஜனநாயக கட்சித் தலைவர் மெகபூபா முப்தி, பீகார் துணை முதல்வர் தேஜஸ்வி, ஐக்கிய ஜனதா தளம் தலைவர் ராஜீவ் ரஞ்சன் சிங், அமைச்சர் சஞ்சய் குமார் ஜா உள்ளிட் டோர் பங்கேற்று தங்களின் ஆலோ சனைகளை வழங்கினர்.

2024 மக்களவைத் தேர்தலில் இயன்ற வரை ஒன்றிணைந்து போட்டியிடுவது; பல்வேறு மாநிலங்களில் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை களை உடனடியாகத் துவங்கி கூடிய விரைவில் முடிப்பது என்றும் 'பாரதம் ஒன்றி ணைந்தால்; இந்தியா வெல்லும்' என்ற முழக்கத்தை முன்வைத்து, தகவல் தொடர்பு ஊடகங்கள் மூலம் பல்வேறு மொழிகளில் உடனடியாக பிரச்சாரத்தில் இறங்குவது என்று முக்கியத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

### 14 பேர் கொண்ட ஒருங்கிணைப்புக்குழு

'இந்தியா' கூட்டணிக்கு 14 பேர் கொண்ட ஒருங்கிணைப்புக்குழு மற்றும் தேர்தல் வியூகக் குழுவும், மும்பை கூட்டத்தில் ஏற்படுத்தப்பட்டது.

1. து. ராஜா (சிபிஐ), 2. கே.சி. வேணுகோபால் (காங்கி ரஸ்), 3. சரத் பவார் (தேசியவாத காங்கிரஸ்), 3. டி.ஆர். பாலு (திமுக), 5. சஞ்சய் ராவத் (சிவசேனா), 6. தேஜஸ்வி யாதவ் (ஆர்ஜேடி), 7. அபிஷேக் பானர்ஜி (திரிணாமுல்), 8. ராகவ் சத்தா (ஆம் ஆத்மி), 9. ஜாவேத் அலி கான் (சமாஜ்வாதி), 10. லாலன் சிங் (ஜேடியு), 11. ஹேமந்த் சோரன் (ஜேஎம்எம்), 12. உமர் அப்துல்லா (தேசிய மாநாடு), 13. மெகபூபா முப்தி (பிடிபி) ஆகியோர் இந்த ஒருங்கிணைப்புக் குழுவில் இடம்பெறுவார்கள் என்றும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இடம்பெறவுள்ள பிரதிநிதியின் பெயர் பின்னர் அறி விக்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டது.

ஒருங்கிணைப்புக்குழு மற்றும் தேர்தல் வியூகக்குழு மட்டுமல்லா மல், பிரச்சாரக் குழு, சமூக ஊடகங்களுக்கான பணிக்குழு, ஊடகங்களுக்கான பணிக்குழு, ஆய்வுப் பணிக்குழு ஆகிய மேலும் 4 குழுக்களும் அமைக்கப்பட்டன.

### பிரச்சாரக் குழு

பிரச்சாரக் குழுவில் 1. பினாய் விஸ்வம் (சிபிஐ), 2. குர்தீப் சிங் சப்பல் (காங்கிரஸ்), 3. சஞ்சய் ஜா, (ஜேடியு), 4. அனில் தேசாய் (சிவ சேனா), 5. சஞ்சய் யாதவ் (ஆர்ஜேடி), 6. பி.சி. சாக்கோ, (என்சிபி), 7. சம்பை சோரன் (ஜேஎம்எம்), 8. கிரண்மோய் நந்தா (சமாஜ்வாதி), 9. சஞ்சய் சிங் (ஆம் ஆத்மி), 10. அருண்குமார் (சிபிஐஎம்), 11. ஹஸ்னைன் மசூடி (தேசிய மாநாடு), 12. ஷாஹித் சித்திக் (ஆர்எல்டி), 13. என்.கே. பிரேமச்சந்திரன் (ஆர்எஸ்பி), 14. ஜி. தேவராஜன் (பார்வர்ட் பிளாக்), 15. ரவி ராய் (சிபிஐஎம்எல்), 16. தொல். திருமாவளவன் (விசிக), 17. கே. எம். காதர் மொய்தீன்

தொடர்ச்சி 7ம் பக்கம்




### 'பாரதம் ஒன்றிணைந்தால்; இந்தியா வெல்லும்..!'

'இந்தியா' கூட்டணிக் கட்சிகளாகிய நாங்கள், வரவிருக்கும் மக்களவைத் தேர்தலில் இயன்றவரை ஒன்றாகப் போட்டியிடு வதற்கு தீர்மானித்துள்ளோம். அதன்படி பல்வேறு மாநிலங்களிலும் தொகுதிப் பங்கீட்டு நடவடிக்கை உடனடியாகத் தொடங்கப்பட்டு, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் கூடிய விரைவில் முடிக்கப்படும். 'இந்தியா' கூட்டணிகட்சிகளாகிய நாங்கள், பொதுமக்களின் அக்கறை மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகள் தொடர்பாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் கூடிய விரைவில் பொதுக்கூட்டங்களை நடத்தவும் முடிவு செய்துள்ளோம். மேலும், 'பாரதம் ஒன்றிணைந்தால்; இந்தியா வெல்லும்' (யிஜூபீமீரீணீ ஷிபிகிஸிகிஜி; யிமீமீமீ மீரீணீ மிழி ஞிமிகி !) என்ற கருப்பொருளுடன் தொடர்புடைய தகவல் தொடர்பு மற்றும் ஊடக உத்திகள் மற்றும் பிரச்சாரங்களை பல்வேறு மொழிகளில் ஒருங்கிணைக்கவும் தீர்மானித்துள்ளோம்'' என்று தீர்மானத்தில் கூறப்பட்டது.

19ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 29.10.1938

மறைவு 17.09.2004

J.H.பிரடெரிக் அஜ்

முன்னாள் பொதுச் செயலாளர், சென்னை துறைமுக ஐக்கிய தொழிலாளர் சங்கம்
முன்னாள் மாவட்டக் குழு உறுப்பினர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

என்றும் உங்கள் நினைவில் வாழும்

அன்பு மனைவி கிரேஸ் பிரடெரிக் அஜ் மற்றும் குடும்பத்தினர்

கட்சிக் கடிதம்

# தோல்வி பயத்தின் உச்சத்தில் பாஜக!



போர்க்குணம் மிக்க தோழர்களே!

**குடி மக்களுக்கு அளித்திட்ட உறுதிமொழியை மன்னர் காப்பாற்ற தவறிவிட்டார். எம் முகம் கொண்டு மக்களின் முகம் காண முடியும்.**

முக்காடு இட்டு முகம் மறைத்து சென்றால் கூட, அடையாளம் கண்டு மக்கள் காரி உமிழ்கிறார்கள்.

சொன்ன சொல் காப்பாற்றத் தவறியவரை மன்னராக எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? மன்னரின் ஆட்சி அகற்றப்பட வேண்டும் மக்களின் ஆவேசக் குரல் நாடெங்கும் எதிரொலிக்கிறது.

மக்களின் குரலை, கோபக் குரலை ஒருங்கிணைக்க யாரும் இல்லையா என்ற கேள்வி எழுந்தது.

வினாவிற்கு விடை கூறும் விதமாக ஜூன் 23ஆம் நாள் பீகார் மாநிலத் தலைநகர் பாட்னாவில் இதோ நாங்கள் இருக்கின்றோம் என்று கூடினார்கள். அவ்வாறு கூடியவர்கள் எதிரிக் கட்சிகள் அல்ல. மாறாக இந்தியாவை காக்க கூடியுள்ளோம் என பறைசாற்றினார்கள்.

இந்தியா காக்கப்பட வேண்டுமெனில் ஜனநாயகம் காக்கப்பட வேண்டும். மதச்சார்பின்மை கட்டிக் காக்கப்பட வேண்டும். நாட்டை வழி நடத்தும் அரசியல் அமைப்புச் சட்டம் காக்கப்பட வேண்டும். அரசியலமைப்புச் சட்டம் வடித்து தந்துட்ட ரிசர்வ் வங்கி, நீதிமன்றங்கள், தேர்தல் ஆணையம், அமலாக்கத்துறை, வருமானவரித்துறை, தணிக்கை குழு (சிஏஜி), உட்பட அனைத்தும் காப்பாற்றப்பட வேண்டும்.

இவை அனைத்தும் காக்கப்படுவது மட்டுமல்ல, நாட்டு மக்களின் நலன் காப்பாற்றப்பட வேண்டும். விவசாயிகள், தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், இளைஞர்கள், மாணவர்கள், மாதர்கள் நலன் காக்கப்பட வேண்டும்.

இவை அனைத்தும் நிறைவேற வேண்டுமெனில் மூர்க்கத்தனமான மோடி ஆட்சி அகற்றப்பட வேண்டும்.

நாடு ஒருபோதும் சர்வாதிகாரத்திற்கோ, பாசிசத்திற்கோ இடமளித்தல் கூடாது. அத்தகைய பணிகளை செய்வனே நிறைவேற்றிட ஆற்றல் மிக்க, கொள்கை உறுதிமிக்க | பலம் பொருந்திய படை தேவை. அத்தகைய படை தான் பாட்னாவில் முதல் கூட்டம் நடத்தியது. முதல் கூட்டத்தில் 16 கட்சிகள் இடம்பெற்றன.

இரண்டாவது கூட்டம் ஜூலை 17, 18 நாட்களில் கர்நாடக மாநிலம் பெங்களூரில் நடைபெற்றது. இதில் 16 என்பது 26 கட்சிகள் என அதிகரித்தது. இரண்டு நாட்கள் நடைபெற்ற கூட்டத்தில், கூட்டணிக்கு 'இந்தியா' என பெயரிடப்பட்டது.


'இந்தியா' கூட்டணியின் மூன்றாம் கூட்டம் மகாராஷ்டிரா மாநிலத் தலைநகர் மும்பையில் ஆகஸ்ட் 31, செப்டம்பர் 1 என இரு நாட்கள் நடைபெற்றன.

இந்தக் கூட்டத்தில் 26 என்பது 28 கட்சிகளைக் கொண்ட அணியாக பலம் பெற்றது மட்டுமல்ல, மேலும் பல கட்சிகள் இணைய விரும்புகின்றன. ஒத்த கருத்துடைய கட்சிகளை 'இந்தியா' கூட்டணியில் இணைக்க வேண்டும் என்கிற விருப்பத்தையும் கூட்டத்தில் கலந்து கொண்ட கட்சிகள் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு நாளும் பலம் பெற்று வரும் 'இந்தியா' கூட்டணி நாட்டு மக்களின் நல் ஆதரவை பெறும் என்பதில் ஐயப்பாடு இல்லை.

'இந்தியா' கூட்டணி தேர்தலை எதிர்கொள்ள ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை கூட்டத்தில் மேற்கொண்டது. ஒருங்கிணைப்புக் குழு உட்பட பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.





இக்கூட்டணியில் கம்யூனிஸ்ட் கட்சிகள் உட்பட இடதுசாரி கட்சிகள் அனைத்தும் ஒரு சேர கரம்கோர்த்து நிற்பது மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் மற்றொரு நல்ல செய்தியாகும்.

இத்தகைய அணி உருவாகி பலம் பெற்று வருவதை சற்றும் எதிர்பார்க்காத பாஜக கடும் பதற்றத்தில் உள்ளது.

தங்களின் பதற்றத்தைத் தனித்துக்கொள்ள மோடி அமித்ஷா கூட்டணி கையை பிசைகின்றது, தலையை சொரிவது மட்டுமல்ல, பிய்த்துக்கொண்டு அல்லாடுகிறது. எத்தகைய சதியால் இந்தியா கூட்டணியை வெல்ல முடியும் என சதி திட்டங்கள் தீட்டுவதில் கைதேர்ந்தவர்களான மோடி அமித்ஷா அன்றாடம் ஆலோசிக்கின்றது. திரைமறைவில் நின்று பின்னணிக் குரல் கொடுக்கும் ஆர் எஸ் எஸ் ஆரிய ஆலோசனைகளை வழங்கிய வண்ணம் உள்ளது.

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு என்பது போன்று, மோடி வகையறாக்களின் பொய் மூட்டைகள் ஒன்பது ஆண்டுகால ஆட்சியில் அம்பலப்பட்டு அம்மணமாக நிற்கின்றது. சிஏஜி ஏழரை லட்சம் கோடி ஊழலை ஊரறிய, உலகறிய பகிரங்கப்படுத்தி விட்டது.

தங்களின் கோட்டைக்குள் ஏற்பட்ட ஒட்டைகள் வெறும் ஒட்டைகளாக அல்லாமல் பெரும் உடைப்பெடுத்து ஊழல்கள் பாய்ந்து ஓடுகிறது. என்ன செய்யலாம்? ஏது செய்யலாம்? என விழி பிதுங்கி நிற்போர் கண்டறிந்தது தான் ஒரே நாடு, ஒரே தேர்தல் எனும் மந்திரத்தை ஓதியிருக்கின்றது.

தற்போது சாத்தியமல்ல என்பதை நன்கறிந்தும் இப்படியொரு மந்திரத்தை எல்லோரும் ஒலித்தால் 'இந்தியா' முன்னேறும். இதனை நம்ப வைக்க வேண்டும் அதற்கோர் நாடறிந்த நபர் வேண்டும், அவர்தான் ராம்நாத் கோவிந்த்.

எரிவாயு விலை 200 ரூபாய் குறைப்பு எடுபடவில்லை. அடுத்த அஸ்திரம் தான் ராம்நாத் கோவிந்த். பாவம் அவர் என்ன செய்வார்! செஞ்சோற்றுக் கடனை தீர்க்கின்றார். முப்படைகளின் தலைவராய், குடிமக்களின் முதல் மகனாய் திகழ்ந்தவரை இப்படி ஒரு இக்கட்டான நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளது மோடி கும்பல்.

அவர் என்ன செய்வார் பாவம்.

ஊரான் வீட்டுப் பிள்ளையை கிணற்றில் இறக்கி வேடிக்கை பார்க்க நினைப்பதை அறியா கோவிந்த், கோவிந்தா.. கோவிந்தா.. என முழங்குவதைத் தவிர வேறு வழியில்லை.

திருவிழா கூட்டத் திருடர்கள் அவ்வளவு சாமானியர்கள் அல்ல. சதிகாரக் கூட்டம் சதித்திட்டங்களை தீட்டிப்படியே தான் இருக்கும். அதனைத் தடுத்து, நாட்டைக் காக்க வேண்டியது நம் தலையாய கடமை.

28 கட்சிகள் ஒருங்கிணைந்து நிற்பதும், பெரும்பாலான மக்கள் நம் அணியை ஆதரிப்பதும் மகிழ்ச்சி தான் என்றாலும், பாஜகவின் பின்னால் இருக்கும் மக்களை நாம் வென்றெடுக்க வேண்டாமா?

பாஜகவின் ஊது குழலாய் வலம் வரும் புரட்சித்தமிழன் எடப்பாடியின் பின்னால் அணிவகுக்கும் மக்களை வென்றெடுக்க வேண்டாமா?

நாட்டை நாசமாக்கி பொய் முகம் காட்டி போலித்தனமான நாடகத்தை அரங்கேற்ற முயலும் மோசடிக்காரன் மோடியின் தோலுரிக்க வேண்டாமா?

ஆம், செப்டம்பர் திங்கள் 12, 13 மற்றும் 14 நாட்களில் நடைபெறும் தொடர் மறியல் போருக்கு ஆயத்தமாவீர்!

நெஞ்சுரம் கொண்ட சிங்கங்களே! நேர்மைக்குப் பெயர் பெற்ற போர்வீரர்களே! ஆயிரம் ஆயிரமாய் அணிவகுப்பீர்!

எங்கெங்கு காணினும் செங்கொடி புதல்வர்களின் அணிவகுப்பு ஆயிரமாய், பல்லாயிரமாய் பங்கேற்பீர்!

மீண்டும் சந்திப்போம்

வணக்கம்

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

## இந்தியா கூட்டணியால் பா.ஜனதாவிற்கு பதற்றம் ஒரேநாடு ஒரே தேர்தல் என கூறத் தொடங்கியுள்ளது

**இரா. முத்தரசன் பேச்சு**

விருதுநகரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் கிழக்குபகுதி இடைக்கமிட்டி செயலாளர்கள், கிளை செயலாளர்கள் கூட்டம் மாநில குழு உறுப்பினர் பாலமுருகன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்துகொண்டு மாநில செயலாளர் இரா.முத்தரசன் பேசியதாவது, மக்கள் விரோத பாஜக மோடி ஒன்றிய அரசை ஆட்சியை விட்டு வெளியேற்ற வரும் 12,13,14 ஆகிய தேதிகளில் நடைபெறும், மாநிலந் தழுவிய தொடர் மறியல் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது. இம்மறியலில் உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும். இந்தியா கூட்டணியால் பா.ஜனதாவிற்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது. ஒரே நாடு, ஒரே தேர்தல் என்று கூற தொடங்கி உள்ளது. இது முடியாது என மோடிக்கும், அமித்ஷாவிற்கும் தெரியும். மக்களை திசை திருப்ப இப்படி பேசி வருகின்றனர். இவ்வாறு இரா.முத்தரசன் பேசினார். மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார் ஊள்ளிட்ட கிளை செயலாளர்கள் கலந்து கொண்டார்கள். மூத்த தோழர் காதர்முகைதீன் ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ1000 மாநில செயலாளரிடம் வழங்கினார்.



மு.வீரபாண்டியன்

# ஒரே நாடு, ஒரே தேர்தல்

## குரங்குகள் கையில் பூமாலை!

**ஒன்றிய அரசு, ஒரே நாடு ஒரே தேர்தல் என நாட்டை திசை திருப்ப முயற்சிக்கிறது. இது பேரழிவு முயற்சி. திட்டமிட்டே தான் ஒன்றிய அரசு துடிக்கிறது." இந்தியா" கூட்டணி நாளுக்கு நாள் வலுவடைகிறது. இதிலிருந்து மக்களை திசை திருப்பவே இந்த நவீன "ஒத்தல்லோ நாடகம்".**

ஒத்தல்லோ ஷேக்ஸ்பியரின் மிகவும் பேசப்பட்ட நாடகம். மிக மோசமான வட்டி கடைக்காரனை மையப்படுத்திய நாடகம் இது. இதனையே மிஞ்சிவிடும் நாடகங்களை பிரதமர் இனி நாள்தோறும் அரங்கேற்றக் கூடும்.

ஒரே நாடு, ஒரே தேர்தல் என்கிறார் பிரதமர். இது ஒற்றுமைச் சொல் அல்ல !, பன்முகத்தை சிதைக்கும் வேற்றுமை சொல் !.

இந்தியா ஒற்றை மொழி, ஒற்றை இனத்தை அடையாளப்படுத்தும் ஒற்றை நாடல்ல. மாறாக, பல்வேறு மொழி வழி மாநிலங்களின் கூட்டிசைவுதான் இந்தியா. எனவேதான், அரசியல் சாசன வடிப்பில் "ஒன்றியம்" என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரே நாடு, ஒரே தேர்தல் என்கிறது ஒன்றிய அரசு. நமது நாடாளுமன்ற ஜனநாயக முறைமை, மக்கள் அதிகாரத்தின் மூன்று முக்கிய விழுமியங்களை சுட்டிக் காட்டுகிறது.

1. நாடாளுமன்றம்
2. சட்டமன்றம்
3. உள்ளாட்சி

உள்ளாட்சி மட்டும் 20 லட்சத்திற்கும் மேல், இதில் இன்னும் அதிர்ச்சி தகவல் உள்ளன. இந்தியாவின் பல காடுகளில், மலைகளில் வசிக்கும் மக்கள் பலர் வாக்களிப்பது இல்லை. தேர்தல் கூட அங்கு நடத்தப்படவில்லை. (குழுக்களின் அறிக்கையில் இருந்து)

சரி ஒரே தேர்தல் !?

வாழ்க்கை அனுபவங்கள் சாத்தியப்படுத்துமா? அரசின் அதிகாரப்பூர்வ குழுக்கள் பல ஒரே தேர்தல் சாத்தியமல்ல என நிராகரித்துவிட்டது. தேர்தல் சீர்திருத்தம் குறித்து தோழர் இந்திரஜித் குப்தா கமிட்டி உட்பட இதனை சுட்டிக்காட்டி உள்ளது.

சரி அப்படியே ஒரே தேர்தல் என்றாலும், இது குறித்து நாடாளுமன்றம் அல்லவா விவாதிக்க வேண்டும்?

சரி எதிர்க்கட்சிகளை கலந்தாலோசனை செய்ததா ஒன்றிய அரசு?

அரசியல் நிர்ணய சபையில் விவாதித்தபோது நிதி, நிர்வாகம், அரசாங்கம், பத்திரிகைகள் என இந்திய ஜனநாயக தூண்கள் குறித்து குறிப்பிடபட்டது. டாக்டர் அம்பேத்கர் இதில் சிறப்பு தூண்கள் இரண்டு என்றார்.

1. எதிர்க்கட்சிகள்
2. நாடாளுமன்ற விவாத முறை

இரண்டையும் நிராகரிக்கிறது ஒன்றிய பிஜேபி அரசு !

தமிழக முதல்வர் கேட்பது போல் மேலும் ஒரு கேள்வி, இந்த குழுவிற்கு ஏன்



முன்னாள் குடியரசுத் தலைவர்? சட்ட நெறிகள் அல்லது தார்மீக விழுமியுங்கள் இடம் தருகிறதா?

ஒரே தேர்தல் எனும்போது, தேர்தல் சீர்திருத்தம் குறித்து ஒன்றிய அரசின் நிலை என்ன?

நாடாளுமன்றம் பணக்காரர்களின் அவையல்ல, மேலும் அது மதவாதிகளின் அரங்கமும் அல்ல, மாறாக அது மக்கள் அரங்கம். மக்களை அடையாளப்படுத்தும் மிக தெளிந்த மக்கள் பிரதிநிதிகளின் அடையாளம். இது மெய்ப்பட தேர்தல் சீர்திருத்தம் அவசியம் அல்லவா?

ஒரே நாடு, ஒரே தேர்தல் எனும் ஒன்றிய அரசு. அடுத்து ஒரே தேர்தல், ஒரே வாக்கு என கூறக்கூடும். அந்த வாக்கு இந்துக்களுக்கானது என்றும் கூறக்கூடும்.

ஆபத்து அப்படிச் செல்லும்....?

பன்முக கட்சிகளின் இயங்கும் முறையோ, பல கோடி மக்கள் வாக்களிக்கும் முறையோ, பிஜேபி ஒன்றிய அரசு விரும்புவதில்லை. தேர்தல் ஜனநாயகத்தை மயான பூமியாக மாற்ற துடிக்கிறது ஒன்றிய பிஜேபி அரசு.

உலகில் பல அறிஞர்களாலும் புகழப்படும் நாடு இந்தியா. இதன் ஜனநாயகத்தை, ஜனநாயகத்தின் திறவுகோல் என்கிறார்கள். இதன் தேர்தலை தேர்தல் திருவிழா என்கிறார்கள். நமக்கு இந்த முதலாளித்துவ சமூக அமைப்போடு உடன்பாடு இல்லை, எனினும் இந்திய ஜனநாயகத்தை பிற நாடுகளோடு ஒப்பிடும்போது, மேதைகள் பலர் இதனை நாட்டியம் புரியும் ஜனநாயகம் என்கின்றனர்.

இன்னும் சிலர் இதனை கதம்பமாலை என்கிறார்கள். இதில் பல வண்ணங்கள், பல நறுமணம் கமழும் ஒன்றாக பார்க்கிறார்கள்.

என்ன..! அந்த மாலையில் செம்மலர்களை கோர்க்க வேண்டும். அப்படி கோர்த்தால் அதன் உண்மை வாசம் வீசும்.

உண்மையில் வேறு எங்கும் இல்லாத நறுமண மாலை தான் இது !

ஆனால், அது குரங்குகளிடம் அல்லவா கிடைத்து விட்டது. மீண்டும் மக்கள் கைகளில் கிடைக்க

இந்தியா எழுக ! இந்தியா வெல்க !!

---

# மாநில அரசுகளை சிதைப்பதே ஒன்றிய அரசின் நோக்கம்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு

'இந்தியாவுக்காக பேசுகிறேன்' என்ற குரல் வழி தொடரை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செப்.4 ஆம் தேதி தொடங்கினார். 'வஞ்சிக்கும்பாஜகவைவீழ்த்துவோம், இந்தியாவை மீட்டெடுப்போம்' என்ற தலைப்பிலான முதல் தொடரில் அவர் பேசியதாவது:



இந்தியாவுக்காக அனைவரும் பேசியாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். காலம் காலமாக, இந்திய மக்கள் அனைவரும் போற்றிப் பாதுகாத்து வந்த ஒற்றுமை உணர்வு என்ற தத்துவத்தைச் சிதைத்து, இந்தியாவின் அடிப்படைக் கட்டமைப்பையே நசுக்க பாஜக., முயற்சிக்கிறது.

2014ஆம் ஆண்டு ஒன்றியத்தில் ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பாஜக, தேர்தலுக்கு முன்பாகக் கொடுத்த எந்த மக்கள் நல வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை.

திராவிட மாடல் என்னென்ன சாதனைகளைதமிழ்நாட்டில்செய்திருக்கிறது என்று நாம் புள்ளிவிவரத்தோடு அடுக்கிய பிறகு, அவர்கள் பெருமையாகப் பேசிவந்த 'குஜராத் மாடல்' பற்றி, இப்போது மறந்தும் கூட பேசுவதில்லை. மாறாக, நன்றாக இருந்த இந்தியாவின் பொதுத்துறை கட்டமைப்பையும் சீரழித்து, சின்னாபின்னமாக்கி விட்டார்கள். தங்களுக்கு நெருக்கமான தொழிலதிபர்களுக்கு அதை மடைமாற்றும் செயலை மட்டுமே செய்து கொண்டு இருக்கிறார்கள். இதை அனைவரும் மறைப்பதற்காகத்தான் மதவாதத்தைக் கையில் எடுத்திருக்கிறார்கள். மக்களின் மத உணர்வுகளைத் தூண்டி, அதில் குளிர்காயப் பார்க்கிறார்கள்.

ஒன்றிய பாஜக அரசு மணிப்பூரைப் பற்றி எரிய வைத்திருக்கிறது. அரியானாவில் மூட்டிவிடப்பட்ட மதவெறித் தீ, அப்பாவி மக்களின் உயிரையும் சொத்துகளையும் காவு வாங்குகிறது. இதற்கு இப்போது முற்றுப்புள்ளி வைக்கவில்லை என்றால், இந்தியாவை யாராலும் காப்பாற்ற முடியாது.

இந்தியாவின் பன்முகத்தன்மைக்கு, கூட்டாட்சித் தத்துவத்துக்கு, மக்களாட்சியின் மாண்புக்கு எப்போதெல்லாம் ஆபத்து வந்திருக்கிறதோ, அப்போதெல்லாம் முன்னணிப் படையாக தி.மு.க. நின்றிருக்கிறது.

2024 மக்களவைத் தேர்தல் யார் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதை விட, யார் ஆட்சிக்கு வரக்கூடாது என்று தீர்மானிக்க வேண்டிய தேர்தலாகும். ஒன்பது ஆண்டு கால பா.ஜ.க. ஆட்சியில், மாநிலங்களை அழிக்கின்ற படுபாதகமான பல மோசடிகள் செய்யப்பட்டுள்ளன.

### நிதி உரிமை பறிப்பு

ஜி.எஸ்.டி. முறை மூலம் மாநிலங்களின் நிதி உரிமை முழுவதுமாக பறிக்கப்பட்டுள்ளது. இதனால், தமிழ்நாட்டுக்கு நிதி சுயாட்சி உரிமை பறிபோனதுதான் மிச்சம். பா.ஜ.க., ஆளும் ஒரு மாநிலம் ரூ.2.24 லட்சம் கோடிதான் வரியாகக் கொடுத்திருக்கிறது. ஆனால், வரிப் பகிர்வாக, ரூ.9.04 லட்சம் கோடி பெற்றிருக்கிறது. இதைத்தான் ஓரவஞ்சனை என்கிறோம். இவ்வாறு எதிர்க்கட்சிகளைப் பழிவாங்கும் ஆட்சியாக மத்திய பா.ஜ.க. ஆட்சி இருக்கிறது.

ஒன்றிய நிதிக்குழு ஒதுக்கீட்டில் தமிழ்நாடு தொடர்ந்து பெரும் நிதி இழப்பைச் சந்தித்து வருகிறது. 12ஆவது நிதிக்குழுவில் 5.305 விழுக்காடாக இருந்த நிதி ஒதுக்கீடு, 15ஆவது நிதிக் குழுவில் 4.079 விழுக்காடாக குறைந்திருக்கிறது. இதனால், ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு இழக்கின்ற நிதி கொஞ்சம் நஞ்சமல்ல. நமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய ரூ.72,311 கோடியை இழந்திருக்கிறோம்.

பல திட்டங்களுக்கான பெரும் பங்கு மாநில அரசால்தான் வழங்கப்படுகிறது. ஆனால் அதற்கான பெயர் மட்டும் மத்திய அரசுக்கு வேண்டும் என்று நினைக்கிறார்கள். தமிழ்நாட்டுக்கு முத்திரைத் திட்டங்கள் என்று ஒன்று கூட இந்த 9 ஆண்டுகளில் தரவில்லை. மாநிலங்களைப் பழிவாங்குகிற அரசாக இப்போதைய மத்திய பா.ஜ.க. அரசு இருக்கிறது.

மக்களுக்கு நேரடியாக நன்மை செய்ய வேண்டிய பொறுப்பில் இருக்கிற மாநில அரசுகளை சிதைப்பதையே நோக்கமாக வைத்திருக்கிறார்கள். இது மூலமாக ஒட்டுமொத்த இந்தியாவையும் சிதைக்கப் பார்க்கிறார்கள்.

சமூக நீதி, மதச்சார்ப்பற்ற அரசியல், சமத்துவம், சமூக நல்லிணக்கம், மாநில சுயாட்சி, சமஷ்டி ஆட்சிமுறை, வேற்றுமையில் ஒற்றுமை போன்றவை உயிர் வாழக் கூடிய இந்தியாதான் உண்மையான இந்தியா! இணையற்ற இந்தியா! அப்படிப்பட்ட இந்தியாவை மீட்டெடுக்கத்தான் 'இந்தியா' கூட்டணியை உருவாக்கியிருக்கிறோம். இந்தியாவைக் காப்பாற்றப் போவது இந்த 'இந்தியா' கூட்டணிதான்.

பாஜக.,வின் வகுப்புவாத, வெறுப்பு அரசியலுக்கு மணிப்பூரும் அரியானாவும் பலியானதைப்போல மொத்த இந்தியாவும் பலியாகிவிடாமல் தடுக்க வேண்டும் என்றால், இந்தியா கூட்டணி வெல்ல வேண்டும் என்று பேசினார் மு.க.ஸ்டாலின்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 23

# எல்லாமும் மாறியே தீரும்!

39 சதவீத வாக்குகளையே பெற்று 303 நாடாளுமன்ற உறுப்பினர்களை பாஜக பெற்று ஆட்சி அமைத்திருக்கிறது. அதற்கு எதிரான 61 சதவீத வாக்குகளை பல கட்சிகளும் பிரித்ததாலேயே அது சாத்தியமானது.

எதிர்க்கட்சிகளால் ஒன்று சேர முடியாது என்று பாஜக கருதியது. அது கைகூடி விடக்கூடாது என்பதற்காகவே பல கட்சிகளை உடைக்கவும், வேறுபாடுகளை அதிகரிக்கவும் தன்னாலான எல்லா முயற்சிகளையும் செய்தது.

எதிர்க்கட்சிகள் வெவ்வேறு அடிப்படை கொள்கைகளைக் கொண்டவை. ஒரு கூட்டணிக்காக தமது கருத்தியலைக் கை கழுவி விட முடியாது. தனது பாரம்பரியமான கருத்து நிலைகளைக் கைவிட்டு, அவற்றுக்கு நேர் எதிரான பாஜகவின் நடவடிக்கைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளும் இன்றைய அதிமுக போல மற்ற கட்சிகளால் இருக்க முடியாது.

ஆனால் பாஜகவின் ஆட்சி இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தையும், ஜனநாயக முறைமையையும் அசைத்து அகற்றிவிட்டு, ஒரு சர்வாதிகார ஆட்சியை நோக்கி நகர்த்தப்படுகிறது.

இந்துத்துவாவை மையப்படுத்திய ஆர்எஸ்எஸ் விடுதலைப் போரில் பங்கேற்காதது மட்டுமின்றி, எதிர்த்தும் செயல்பட்டது. மக்களை மதத்தால் பிளவுபடுத்துவதன் மூலமே ஆட்சிக்கு வர முயன்று அதில் வெற்றியும் பெற்றது.

பாஜகவின் தேர்தல் வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. ஆனால் அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவது, அரசியல் சாசன 370 வது பிரிவை மாற்றி காஷ்மீரை சிதைப்பது என்ற தன் சொந்த அஜெண்டாக்களை நிறைவேற்றுவதிலேயே குறியாய் இருந்தது.

கார்ப்பரேட் பெருமுலாளிகளோடு கை கோர்த்துக் கொண்டு, குடிமக்கள் திருத்தச் சட்டம், தேசிய குடிமக்கள் பதிவேடு, மூன்று வேளாண் சட்டங்கள், நான்கு தொழிலாளர் சட்ட தொகுப்புகளைக் கொண்டு வந்தும், இன்று வரை செயல்படுத்த முடியவில்லை.

இவை இந்தியாவின் பன்மைத்துவத்துக்கு எதிரானவை. உரிமைகளைப் பறிப்பவை. தமக்கு எதிரானது என்று உழைக்கும் மக்கள் கருதியதாலும், தனது மக்களின் கருத்தை மதிக்கும் மாநில அரசுகள் இருப்பதாலும், இவற்றைச் செயல்படுத்த முடியவில்லை.

தான் நினைத்ததை எந்த எதிர்ப்பும் இல்லாமல் செய்து முடித்து விட வேண்டும் என்றால், ஆட்சி அதிகாரம் முழுக்க தன்னிடமே இருக்க வேண்டும், மாற்றுக் கருத்துகளுக்கான வழிமுறைகளே இருக்கக் கூடாது. ஒற்றைத் தன்மையை நாடு முழுமையிலும் கொண்டு வந்து விட வேண்டும் என்று பாரதிய ஜனதா துடியாய் துடிக்கிறது

ஆர்எஸ்எஸின் மோடி ஆட்சி தொடர்ந்தால் இந்தியாவின் பன்மைத்துவச் செழுமை சீர்குலைந்து, சர்வாதிகார நாடாக சிதைந்து போய்விடும் என்பதால் எதிர்க்கட்சிகள் ஒன்று சேர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

எதிர்க்கட்சிகள் கூட்டம் நடத்தி, ஐஎன்டிஐஏ என்று கூட்டணிக்கு பெயர் வைத்த அடுத்த நிமிடமே, ஈஸ்ட் இந்தியா கம்பெனி பெயரில் கூட இந்தியா இருக்கிறது என்று மோடி கொச்சைப்படுத்தினார். இரண்டாவது கூட்டம் நடந்ததும், 9 ஆண்டுகளாகக் கூடாத தேசிய ஜனநாயக கூட்டணி அவசரமாகக் கூட்டப்பட்டது.

மூன்றாவது கூட்டம் நடைபெற்று, ஒருங்கிணைப்பாளர்களை தேர்வு செய்து, முதல் கட்ட வாக்குறுதிகளையும் அறிவித்ததும், என்ன விவாதிக்கப் போகிறோம் என்றே சொல்லாமல் நாடாளுமன்றத்தின் சிறப்பு கூட்டம் நடத்தப்படுகிறது.

நாளைக்கே செயலாக்கப்பட இருப்பது போல, ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற பெயரில் ஒரு பெரும் விவாதம் துவக்கப்பட்டது.

தமிழ்நாடு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சனாதனத்தை ஒழிப்போம் என சொன்னதும், இந்து மக்களை இனப்படுகொலை செய்ய வேண்டும் என்று சொன்னதாக நாடெங்கும் பெருங்கூச்சல் எழுப்பப்படுகிறது.

சனாதனமும், இந்து மதமும் வேறு வேறானவை. பிறப்பினால் உயர்வு தாழ்வு பேசும் வர்ணாசிரமத்தை சனாதனம் ஏற்கிறதா, மறுக்கிறதா?

செய்யும் தொழிலால்தான் சாதி என்பது உடைத்து எறியப்பட்டு விட்டது. ஆசிரியர்கள் எல்லாம் பிராமணர்கள் அல்லது துணி துவைப்பவர்கள், முடிதிருத்துபவர்கள், மாடு வளர்ப்பவர்கள் எல்லாம் அதற்கான சாதிகளைச் சார்ந்தவர்கள் என்று ஒப்புக் கொள்வார்களா? நடைமுறையில் சாதியின் அடிப்படைகள் தகர்ந்து விட்டன.

கல்வியே அதன் மூல காரணம். அனைத்து சாதியினரும் கல்வி கற்க, இட ஒதுக்கீடு வாய்ப்பு அளித்தது. சாதியப் படிநிலை தகர்ந்து விடக்கூடாது என்பதனால் தான் கல்வியிலும் வேலை வாய்ப்புகளிலும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு தர மண்டல் பரிந்துரைகளை வி.பி.சிங் செயல்படுத்தியபோது, வன்முறைக் கலகத்தை ஆர்எஸ்எஸ் கட்டவிழ்த்தது.

மேல் சாதிக்காரர்களுக்கு. தாமாகவே அடிமையாகித் தீர வேண்டும் என்ற வர்ணாசிரமத்தை, சனாதனத்தைமிகப் பெரும்பான்மை உழைக்கும் மக்களைக் கொண்ட இந்து மதம் அகற்றி ஒதுக்கிவிடும்.

எல்லாம் மாறும். எதுவுமே மாறக்கூடாது என்று நிற்பவர்களை, கால வெள்ளம் அடித்துச் சென்று விடும்.

## நூறு நாள் வேலை தொழிலாளர்களை
# ட்ரோன் கண்காணிக்குமா? கசக்கி பிழியுமா?



இந்தியாவின் ஆன்மா கிராமப்புறங்களில் தான் உள்ளது என்றார் அண்ணல் காந்தியடிகள். அந்த வகையில் கிராமப்புற மக்களின் சமூக பொருளாதார வாழ்க்கையில் ஒரு சிறு முன்னேற்றம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக, நாடு முழுவதும் கிராமப் பகுதிகளில் வாழ்ந்து வரும் உடல் உழைப்பு தொழிலாளர் குடும்பங்கள் ஆண்டுக்கு குறைந்தபட்சம் 100 நாள் வேலை பெறுவதை சட்டபூர்வ உரிமையாக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு திட்டம் ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சி காலத்தில் இடதுசாரிகள் முயற்சியால் 2005 செப்டம்பர் மாதம் நிறைவேற்றப்பட்டது.

இந்த சட்டத்திற்கு ஆரம்ப காலங்களிலே பாரதிய ஜனதா கட்சி எதிர்ப்பு தெரிவித்தது. இது சட்டமாக நிறைவேற்றப்படாமல், திட்டமாக நிறைவேற்றப்பட்டிருந்தால் இந்நேரம் இதை ரத்து செய்து இருப்பார்கள். எனவே, இது சட்டபூர்வமாக்கப்பட்டதனால் ரத்து செய்ய முடியாமல் இதை கொஞ்சம் கொஞ்சமாக சிதைத்து சீரழிக்கும் திசைவழியில் இன்றைய ஒன்றிய மோடி அரசு ஈடுபட்டு வருகிறது.

ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்ட நிதி படிப்படியாக வெட்டி குறைக்கப்பட்டு இப்போது 202324 நிதியாண்டிற்க்கு வெறும் 60 ஆயிரம் கோடியாக சுருங்கிவிட்டது. கடந்த 202223ம் நிதியாண்டில் 73 ஆயிரம் கோடியாக ஒதுக்கப்பட்ட நிதி தற்போது 21.6 சதவீதம் வெட்டி குறைக்கப்பட்டுள்ளது. இப்படி வெட்டி குறைக்கப்பட்டு கொண்டே வந்தால் எப்படி வேலைத் திட்டத்தை இந்தியா முழுவதும் நூறு நாட்கள் செயல்படுத்த முடியும்

இந்த திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதியை ஆண்டுக்கு ஆண்டு குறைத்து விட்டு, புதிய புதிய வேலைகள். அதுவும் எந்திரங்கள் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தை உருவாக்கும் வேலைகளை சேர்த்து திட்டத்தை மடைமாற்றம் செய்து வருகிறது ஒன்றிய அரசு. எதிர்ப்புகளையும் மீறி செயல்படுத்தி வருகின்றன மாநில அரசுகள். தொழிலாளர்கள் வேலை செய்தது போல் கணக்கு காட்டி எந்திரங்களை பயன்படுத்தி வேலைகள் முடிக்கப்படுகின்றன. இதனால் , தொழிலாளர்கள் வேலை பெறும் உரிமைகள் பறிக்கப்படுகிறது.

ஊதியம் வழங்குவதில் நீண்ட கால தாமதம் ஏற்படுகிறது. ஊதிய காலதாமதத்திற்க்கு கொடுக்க வேண்டிய இழப்பீட்டு தொகை இதுவரை எங்கும் கொடுக்கப்படவில்லை. இதில் சட்ட விதிகள் பின்பற்றப்படுவதில்லை.

தேசிய அலைபேசி கண்காணிப்பு முறை அறிமுகப்படுத்தி தொழிலாளர்கள் அலைகழிக்கப்படுகின்றனர். NMMS செயலி மூலம் மின்னணு முறையில் வருகை பதிவு செய்யும் முறையானது, மே 21, 2021 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. இந்த முறையில் வருகை பதிவானது தினமும் இருமுறை பதிவு செய்யப்பட்டு வருகிறது. இந்த மின்னணு வருகை பதிவிடும் முறையானது கடந்த ஜனவரி 1, 2023 முதல் அனைத்து மாநிலங்களும் கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என்ற ஒன்றிய அரசு சுற்றறிக்கை அனுப்பி உள்ளது.

தமிழ்நாடு முழுவதும் சென்னை தவிர்த்து, 37 மாவட்டங்களிலும் இந்த திட்டம் செயல்பாட்டில் உள்ளது. இதன் மூலம் 92 லட்சத்து 9 ஆயிரம் குடும்பங்கள் வேலை அட்டை பெற்றுள்ளன. இதில் ஒரு கோடியே 31 லட்சத்து 51 ஆயிரம் தொழிலாளர்கள் பயன் பெறுவார்கள். ஆனால் நடப்பு கணக்குப்படி 89 லட்சத்து 62 ஆயிரம் தொழிலாளர் மட்டும்தான் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர். இதில் 29 சதவீதம் பட்டியல் சாதினர். 1.71% பழங்குடியினர் என்பதும், பெரும்பகுதி பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதுவரை பண்ணையாள், படியாள், கூலியாள், அடிமைகள் என்று ஏசப்பட்டவர்கள் இன்றைக்கு அரசின் வங்கிகளில் சம்பளம் பெறுகிறார்கள் என்கிற பெருமிதத்தை ஏழைத் தொழிலாளர்கள் பெற்றுவிடக்கூடாது. எனவே, அதை சிதைக்க வேண்டும் என்பதைத்தான் ஆர்.எஸ்.எஸ். செய்கிறது. இதுவரை விவசாய வேலைகளில் ஈடுபடாத சமூகத்தின் சகல பகுதி பெண்களும் நூறு நாள் வேலையில் ஈடுபடுகிறார்கள் என்பதை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். பெண்கள் ஓரளவு சுயசார்போடு வாழ்வதை ஆர் . எஸ். எஸ். மூளை ஏற்றுக்கொள்வதில்லை.

2019 20 ஆண்டில் ஒரு லட்சத்து 20 ஆயிரத்து 722 குடும்பங்கள் வேலை வாய்ப்பு பெற்றுள்ளன. இவர்களின் சராசரி வேலை ஆண்டுக்கு 44 நாட்கள் மட்டுமே.

2020 – 21 இல் ஒரு லட்சத்து 78 ஆயிரத்து 690 குடும்பங்கள் வேலை வாய்ப்பு பெற்றுள்ளன. இவர்களின் சராசரி வேலை ஆண்டுக்கு 50 நாட்கள் மட்டுமே.

2021– 22 ஆண்டில் 2 லட்சத்து 29 ஆயிரத்து 919 குடும்பங்கள் வேலை வாய்ப்பு பெற்றுள்ளன. இவர்களின் சராசரி 51 நாட்கள் மட்டுமே.

2022–23 ஆம் ஆண்டுகளில் 3 லட்சத்து 90 ஆயிரத்து 533 குடும்பங்கள் வேலை வாய்ப்பு பெற்றுள்ளன. இவர்களின் சராசரி ஆண்டிற்கு 51 நாட்கள் மட்டுமே.

இது தமிழ்நாட்டின் புள்ளி விவரம். இந்தியாவிலேயே அதிகம் வேலை வாய்ப்பு வழங்கும் தமிழ்நாட்டின் நிலை இதுவென்றால், மற்ற மாநிலங்களின் நிலை சொல்ல தேவையில்லை.

நாம் ஆண்டுக்கு 200 நாட்கள் வேலை வழங்க வேண்டும் என போராடி வருகிறோம். ஆனால், இவர்கள் நூறு நாட்களில் 50 நாட்கள் கூட வேலை தரவில்லை என்பது தான் கள எதார்த்தமாக உள்ளது

எந்த ஒரு மாவட்டத்திலும் 100 நாட்கள் முழுமையாக வேலையை முடித்தவர்கள் 20 பேருக்கு மேல் இல்லை என்பது மிகவும் கவலைப்படத் தக்கது. குறைந்தபட்சம் 100 நாள் வேலை என்கிற நோக்கத்தையே இது சிதைக்கிறது.

சமூக பொருளாதார ரீதியில் மிகவும் பின் தங்கி உள்ள கிராமப்புற மக்களை கை தூக்குவதற்காக கொண்டு வந்த ஒரு திட்டத்தை இவ்வாறு மோடி அரசு சிதைக்கிறது. இந்த லட்சணத்தில் இந்த வேலைகளை கண்காணிப்பதற்கு ட்ரோன் கேமராக்களை பயன்படுத்த உள்ளதாக, மத்திய ஊரக மேம்பாட்டு துறை அமைச்சகம் சமீபத்தில் அறிவித்துள்ளது.

ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் இயற்கை வள மேலாண்மை, நீர் வளம், விவசாயம் சார்ந்த பணிகளை கண்காணிப்பது மட்டுமின்றி, பிரத்யோக ஆய்வுகளுக்கும், தக்க மதிப்பீட்டு நடவடிகளுக்கும் ட்ரோன்கள் பயன்படுத்த முடிவு செய்யப் பட்டிருக்கிறது. ட்ரோன் பயன்பாட்டுக்கான செலவினத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படாது. இத்திட்டத்தின் கீழ் மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் 10 சதவீத நிர்வாக செலவின நிதியை இதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம். கண்காணிப்பு நடவடிக்கை குறைத்தீர் அதிகாரிகளுக்கு பெரிதும் உதவும். இதன் மூலம் புகார் குறித்த நேரத்தில் தீர்வு காண முடியும் என மாநில அரசுகளுக்கு ஒன்றிய அமைச்சகம் அறிவித்துள்ளது. இதன் மூலம் பணிகள் கண்காணிக்கப்படுகிறதோ இல்லையோ? தொழிலாளர்கள் அச்சுறுத்தப்படுவார்கள் என்கிற ஐயம் ஏற்பட்டிருக்கிறது.

ஏற்கெனவே 100 நாள் வேலை தொழிலாளர்களை கண்காணிக்க பல்வேறு முறைகள் உள்ளது. எந்த ஒரு தொழிலாளியும் தான் செய்கிற வேலையை தானே தீர்மானித்துக் கொள்வதில்லை. அந்த ஊராட்சி கிராம சபை தான் தீர்மானிக்கின்றன. எவ்வளவு நேரம் வேலை, எவ்வளவு அளவு வேலை என்பதையும் தொழிலாளர்கள் தீர்மானிப்பதில்லை. பணித்தள இடங்களில் வேலையை கண்காணித்து வேலை வாங்க வேண்டிய கட்டமைப்புகளை வலுபடுத்தாமல் ட்ரோன் பயன்படுத்துவது தொழிலாளரை அச்சுறுத்த உதவுமே தவிர, பணிகள் மேம்பட உதவாது.

தமிழ்நாடு முழுவதும் 12,524க்கும் மேற்பட்ட ஊராட்சிகள் உள்ளன அப்படி என்றால் இந்தியா முழுவதும் இருக்கிற ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட ஊராட்சிகளை எத்தனை ட்ரோன்களை பயன்படுத்தி கண்காணிக்க முடியும்?. ட்ரோன்கள் வாங்குவதற்கான நிதி, அவற்றை இயக்கும் தொழில்நுட்ப வல்லுனர்களுக்கான நிதி, அவற்றை கண்காணிக்கும் அரசு அலுவலகம், கண்காணிக்கும் அதிகாரிகள் இப்படி எல்லாம் பெரும் நிதியை அரசு செலவிட வேண்டி வரும் . இப்படி எல்லாம் ஆதிக்கம் செலுத்திட அரசு நிதி ஊதாரி தனமாக செலவிடுவதால் எந்தப் பயனும் ஏற்படப் போவது இல்லை. அந்த நிதியை மக்களுக்கு ஊதியமாக வழங்கினால் தொழிலாளர்களுடைய வாங்கும் சக்தி அதிகரிக்கும். சமூகத்தில் பணப்புழக்கம் ஏற்படும். மக்களும் வாழ முடியும் என்பதை ஏழைத்தாயின் மகனால் ஏன் சிந்திக்க முடியவில்லை?.

இன்றைய ஆட்சியாளர்கள் நம்மவர்களும் அல்ல, நல்லவர்களும் அல்ல. இவர்கள் வீழ்த்தப்பட வேண்டியவர்கள் என்பதை கிராமப்புற பாட்டாளி வர்க்கம் உணர்ந்து எழ வேண்டிய காலம் இது.

-பிரதாப் சந்திரன்
தொடர்புக்கு: 9382679798

# மணிப்பூர் வன்முறை பாதிப்பு பகுதிகளில் ஐ.டி.பி.டி மருத்துவக் குழு நேரில் ஆய்வு



ஜி.ஆர்.இரவீந்திரநாத்



**சமாதானம் மற்றும் முன்னேற்றத்திற்கான இந்திய டாக்டர்கள் சங்கம், அணுப்போர் தடுப்பிற்கான சர்வதேச டாக்டர்கள் சங்கத்துடன் இணைந்து மணிப்பூர் முகாம்களை நேரடியாக பார்வையிட்ட, சமாதானம் மற்றும் முன்னேற்றத்திற்கான இந்திய டாக்டர்கள் சங்கத்தின் மருத்துவர்கள் குழு ஆய்வு செய்தது.**

மணிப்பூரில் அகதிகள் முகாம்களில், சுகாதார வசதிகளை மேம்படுத்த வேண்டும். தடுப்பூசிகளை வழங்கிட வேண்டும். அமைதி திரும்பிட பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வு காண வேண்டும் என வேண்டுகோள் விடுத்தது.

ஐ.டி.பி.டி யின் அகில இந்தியத் தலைவர் டாக்டர் அருண்மித்ரா (பஞ்சாப்), ஐ.டி.பி.டி யின் அகில இந்தியப் பொதுச் செயலாளர் ஷகில் வுர் ரஹ்மான் ( பிஹார்) ,அகில இந்திய துணைத் தலைவர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், அகில இந்திய செயலாளர்கள் டாக்டர் ஏ.ஆர். சாந்தி,டாக்டர் ரஜனி ( தெலுங்கானா) ஆகியோர் அடங்கிய குழு, செப்டம்பர் 1 முதல் 3 வரை மணிப்பூரில் உள்ள அகதிகள் முகாம்களின் சுகாதார நிலைமைகளை ஆராய நேரில் சென்றிருந்தது.

ஐ.டி.பி.டி யின் மணிப்பூர் மாநிலத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான டாக்டர் நாராசிங், ஐ.டி.பி.டி யின் மணிப்பூர் மாநில பொதுச் செயலாளர் மாங்கிலிப் சிங், இணைச் செயலாளர் ரஹிப், மருத்துவர்கள் மோகன்

ஆகியோர் இக்குழுவின் பயணத்திற்கு உடனிருந்து உதவினர்.

இக்குழு, கலவரம் மற்றும் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட குக்கி மற்றும் மெய்த்தி இன மக்களை சந்தித்து உரையாடினர்.

முகாம்களில் உள்ள சுகாதார நிலைமைகள், உணவு, குடிநீர் மற்றும் தண்ணீர் வசதிகள், கழிவறை வசதிகள் உள்ளிட்ட பலவற்றையும் நேரில் ஆய்வு செய்தனர்.

மணிப்பூர் பள்ளத்தாக்கில் அமைக்கப்பட்டுள்ள குமலன் பாக் முகாமிற்கு ஐ.டி.பி.டி மருத்துவக் குழுவினர் சென்றனர். இம்முகாமில் ஏறத்தாழ 194 பேர் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

மணிப்பூர் தலைநகர் இம்பாலிலிருந்து ஏறத்தாழ 50 கி.மீ தொலைவில், கங்பொக்ப்பி மாவட்டத்தில், அமைக்கப்பட்டுள்ள, சபோர்மெய்னா மற்றும் கங்குயி மலைப்பகுதி ஐடிஐ முகாமிற்கு சென்றிருந்தனர்.

இம்முகாம்களில் கலவரத்தால் பாதிக்கப்பட்ட குக்கி பழங்குடியின மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஐடிஐ முகாம் பல முகாம்களை உள்ளடக்கியதாகும். இம்முகாம்களில் ஏராளமான குழந்தைகள் உட்பட 700 க்கும் மேற்பட்டோர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்த ஐடிஐ முகாம்களில் கடந்த 4 மாதங்களில் நான்கு குழந்தைகள் பிறந்துள்ளன. மணிப்பூரில் 334 க்கும் மேற்பட்ட முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

குழு கண்டறிந்தவை:

# மெய்தி மற்றும் குக்கி பகுதி முகாம்களில் போதிய சுகாதார வசதிகள் ,கழிப்பறைகள் இல்லை.

# தொடர்ச்சியான தண்ணீர் வழங்கல் இல்லை. காய்கறிகள்,கீரைகள்,பழங்கள் வழங்கப்பட வில்லை. அரசி,பருப்பு, எண்ணைய் ,உருளை கிழங் குகள் மட்டுமே வழங்கப் படுகின்றன.

# பால்,முட்டை, மீன்,இறைச்சி போன்ற புரதச் சத்துள்ள உணவுகள் வழங்கப்படவில்லை.

# ஓரிரு இடங்களில் மட்டும் ,நபர் ஒருவருக்கு , இரண்டு வாரங்களுக்கு ஒரு முட்டை மட்டும் வழங்கப்பட்டுள்ளது.

# ஏராளமான பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு இரத்த சோகை உள்ளது.

# குழந்தைகள் சிலருக்கு கண் வெண்படல அழற்சி (Conjunctivitis) பாதிப்பு உள்ளது.

# தோல்களில் சிலருக்கு பூஞ்சை தொற்றுள்ளது.

# டைபாய்டு காய்ச்சல் பலருக்கு பாதிப்பை உருவாக்கியுள்ளது.

# சிலருக்கு டைஃபஸ் மற்றும் மூளைக்காய்சல் ஏற்பட்டுள்ளது.

# டெங்கு பரவலும் அதிகரித்து வருகிறது.

# சானிட்டரி நாப்கின்கள் போதிய அளவு வழங்கப்பட வில்லை.

# மருந்துகள் ,மருத்துவ உபகரணங்கள் தட்டுப்பாடு உள்ளது. மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறையும் உள்ளது.

# முகாம்களில் தங்கியுள்ளோருக்கு எந்த தடுப்பூசிகளும் வழங்கப்படவில்லை. குறிப்பாக தட்டம்மை தடுப்பூசி கூட வழங்கப்படவில்லை.

# பிரசவத்தின் பொழுது சிக்கல் ஏற்பட்டாலோ, சிசேரியன் அறுவை சிகிச்சைக்கோ அல்லது வேறு அவசர அறுவை சிகிச்சைகளுக்கோ குக்கி பழங்குடியினர் அண்டை மாநிலமான நாகலாந்தில் 150 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கொக்கிமாவிற்கோ அல்லது திமாப்பூருக்கோ,அல்லது 480 கிலோமீட்டர் தூரத்தில் அசாமில் உள்ள கௌகாட்டிக்கோ நீண்ட நெடிய பயணத்திற்குப் பிறகு செல்ல வேண்டியுள்ளது.

# மணிப்பூரில் பொதுப் போக்குவரத்து வசதி மோசமாக உள்ளதால், ஏழை எளிய பழங்குடி வகுப்பைச் சேர்ந்தோர் அவசர சிகிச்சைகளுக்கு தனியார் வாகனங்களையே பயன் படுத்த வேண்டியுள்ளது.

# குக்கிப் பகுதி அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள்,அரசு மருத்துவமனைகள் போதிய கட்டமைப்பு இல்லாமல் உள்ளன.

# முகாம்களில் உள்ளவர்கள் குறிப்பாக குழந்தைகள் உளவியல் ரீதியிலும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். கலவரத்திற்கு பின்பான மன அதிர்ச்சி பலரையும் பாதித்துள்ளது.

அரசுகள் என்ன செய்ய வேண்டும்? பரிந்துரைகள்:

•ஒன்றிய அரசும்,மணிப்பூர் மாநில அரசும் முகாமில் தங்கியுள்ள மக்களின் சுகாதாரத் தேவைகளை, சரிவிகித உணவு,தண்ணீர் ,காய்கறிகள், பழங்கள்,பால் மற்றும் அடிப்படைத் தேவைகளை வழங்கிட நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

• மருந்துகள்,மருத்துவ உபகரணங்கள் தட்டுப்பாட்டை போக்கிட வேண்டும். மருத்துவ நிபுணர்கள் இல்லாத இடங்களில் தொலைதூர மருத்துவ ஆலோசனைகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மருத்துவ மையங்களுக்கு இணைய வசதியை உடனடியாக வழங்கிட வேண்டும்.

• தடுப்பூசிகளை முகாம்களில் உள்ளோருக்கு வழங்கிட வேண்டும்.

•வைட்டமின் ஏ மற்றும் வைட்டமின் மருந்துகள் வழங்கிட வேண்டும். குறிப்பாக குழந்தைகளுக்கு வழங்கிட வேண்டும்.

சர்க்கரை நோய்,உயர் ரத்த அழுத்தம், சிறுநீரக நோய் உள்ளிட்ட தொற்றா நோய்களுக்கான மருந்துகள் தட்டுப்பாடு உள்ளது.அவற்றை வழங்கிட வேண்டும்.

• டெங்கு பரவுவதால், கொசு ஒழிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும்

•மூடப்பட்டுள்ள அங்கன்வாடிகளை உடனடியாக திறந்திட வேண்டும்.

•பொதுவாக பழங்குடியினர் பகுதிகளில் மருத்துவக் கட்டமைப்பு குறைபாடுகள் உள்ளன. இவற்றை சரி செய்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

•குக்கி பழங்குடியினர் ஏற்றுக் கொள்ளக் கூடிய பிற மாநில மருத்துவர்களை, மருத்துவ நிபுணர்களை அப்பகுதிகளில் தற்காலிக அடிப்படையில் நியமிக்க வேண்டும்.

• உளரீதியான பாதிப்புகளுக்கு ஆளாகியுள்ளோருக்கு, மனநல ஆலோசனைகளை வழங்கிட வேண்டும்.

• அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளோருக்கு வழங்கப்பட வேண்டிய,வசதிகள் உரிமைகள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையத்தின் (UNHRC) வழிகாட்டும் நெறிமுறைகளை ஒன்றிய மற்றும் மணிப்பூர் மாநில அரசுகள் பின்பற்றிட வேண்டும்.

•மணிப்பூரில் அமைதி திரும்பிட, அனைத்துப் பிரிவு மக்களுக்கும் நல்லிணக்கத்துடன் வாழும் நிலையை உருவாக்கிட, அர்த்தமுள்ள பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட வேண்டும். அதற்கு ஒன்றிய மற்றும் மணிப்பூர் அரசுகள் தேவையான நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும்.



ஊடகவியலாளர் சந்திப்பில், ஐடிபிடியின் அகில இந்திய துணைத் தலைவர் டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது ஐடிபிடியின் அகில இந்தியச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, பாரா மெடிக்கல் கல்வி மற்றும் நலச்சங்கத்தின் அகில இந்திய துணைத் தலைவர் பி.காளிதாசன் ஆகியோர் உடன் இருந்தனர்.

## வினாடி - வினா

1 இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் ஆர்யபட்டா எங்கிருந்து அனுப்பப்பட்டது?

2 ஜி 20 எனப்படும் இருபது நாடுகள் குழு எப்பொழுது தொடங்கப்பட்டது?


3 ஜி 20 அமைப்பின் முதல் உச்சி மாநாடு எங்கு நடைபெற்றது?

4 ஜி 20 அமைப்புக்கு அடுத்த ஆண்டு (2024) தலைமை வகிக்கும் நாடு எது?

5 இந்தியா தலைமை வகிக்கும் ஜி 20 உச்சி மாநாட்டின் (2023ஆம் ஆண்டு) கருப்பொருள் என்ன?

6 இந்தியாவின் முதல் பொது வேலை நிறுத்தத்திற்கு காரணமாக இருந்த தலைவர் பெயர் என்ன?

விடைகள் 12 ஆம் பக்கம்



# அதானியின் மெகா பங்குச்சந்தை ஊழல்!

## அம்பலப்படுத்திய ஓசிசிஆர்பி அறிக்கை



அருண் நெடுஞ்செழியன்

**மோடியின் நண்பர் என எதிர்க்கட்சிகளால் அழைக்கப்படுகிற அதானியின் பங்குச்சந்தை முறைகேடுகளை தற்போது ஓசிசிஆர்பி (OCCRP) அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது. கடந்த ஜனவரி மாதம், அதானி குழுமம் குறித்தான ஹின்டன்பர்க் நிறுவனத்தின் ஆய்வறிக்கை நாட்டின் தலைப்புச் செய்தியானது.**

அதானி குழுமத்தின் பங்கு வர்த்தக மோசடி, வரி ஏய்ப்பு உட்பட பொருளாதார முறைகேடுகளை ஹின்டன்பர்கின் ஆய்வறிக்கை ஆதாரத்துடன் அம்பலப்படுத்தியதால், பங்கு வர்த்தகத்தில் அதானி குழுமத்தின் பங்குகள் அதிவேகமாக வீழ்ச்சியடைந்தது குறிப்பிடத்தக்கது.

ஹின்டன்பர்க் அறிக்கை வந்த பின்னர், ஒன்றிய அரசின் அமலாக்கத்துறை, வருவாய் புலனாய்வு அமைப்பு போன்ற விசாரணை அமைப்புகளின் விசாரணை வளையங்களில் இருந்து தப்பவைக்கப்படுகிற அதானி, மோடி அரசால் தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு வருகிறார். ஒரு கட்டத்தில், உச்சநீதிமன்றம் தலையிட்டு அதானி குழுமத்தின் பங்கு வர்த்தக மோசடிகளை விசாரித்து அறிக்கை அளிக்குமாறு பங்கு வர்த்தகங்களை ஒழுங்கு செய்கிற செபி அமைப்புக்கு உத்தரவிட்டது. ஆனால் இந்த செபியின் நம்பகத்தன்மையை பத்திரிக்கைகள் கேள்விக்குள்ளாக்கின. அதானி குழும முறைகேடுகள் நடைபெற்ற காலத்தில் செபியின் தலைவராக யு.சி. சின்ஹா பதவி வகித்தார். தற்போது அவர் அதானி குழுமத்தின் ஊடக நிறுனமான என்டிடிவியின் அலுவல் தலைவராக அவர் நியமிக்கப்பட்டுள்ள ஆதாரமே இதற்குப் போதுமானது.

கடந்த 2014 ஆம் ஆண்டிலேயே அதானி குழும முறைகேட்டை விசாரிக்கக் கோரி செபிக்கு ஒன்றிய வருவாய் புலனாய்வுத்துறை (DRI) கடிதம் எழுதியுள்ளது. பல ஆயிரம் கோடி ரூபாய் பணத்தை மொரீசியஸ் நாட்டுக்கு முதலில் அனுப்பிய அதானி, அங்கிருந்து மீண்டும் இந்திய பங்குச் சந்தைகளில் அதானி குழுமத்தில் முதலீடு செய்திருப்பதை அம்பலப்படுத்தியது. மொரீசியஸ் முதலீட்டால் அதானி குழும நிறுவனப் பங்குகள் விலை அதிகரித்தவுடன் அவற்றை விற்று லாபம் பார்த்துள்ளனர். அதானி குழுமத்தின் இந்த முறைகேடுகள் குறித்து விசாரிக்கக்கோரி 2014ல் செபிக்கு வருவாய் புலனாய்வுத்துறை எழுதிய கடிதத்திற்கு செபி எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், உச்சநீதிமன்ற ஆணையின்படி அதானி குழுமத்தின் பங்கு வர்த்தக மோசடி குறித்து செபி விசாரித்து அளிக்கப்போகிற விசாரணை அறிக்கை எப்படி இருக்கப் போகிறது என்பதை இப்போதே அறிந்துகொள்ளலாம். ஹின்டன்பர்க் அறிக்கைக்கு பின் கள்ள மௌனம் சாதித்த வந்த மோடி அமித்ஷா கும்பல், தற்போது ஓசிசிஆர்பி அறிக்கை வந்தவுடன் வெலவெலத்துப் போயுள்ளது. இந்தியாவின் ஜி20 மாநாடு நடக்கவுள்ள நேரத்தில் மோடி அரசின் இந்த கார்ப்பரேட் ஆதரவு ஊழல் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

அதானியின் பங்கு வர்த்தக ஊழல் குறித்த ஓசிசிஆர்பி அறிக்கை:

ஓசிசிஆர்பி (OCCRP - Organized Crime and Corruption Reporting Project) என்பது கார்ப்பரேட் நிறுவனங்களின் ஊழல்களை ஆய்வு செய்து அம்பலப்படுத்துகிற புலனாய்வு அமைப்பாகும். இந்த அமைப்பில் பல நாடுகளை சேர்ந்த ஊடகவியலாளர்கள் பணியாற்றுகின்றனர். 2006 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த அமைப்பானது இதுவரை பல லட்சம் கோடி ரூபாய் ஊழல் முறைகேடுகளை அம்பலப்படுத்தியுள்ளது. இந்த அமைப்பின் அறிக்கைகளால் பல முன்னணி நிறுவனங்களின் தொழிலதிபர்கள், அதிகாரிகள் வழக்குகளில் சிக்கி தண்டனைகளும் பெற்றுள்ளனர். இந்த அமைப்பு கடந்த ஆகஸ்ட் 31 அன்று இங்கிலாந்தில் இருந்து வெளிவருகிற 'தி கார்டியன்' மற்றும் 'பைனான்சியல் டைம்ஸ்' பத்திரிக்கைகளில் அதானி குழுமத்தின் பங்குச்சந்தை மற்றும் வரி ஏய்ப்பு முறைகேடுகளை அம்பலப்படுத்தி அறிக்கை வெளியிட்டது. இந்த அறிக்கை வந்தபின் பங்குச்சந்தையில் அதானி குழுமத்தின் பங்குகள் சுமார் ரூ.35,200 கோடி ரூபாய் சரிவு ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த அறிக்கையின் சாரம் வருமாறு

இந்தியா ஃபோகஸ் ஃபண்ட் (EIFF), ஈஎம் ரிசர்ஜிங் ஃபண்ட் (EMRF) மற்றும் குளோபல் ஆப்பர்சுனிட்டிஸ் ஃபண்ட் (GOF) மூலம் கடந்த ஜூன் 2012 முதல் ஆகஸ்ட் 2014 வரை 1.4 மில்லியன் டாலர் தொகை "சம்பளமாக" பெறப்பட்டுள்ளது.

மேற்கூறிய அறிக்கையின் படி, எமர்ஜிங் இந்தியா ஃபோகஸ் ஃபண்ட் (EIFF), ஈஎம் ரிசர்ஜிங் ஃபண்ட் (ணிவிஸிதி) மற்றும் குளோபல் ஆப்பர்சுனிட்டிஸ் ஃபண்ட் (GOF) போன்ற நிதி நிறுவனங்கள் ஷெல் நிறுவனங்களாக செயல்பட்டிருக்கின்றன. இந்த ஷெல் நிறுவனங்கள் மூலமாக அதானி குழும நிறுவனங்களில் கௌதம் அதானியின் சகோதரர் வினோத் அதானி கோடிக்கணக்கான ரூபாய் பணத்தை முதலீடு செய்கிறார். அதாவது, உண்மையாக எந்தவொரு தொழில் நடவடிக்கையிலும் ஈடுபடாமல் ஷெல் நிறுவனங்கள் மூலமாக அதானி குழும பங்குகளின் விலைகள் செயற்கையாக அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளன. இவ்வாறு மோசடியாக பங்கு வர்த்தக சந்தையில் லாபம் பார்த்து வந்த அதானி குழுமத்தினர், பங்கு பத்திர ஒப்பந்தங்கள் (ஒழுங்குமுறை) விதிகள் 1957 இன் விதி 19கி க்கு

இந்திய கார்ப்பரேட் குழுமங்களும் ஊழல் முறைகேடுகளும்:

அதானி குழுமத்தின் பங்கு வர்த்தக ஊழல் விவகாரமானது கடல் பரப்பின் மேலே தெரிகிற பனிப்பாறையின் ஒரு பகுதிதான். அதானி குழுமத்தின் ஊழலும், முறைகேடும், பொதுப்பணத்தை சூறையாடுவதும் அரசியல் வாதிகளுடன் இணக்கமாக இருந்து கொண்டு அதனது வர்த்தக நலனைக் காப்பதும் முதலாளித்துவம் அமைப்பின் பொதுப் பண்பாகும்.

1990 களில் இந்தியாவின் சந்தையை உலகமயம், தாராளமயம், தனியார் மயத்திற்கு திறந்துவிட்ட நிகழ்வானது, அடுத்த முப்பது ஆண்டுகளில் இந்தியாவில் ஏகபோக பெரு நிறுவனங்களின் வளர்ச்சிக்கு வித்திட்டது. இந்தியாவின் பொருளாதாரம் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில ஏகபோக கார்பரேட் முதலாளிகளின் கட்டுப்பாட்டிற்குள் சென்று விட்டதன் சிறு தெறிப்பே அதானி குழுமத்தின் முறைகேடு நிகழ்வு. உலகப் பொருளாதாரத்தின் ஒரு பகுதியாக சந்தையை பங்குபோட்டுக் கொழுக்கிற ஒரு சில ஏகபோக கார்ப்பரேட் தொழில் அதிபர்களிடம் நாட்டு மக்கள் அடமானம் வைக்கப்பட்ட நிகழ்வின் ஒரு வெளிப்பாடுதான் இது.

அதேநேரத்தில் ஆளும் வர்க்க





2013 முதல் 2018 ஆம் ஆண்டு வரை வரி விலக்கு சலுகை நாடான மொரிஷிய சிலிருந்து எமர்ஜிங் இந்தியா ஃபோகஸ் ஃபண்ட் (EIFF) மற்றும் ஈஎம் ரிசர்ஜிங் ஃபண்ட் (EMRF) ஆகிய இரண்டு நிதியங்கள் மூலம் அதானி குழுமத்திற்கு பல நூறுகோடி ரூபாய் முதலீடு வந்துள்ளது. இந்த முதலீட்டை முன்வைத்து பங்குச்சந்தையில் அதானி குழுமத்தின் பங்குகளின் விலை செயற்கையாக அதிகரித்துக் காட்டப்பட்டு வர்த்தகம் செய்து லாபம் ஈட்டியது.

இந்த இரு நிறுவனங்கள் மூலமாக ஐக்கிய அரபு நாட்டைச் சேர்ந்த நசீர் அலி ஷபானா அஹ்லி மற்றும் தைவான் நாட்டை சேர்ந்த சாங் சுங் லியுங் ஆகிய இரு வெளிநாட்டினர் அதானி குழும நிறுவனங்களில் பல கோடி ரூபாய் பணத்தை முதலீடு செய்துள்ளனர்.

பெர்முடாவிலிருந்து குளோபல் ஆப்பர்சுனிட்டிஸ் என்ற நிதியகத்தின் மூலம் இந்தப் பணத்தை நசீர் அலி ஷபானா அஹ்லியும் சாங் சுங் லியுங்கும் அதானி குழுமத்திற்கு பணத்தை மாற்றியுள்ளனர். கடந்த 2017 ஜனவரி வரை, இந்த இரு வெளிநாட்டினரும் அதானி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தில் 3.4 விழுக்காடு பங்குகளும் அதானி பவர் நிறுவனத்தில் 4 விழுக்காடு பங்குகளும் அதானி டிரான்ஸ்மிஷன் நிறுவனத்தில் 3.6 விழுக்காடு பங்குகளும் வைத்திருந்தனர்.

அதானி குழுமத்தின் தலைவரான கௌதம் அதானியின் சகோதரர் வினோத் அதானி. இவர் அதானி ப்ரோமோட்டர் குழுமத்தின் உறுப்பினராக உள்ளார். ஐக்கிய அரபு அமீரகத்தில் எக்ஸல் இன்வெஸ்ட்மென்ட் அண்ட் அட்வைசரி சர்வீசஸ் லிமிடெட் (Excel Investment and Advisory Services Ltd) என்ற நிறுவனத்தை ரகசியமாக நடத்தி வருகிறார். இந்த நிறுவனத்திற்கு எமர்ஜிங்

புறம்பாக 78 சதவீதத்திற்கும் அதிகமான பங்குகளை வைத்திருந்தனர். பங்கு பத்திர ஒப்பந்தங்கள் (ஒழுங்குமுறை) விதியின்படி, பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள ஒவ்வொரு நிறுவனமும், 25 விழுக்காடு பங்குகளை பொதுப் பங்குகளாக வைத்திருக்க வேண்டும். ஆனால் இதற்குப் புறம்பாக சுமார் 20 விழுக்காடு பங்குகளை மட்டுமே பொதுப் பங்குகளாக அதானி வைத்துள்ளதும் அம்பலமாகியுள்ளது.

இந்த ஊழல் குறித்து பேசிய காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல் காந்தி "மோடியின் நண்பரான அதானி குழுமத்தின் ஊழல்கள் பற்றி சர்வதேச நாளிதழ்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்தச் செய்தி இந்தியாவுக்கு வரும் முதலீடுகளை பாதிக்கக்கூடிய ஒன்றாகும். அதானி விவகாரம் குறித்து பிரதமர் மோடி விளக்கம் அளிக்க வேண்டும். இந்திய நிறுவனங்களில் வெளிநாட்டினர் முதலீடு செய்வதை அனுமதித்தது யார்? அதானி விவகாரத்தில் பிரதமர் தொடர்ந்து மௌனம் காப்பது ஏன்? அதானி மீதான குற்றச்சாட்டுகளை சிபிஐ, அமலாக்கத்துறை விசாரிக்காதது ஏன்? அதானி விவகாரம் குறித்து நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரிக்க வேண்டும். ஊடகங்களில் வெளியான செய்தி நாட்டில் மிகப்பெரிய ஊழல் நடைபெற்றுள்ளதை வெளிக்காட்டியுள்ளது. அதானியால் இந்தியாவில் உள்ள எதையும் எளிதாக வாங்க முடியும். இது எப்படி சாத்தியம்?." என சரமாரியாக கேள்விக் கணைகளைத் தொடுத்தார்.

ஆனால் வழக்கம்போல ஒன்றிய மோடி அரசோ சனாதனம், இந்தியாவை பாரத் என பெயர் மாற்றுவது என தனது ஊழல் ஆதரவு முறைகேடுகளை இந்துத்துவ அரசியலால் மடைமாற்றம் செய்துகொண்டுள்ளது.

கட்சிகளுடன் உறுதியான சார்புநிலை எடுக்கிற சில கார்ப்பரேட்கள் தங்களது தொழில்வளர்ச்சியை பெருக்கிக்கொள்வதற்கு அரசியல் அதிகாரத்தில் உள்ள ஆளும் வர்க்க கட்சிக்கு சாமரம் வீசத் தயங்குவதில்லை. குஜராத் மாநில முதலமைச்சராக இருந்த காலம் தொட்டே பிரதமர் மோடி மற்றும் அமித்ஷாவுடன் நெருக்கமாக வலம் வந்து, மாநிலத்தின் முக்கிய வர்த்தக ஒப்பந்தங்களை கைப்பற்றி வளர்ந்த அதானி, நரேந்திர மோடி பிரதமரானவுடன் அபார வளர்ச்சி பெற்றது தற்செயலானது அல்ல. நாட்டின் துறைமுகங்கள், விமான நிலையங்கள், சுரங்கங்கள், மின் உற்பத்தி நிலையங்கள் போன்றவற்றை தனியார் மயப்படுத்தி அதானியிடம் கொடுப்பது, வெளிநாட்டில் அதானி தொழில் வளர்ச்சியை உறுதிப்படுத்த ஒப்பந்தம் போடுவது என அதானிக்காக நாட்டின் பொருளாதாரக் கொள்கையையே மாற்றியது மோடி அமித்ஷா கும்பலாட்சி. உள்நாட்டில் ஆளும்கட்சியின் அரசியல் ஆதரவுடன் பெரும் ஏகபோக கார்ப்பரேட் சக்தியாக வளர்ந்த அதானி, வெளிநாடுகளில் தனது முதலீடுகளை விரிவாக்கிக் கொண்டிருக்கிற நிலையில்தான் கார்ப்பரேட்களுக்கு இடையிலான சந்தை முரண்பாடுகளில் அதானியின் ஊழல் முகம் அம்பலமாகி வருகிறது.

இதன் மூலம் மோடி அமித்ஷா கும்பலும் ஒன்றிய பாஜக அரசும் அதானி குழுமத்தின் வீக்கத்திற்கு (வளர்ச்சிக்கு) எப்படி ஒத்துழைத்து வந்துள்ளன என்பதும் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. பிரதமர் மோடியின் ஊழல் எதிர்ப்பு வேடங்கள் அனைத்தும் கலைந்து, வரலாறு காணாத ஊழலில் ஈடுபட்டிருப்பதும் அம்பலமாகி இருக்கிறது.

தொடர்புக்கு: 9842391963

# சனாதானத்துக்கு எதிரான சங்கநாதம்!



த.லெனின்

**சனாதனத்தை ஒழிப்போம் என்ற தமிழ்நாடு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சால் தம்முடைய மத உணர்வுகள் புண்படுத்தப்பட்டுவிட்டதாகவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று டெல்லி போலீசில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது.**

சனாதனம் குறித்து தவறாகப் பேசிய தமிழக அமைச்சர் உதயநிதி மீது நடவடிக்கை எடுத்தத் தவறிய தமிழக அரசு மீது தாமாக முன்வந்து அவமதிப்பு வழக்கு தொடர வேண்டும்'' என்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சந்திர சூட்டுக்கு, உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதிகள், அரசு அதிகாரிகள், ஆயுதப்படை ஊழியர்கள் உள்ளிட்ட 260 க்கும் மேற்பட்டோர் கூட்டாக கடிதம் எழுதியுள்ளனர்.

கடிதத்தில், ''பொதுவெளியில் சனாதன தர்மம் பற்றிய அவதூறாக பேசியது வெறுப்பு பேச்சுக்கு சமம்.அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறியிருக்கிறது

ஒரு வெறி பிடித்த வட இந்திய சாமியார் உதயநிதி தலைக்கு 10 கோடி விலை நிர்ணயம் செய்து ஒரு கலவரத்திற்கு வித்திட்டுள்ளார் அதற்கு பதில் அளித்த உதயநிதி என் தலையை சீவ பத்து ரூபாய் சீப்பு போதும் என்று நகைச்சுவையாக அதனை கடந்து விட்டார். அத்தோடு தான் சொன்ன கருத்தில் இப்போதும் உறுதியாக இருப்பதாகவும் எப்போதும் அதையே வலியுறுத்துவேன் என்றும் உறுதிபட சொல்லிவிட்டார்.

ஆனால் இவை அனைத்தும் உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் வடிகட்டிய பொறுப்பற்ற வெறுப்பு பேச்சால்தான் விளைந்தது. மாறாக இந்து சமூகத்தில் இன்று வரை பீடித்து இருக்கிற சாதிய ஒடுக்குமுறைதான் சனாதனம் என்பது

**வள்ளுவர் செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள் உள்ளுவரோர மனுவாதி ஒரு குலத்துக்கொரு நீதி** என்றார் பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை.

**சூத்திரனுக்கு ஒரு நீதி தண்டச்**
**சோறுண்ணும் பார்க்குக்கு வேறொரு நீதி**
**சாத்திரம் சொல்லிடு மாயின் அது சாத்திரமன்று**
**சதி என்று கண்டோம்!**

பாரதியின் கவி முழக்கம் இந்து மதத்திற்குள் மக்களை பிரிவினை செய்யும் சாதி முறைக்கு எதிரான ஒன்றாகத்தான் எழுந்தது.

சனாதன தர்மம் என்றால் நிலையான தர்மம் (Eternal Law)என்று பொருள் இது வேதங்களில் இல்லை மனுஸ்மிருதி பாகவத புராணம் பகவத் கீதை ஆகியவற்றில்தான் இது குறிப்பிடப்படுகிறது.

சனாதன மதம்தான் இந்து மதம் என்று சொல்லப்படுகிறது அதாவது சாதி முறை இன்றி இந்து மதம் இல்லை. சனாதனத்தை ஒழிக்காமல் சமத்துவத்தை சமூக நீதியை எட்ட முடியாது.

இந்து என்ற பாரசீகச் சொல்லுக்கு மாற்றாகதான் சனாதன் தர்மம் வழக்கம் பூர்வீக மொழி சொல்லாக வந்தது.

இந்து மதத்திற்கு உள்ளேயே சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக ஆரிய சமாஜ் தோற்றுவிக்கப்பட்டது அது பிராமணர்களின் மேலாண்மையை கேள்விக்குள்ளாக்கியது உருவ வழிபாட்டை ஏற்க முடியாது என்றது. அத்துடன் சாதி பிரிவினைகளுக்கு எதிராகவும் அது கருத்துக்களை முன்வைத்தது. எனவே இதிலிருந்து பிற்போக்கு இந்து மதவாதிகள் தங்களை காத்துக் கொள்ளவே சனாதன தர்மிகள் என்று தங்களை அழைத்துக் கொள்ள ஆரம்பித்தனர். 1891 ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பில் இப்படியே தங்களை பதிவு செய்து கொண்டனர் என்பது வரலாறு.

இந்த சனாதான தர்மம் குறித்து சங்கரமட சந்திரசேகர சரஸ்வதி தனது தெய்வத்தின் குரல் முதல் பகுதியில் வர்ண தர்மம் என்ற கட்டுரையில் சனாதன தர்மத்தின் முக்கிய அம்சமே வர்ண தர்மம்தான் என்றும், சனாதன தர்மத்தை ஊதி ஊதி எல்லோரிடமும் பரவச் செய்யலாம் என்பது என்னுடைய பேராசை.

நமது சனாதான மதத்தில் மற்ற மதங்களில் எதிலும் இல்லாத வர்ண தருமம் இருப்பதால் இது அவசியம் இல்லை என்று எடுத்து போட்டுவிட்டு நம் மதத்தை மற்றவை மாதிரி ஆக்கிவிட வேண்டும் என சீர்திருத்தக்காரர்கள் சொல்கிறார்கள்

நவீன யுகத்தில் சமத்துவம் என்று சொல்லப்படுவதை விட சிலாக்கியமாக சமூகத்தில் ரொம்பவும் சேமம் விளைவிப்பதாக பழைய வர்ண தருமத்தில் எதுவோ இருந்திருக்க வேண்டும் என்று தானே ஏற்படுகிறது அதனால் தான் சமூகத்தை பலவாராக பாகுபாடு செய்திருக்கிற நமது மதம் ஒன்று மட்டுமே இத்தனை எதிர்ப்புகள் இருந்தும் விட மாட்டேன் என்று இன்று வரைக்கும் உயிரை கையில் பிடித்துக் கொண்டு இருக்கிறது.

அதாவது மக்களை நான்காக பிரித்து ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தர்மம் என்று இருப்பதே வர்ணதர்மம் என்றும் அந்த வர்ண தர்மமே சனாதான தர்மம் என்றும் இதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆக மக்களை பிறப்பின் அடிப்படையில் பிரித்து சாதிய நுகத்தடியில் வன்கொடுமைக்கு இலக்காக்கியும் பிராமணர்களுக்கு சலுகைகளையும் முதன்மையும் அளித்துவிட்டு மற்றவர்களுக்கு அநீதியை மட்டும் வழங்குவதுதான் இந்து சமூக ஏற்பாடாக அமைந்திருப்பதை நன்கு உணரமுடியும்.

அதனால்தான் விவேகானந்தர் இந்து மதத்தின் நிலவும் சாதி முறைக்கு எதிராக தொடர்ந்து குரல் எழுப்பினார். சூத்திர ஆட்சி எழ வேண்டும் என்று தொடர்ந்து கருத்துக்களை முன்வைத்தார். 1893 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20 ஆம் நாள் அவரது சீடர் அலசிங்கவுக்கு அமெரிக்கவில் இருந்து எழுதிய கடிதத்தில் புத்தபெருமான் போதித்த சமத்துவம் மற்றும் சமூக உயர்வு பற்றிய நடைமுறை நற்செய்தியை வலியுறுத்தி இந்து மதத்தை குற்றம் கூறி இருந்தார். இந்து மதம் போன்ற, பூமியில் எந்த மதமும் இந்து மதம் போன்று ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களின் கழுத்தில் ஏறி மிதிக்கவில்லை என்று குறிப்பிட்டு இருந்தார்.

அண்ணல் அம்பேத்கர் இந்து மதத்தில் புரையோடி கிடந்த இந்த சாதி முறைக்கு எதிராகத் தான் தொடர்ந்து போர்க் குரலிட்டார் அத்தோடு சனாதன தர்மம் ஒரு தொற்று நோய் என்று அவர் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். இறுதியில் இனி இந்த இந்து மதத்தில் இருக்க மாட்டேன் என்று கூறி பல லட்சம் பேருடன் பௌத்த மதம் தழுவினார்.

ஆக புரையோடிய இந்த புண்ணுக்கு சிகிச்சை செய்ய சித்தமாய் இருந்தவர்கள்தான் இந்து மதத்திற்குள் பல சீர்திருத்தங்களுக்கு வித்திட்ட ஞானிகளாக இருந்திருக்கின்றார்கள். ஆனால் அதை அப்படியே பாதுகாக்க வேண்டும் என்று சொல்லக்கூடியவர்கள்தான் பாஜக வகையறா இந்துத்துவவாதிகள் ஆவார்.

சதுர் வர்ணம் மயா ஸ்ருஷ்டம்! என கீதையில் நான்கு வர்ணத்தை நானே படைத்தேன் என்று சாட்சாத் கிருஷ்ண பரமாத்மாவே சொல்லிவிட்டார் என்று கூறி அதன் மீது எந்த கேள்வியும் எழக்கூடாது என்று எழுதி வைத்துக் கொண்டார்கள். பிராமணன் பிறவி சிறப்பாளன் மதிக்கத்தக்கவன் மனிதரில் உயர்ந்தவன் தேவ மந்திரமே அவன் உயர்வுக்கு காரணம். எனவே அவன் முடிவு படி நடக்க வேண்டும் என்று மனுதர்மம் போதிக்கிறது.

வைதீகமாயிருந்தாலும் லவ்கீகமாயிருந்தாலும் அக்னியானது எப்படி மேலான தெய்வமாகவே இருக்கிறதோ அப்படியே பிராமணன் ஞானியாக இருந்தாலும் மூடனாய்இருந்தாலும் அவனே மேலானவன் எனவும் போதிக்கிறது. அத்தோடு பத்து வயது உள்ள பிராமணனையும் நூறு வயதுள்ள சத்திரியனையும் தகப்பன் பிள்ளையாக அறிய வேண்டியது பிராமணன் தகப்பன் மரியாதையையும் சத்ரியன் புத்திர மரியாதையும் வைக்க வேண்டியது என்றும் பிராமணன் இழி தொழிலினனாகவே இருக்கட்டும் அப்போதும் அவன் வழிபடத்தக்கவன். சூத்திரன் உயரிய நற்குணங்களே உருவெடுத்தவன் ஆயினும் சரி அவனை வழிபடலாகாது . கன்று போட்ட பசு ஒன்று துஷ்டதனம் பண்ணுகிறது குட்டி போட்ட கழுதை ஒன்று சாதுவாக வீட்டில் இருக்கிறது.

இவ்விரண்டில் அறிஞர் பசுவை விட்டுவிட்டு கழுதை பாலை கறந்து கிரகிப்பார்களா?என்றும் இந்த பிறப்பின் அடிப்படையில் பேதமையை மனு நியாயப்படுத்துகிறார்.

அத்தோடு பிராமண குலத்தில் பிறந்த பெண்களைக்கூட மனுவிட்டுவைக்கவில்லை மாதர்களின் சாபமே மனிதர்களுக்கு சிருங்காரசேஷ்டைகளினால் தோஷத்தை உண்டு பண்ணும். தாய் தங்கை பெண் இவர்களுடன் தனித்தனியாய் ஒன்றாக உட்காரக்கூடாது மாதர்களின் கற்பு நிலைமையும் நிலையா மனமும் நண்பின்மையும் இயற்கையாக உடையவர்கள் மாதர்கள் பெரும்பாலும் விபச்சார தோஷம் உள்ளவர்கள் என்று அனேக சுருதிகளிலும் சாஸ்திரங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றன என்று அவற்றையும் துணைக்கு அழைத்து பெண் அடிமைத்தனத்தை வலுப்படுத்துவதே மனு தர்மம்.

அதுதான் வருண தர்மத்தின் சட்ட கோட்பாடு எனவே இந்துச் சமூகத்தில் சாதியில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் ஏழை பணக்காரன் ஆண் பெண் என்ற பாகுபாடுகளின் தொடர்ச்சியே அதன் பண்பாட்டுக் கருவூலம் என்றால் புண்பட்டு நிற்கிற கோடான கோடி உழைக்கும் மக்கள் இதற்கு எதிராக போர்க் குரல் எழுப்பாமல் அப்படியே அடிமைச்சகதியில் ஊழல்வதுதான் அவர்களுக்கு விதிக்கப்பட்ட கடமையா?என்ற கேள்வி எழுப்பி பல நூறு ஆண்டுகளாக இந்து மத கொடுங்கோன்மையை தொடர்ந்து எதிர்த்து போராடி வருகின்றனர்

எனவே இன்று அவர்கள் உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராக பேய் கூச்சலிடுவது தொடர்கிறது. ஏனெனில் மோடிக்கு எதிராக இந்தியா கூட்டணி அமைந்த உடன் எதையாவது பிடித்துக் கொண்டு மக்களின் உணர்வுகளை தன்மயப்படுத்தும் முயற்சிக்கு இவையெல்லாம் உதவும் என்று தவறான கணக்கு போடுகின்றனர் என்பது தான் உண்மை. ஆனால் மக்கள் பல அனுபவங்களை கொண்டவர்கள் தங்களின் சொந்த சுயமரியாதையை காப்பாற்றும் எந்த போராட்டத்திற்கும் எப்போதும் ஒத்துழைப்பு நல்கி உள்ளனர். அந்த வகையில் 21 ஆம் நூற்றாண்டில் இன்றும் மக்களிடையே பாகுபாடு காட்டும் மனு தர்மத்துக்கு எதிரான போராட்டம் தேவையாக இருக்கிறது. அந்த தேவையை உணர்ந்து சமூக சமத்துவத்தை படைக்க மதவெறி, சாதி வெறிக்கு எதிரான போராட்டம் தொடரட்டும்! அது இந்தியாவெங்கும் பற்றி பரவட்டும்! அநீதியை எதிர்க்கும் தீயாக அது பிரவாகம் எடுக்கட்டும்! சனாதானத்திற்கு எதிரான சங்க நாதம் ஓங்கி ஓங்கி ஒலிக்கட்டும்!

தொடர்புக்கு: 9444481703



1ம் பக்கத் தொடர்ச்சி

(ஐயுஎம்எல்), 18. ஜோஸ் கே.மணி (கேசிஎம்) ஆகி யோர் இணைக்கப்பட்டனர்.

### சமூக ஊடகங்களுக்கான பணிக்குழு

சமூக ஊடகங்களுக்கான பணிக் குழுவில், 1. டாக்டர் பாலசந்திரன் காங்கோ (சிபிஐ), 2. சுப்ரியா ஸ்ரீனடே (காங்கி ரஸ்), 3. சுமித் சர்மா (ஆர்ஜேடி), 4. ஆஷிஷ் யாதவ் (சமாஜ்வாதி), 5.ராஜீவ் நிகம் (சமாஜ்வாதி), 6. ராகவ் சத்தா (ஆம் ஆத்மி), 7. அவிந்தானி (ஜேஎம்எம்), 8. இல்திஜா மெகபூபா (பிடிபி), 9. பிரஞ்சால் (சிபிஐஎம்), 10. இப்ரா ஜா (தேசிய மாநாடு), 11. வி. அருண் குமார் (சிபிஐ எம்எல்) ஆகியோர் இணைக் கப்பட்டனர்.

### ஊடகப் பணிக்குழு

ஊடகப் பணிக்குழுவில், 1. டாக்டர் பாலசந்திரன் காங்கோ (சிபிஐ), 2. ஜெய்ராம் ரமேஷ் (காங்கிரஸ்), 3. மனோஜ் ஜா, (ஆர்ஜேடி), 4. அரவிந்த் சாவந்த் (சிவசேனா), 5. ஜிதேந்திர அஹ்வாத் (என்சிபி), 6. ராகவ் சத்தா (ஆம் ஆத்மி), 7. ராஜீவ் ரஞ்சன் (ஜேடியு), 8. பிரஞ்சால் (சிபிஐஎம்), 9. ஆஷிஷ் யாதவ் (சமாஜ்வாதி), 10. சுப்ரியோ பட்டாச்சார்யா (ஜேஎம்எம்), 11. அலோக் குமார் (ஜேஎம்எம்), 12. மணீஷ் குமார் (ஜேடியு), 13. ராஜீவ் நிகம் (சமாஜ்வாதி), 14. தன்வீர் சாதிக் (தேசிய மாநாடு), 15. பிரசாந்த் கண்ணோஜியா, 16. நரேன் சாட்டர்ஜி (பார்வர்ட் பிளாக்), 17. சுசேதா டி (சிபிஐஎம்எல்), 18. மோஹித் பான் (பிடிபி) ஆகியோர் இணைக்கப்பட்டனர்.

### ஆய்வுப் பணிக்குழு

ஆய்வுப் பணிக்குழுவில், 1. அமிதாப் துபே (காங்கிரஸ்), 2. பேரா சிரியர் சுபோத் மேத்தா (ஆர்ஜேடி), 3. பிரியங்கா சதுர்வேதி (சிவசேனா), 4. வந்தனா சவான் (என்சிபி), 5. கே.சி. தியாகி (ஜேடியு), 6. சுதிவ்ய குமார் சோனு (ஜேஎம்எம்), 7. ஜாஸ் மின் ஷா (ஆம் ஆத்மி), 8. அலோக் ரஞ்சன் (சமாஜ்வாதி), 9. இம்ரான் நபி தார் (தேசிய மாநாடு), 10. ஆதித்யா (பிடிபி) ஆகியோர் இணைக்கப்பட்டனர்.

இந்த நான்கு குழுக்களிலும் திரிணாமுல் காங்கிரஸ் சார்பில் தலா ஒருவர் இணைக்கப்படவுள்ள நிலையில், அவர்களின் பெயர்கள் பின்னர் அறிவிக்கப்பட உள்ளன.

# நாடும் மக்களும் வாழ, மோடி

## தொழிலாளர்கள் விவசாயிகளின் அ

**நமது நாட்டின் மிகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மத்திய தொழிற்சங்கங்கள், தொழில்வாரியான கூட்டமைப்புகள், சங்கங்கள் மற்றும் ஐக்கிய விவசாயிகள் முன்னணி (எஸ்கேஎம்) ஆகியவை விடுத்த அழைப்புக்கு இணங்க, தொழிலாளர்கள் விவசாயிகளின் அனைத்திந்திய கூட்டு மாநாடு 2023 ஆகஸ்ட் 24ம் தேதி அன்று புதுடெல்லியில் தல்கத்தோரா ஸ்டேடியத்தில் நடைபெற்றது.**





2014ல் பாஜக ஆட்சிப் பொறுப்பு ஏற்றதிலிருந்து, ஒன்றிய அரசாங்கம் முரட்டுத்தனமாக செயல்படுத்தி வரும், பேரழிவையும்பேராபத்தையும்விளைவிக்கும் கார்ப்பரேட்களுக்கு சாதகமான கொள்கைகளால் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், அனைத்துப் பகுதி சாதாரண மக்களுக்கும் ஏற்பட்டுள்ள கடுமையான வாழ்க்கைச் சூழலைக் கருதி இந்த அழைப்பு விடுக்கப்பட்டது. இந்தக் கொள்கைகள் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், நாட்டுக்கும் விரோதமானவை. இந்தக் கொள்கைகள் நாட்டின் பொருளாதாரத்தையும் மக்களின் ஒற்றுமையும் தேசத்தின் கண்ணியத்தையும் சீர்குலைத்து விட்டன.

இந்த பேரழிவுக் கொள்கைகளில் இருந்து, "மக்களையும் அவர்களது வாழ்வாதாரத்தையும் காப்பாற்ற" கூட்டாகவும், ஒருங்கிணைத்தும் எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முடிவு செய்ய இன்று இந்த மாநாடு கூடி இருக்கிறது.

மத்திய தொழிற்சங்கங்கள், சம்மேளனங்கள், தனிச்சங்கங்கள் ஆகியவற்றின் கூட்டமைப்பு, நாட்டின் செல்வத்தை உழைத்து உருவாக்குகிற அமைப்புசார்ந்த மற்றும் அமைப்பு சாராத அனைத்துப் பகுதி தொழிலாளர்களையும் பிரதிநிதித்துவப் படுத்துவதாகும். அதே போல் ஐக்கிய விவசாயிகள் முன்னணி (சம்யுக்தா கிசான் மோர்ச்சா எஸ்.கே.எம்) நடுத்தர,சிறு,குறு, விளிம்பு நிலை விவசாயிகள் உள்ளிட்ட நாட்டின் பெரும்பான்மை விவசாயிகளின் கூட்டமைப்பாகும்.

### விவசாயிகளின் அனுபவம்

பயிரிடுதல் முதல் சந்தைப்படுத்துதல் வரை தீராத பிரச்சனைகளால் விவசாயிகள் தற்கொலைக்குத் தள்ளப்பட்டனர். வெளிப்படையாக கார்ப்பரேட்டுக்கு ஆதரவான மூன்று வேளாண் சட்டங்கள் நிலைமையை மேலும் கொடூரமாக்கின. அனைத்து பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களும், அரசுக் கிடங்குகளை ஒழித்து விட்டு, தமக்கான கிடங்குகளைக் கட்ட பெருமளவு நிலங்களைக் கையகப்படுத்தத் தொடங்கின.

சம்யுக்த கிசான் மோர்ச்சா என்ற பதாகையின் கீழ் விவசாயிகள், 13 மாதங்களாக டெல்லி எல்லையில் அமர்ந்து, அனைத்து முரண்பாடுகளையும், கடுமையான வானிலையையும், கோவிட் தொற்றுநோயையும், அரசின் அடக்குமுறைகளையும் எதிர்கொண்டு உறுதியான போராட்டத்தை நடத்தினர்.

மிக மோசமான அவதூறுகள் அவர்கள் மீது பொழியப்பட்டன. கூட்டத்துக்குள் காரை ஏற்றிய லக்கிம்பூர் கெரி சம்பவத்தை ஒருபோதும் மறக்க முடியாது. தகர்க்க முடியாத இப்போராட்டத்தின் விளைவாக, கடைசியில் ஒன்றிய அரசு தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அந்த வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெற்றது. ஆனால் விளை பொருட்களுக்கு குறைந்த பட்ச ஆதார விலை, மின்சார திருத்த மசோதாவைக் கைவிடுதல் உள்ளிட்ட, விவசாயிகளுக்கு ஒன்றிய அரசு வழங்கிய எழுத்துப்பூர்வமான உத்தரவாதங்கள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

அரசின் கொள்கைகளால், விவசாயிகளின் கடன் சுமை மேலும், மேலும் அதிகரித்தது. விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவோம் என்ற வாக்குறுதிகள் அனைத்தும் பொய்த்துப் போயின.

போதிய நீர்ப்பாசனம் இல்லாமை, செயல்படாத பயிர்க் காப்பீட்டுத் திட்டம், பொது விநியோகத் திட்டத்தை கைவிடுவதற்காக, நேரடிப் பயன் திட்டம் எனும் போலி ஏற்பாடு ஆகியவற்றால், விவசாயிகளின் துயரங்கள் பன்மடங்காயின. உற்பத்தி மேம்பாட்டில் கணிசமான பங்களிப்பைச் செலுத்தியபோதிலும், விவசாயப் பொருளாதாரம் தொடர்ந்து நெருக்கடிக்குள் ஆட்படுத்தப்பட்டு வருகிறது.

### தொழிலாளர்களின் அனுபவம்

கூடுதலாகிக் கொண்டே செல்லும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும், வேலை இழப்புகளையும் மட்டுமல்லாது அனைத்து அத்தியாவசிய பொருட்களின் விலைகள் கட்டுக்கடங்காமல் உயர்ந்து செல்லுவதையும் தொழிலாளர்கள் எதிர்கொள்கிறார்கள். அவர்கள் கடுமையாகப் போராடி வென்றெடுத்த உரிமைகள் எல்லாம் நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் மூலம் பறிக்கப்படுகின்றன. இதற்கு "எளிதாகத் தொழில் செய்யும் வழிமுறை" என்ற கேடு தரும் முழக்கத்தை ஒன்றிய அரசு முன்வைக்கிறது. நிரந்தரத் தொழிலாளர் எண்ணிக்கை மிக வேகமாக குறைக்கப்படுகிறது.

அவுட்சோர்சிங், பல்வேறு வடிவங்களிலான காண்ட்ராக்ட் முறை, குறிப்பிட்ட கால வேலைவாய்ப்பு (ஃபிக்ஸட் டெர்ம் எம்ப்ளாய்மெண்ட்), ஜிக் வேலை போன்றவை உண்மையான ஊதியத்தில் கடுமையான சரிவை ஏற்படுத்தி உள்ளன. இந்த நிலையே "புதிய இயல்பாக" மாறி வருகிறது.

நாட்டின் விவசாயத்தின் பெரும்பான்மை அங்கமான விவசாயத் தொழிலாளர்கள், முழுமையான வறுமை மற்றும் ஏழ்மை நிலையால் மிக மோசமாக பாதிக்கப்பட்டு, எந்தச் சமூகப் பாதுகாப்பும் அற்று, தமது வாழ்விடங்களை விட்டு விட்டு இடம்பெயர்ந்து நகரங்கள், பெருநகரங்களை நோக்கித் துரத்தப்படுகின்றனர்.

பன்னாட்டு தொழிலாளர் அமைப்பின் (ஐஎல்ஓ) நிறுவன உறுப்பினர்களில் இந்திய அரசும் ஒன்று. ஆனால் இந்தியா ஏற்றுக் கொண்ட ஐஎல்ஓ இணக்கவிதிகளை 2014க்குப் பின் ஒன்றிய அரசு செயலாக்க மறுக்கிறது.

நாளொன்றுக்கு 8 மணி வேலை நேரம் என்பதே ஐஎல்ஓவின் முதல் இணக்கவிதியாகும். ஆனால் ஒன்றிய அரசும், பாஜக ஆளும் மாநில அரசுகளும், வெளிநாட்டு பன்னாட்டு நிறுவனங்களின் அழுத்தத்துக்குப் பணிந்து, 12 மணியாக வேலைநேரத்தை அதிகரித்து வருகின்றன.

144வது இணக்க விதியின்படி, அரசுமுதலாளி தொழிலாளி அரசு பிரதிநிதிகளைக் கொண்ட முத்தரப்புக் கூட்டத்தை வருடத்திற்கு ஒரு முறையாவது கூட்ட வேண்டும். ஆனால், பல முறை நினைவுபடுத்தியும் 2015ம் ஆண்டுக்குப் பிறகு இந்தக் கூட்டத்தை இந்த அரசு கூட்டவேயில்லை

கூட்டத்தைநடத்தி விவாதிக்காமலேயே நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகளும் நிறைவேற்றப்பட்டன. தொழிலாளர்களுக்கான தொழில்சார்ந்த உடல் நலம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று 2023 ஜூன் மாதம் நடைபெற்ற சர்வதேச தொழிலாளர் மாநாட்டில் 189வது இணக்கவிதி ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் மோடி அரசோ, முந்தைய வழக்கமான தொழிற்சாலை ஆய்வுகளைக் கூட நிறுத்தி விட்டது.

பழைய ஓய்வூதியத் திட்டத்தை வலியுறுத்தியும், 1999 முதல் 2004 வரையிலான முந்தைய என். டி. ஏ. அரசால் கொண்டுவரப்பட்ட புதிய தேசிய ஓய்வூதியத் திட்டத்திற்கு எதிராகவும், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பணியாளர்கள் நாடு தழுவிய வகையில் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இதனால் சில மாநில அரசுகள், பழைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் செயல்படுத்திய உள்ளன. ஆனால் ஒன்றிய அரசு "ஓய்வூதியக் குழுக்கள்" அமைத்து பரிசீலிப்பதாகப் போக்குகள் காட்டுகிறது.

### அரசுக் கொள்கைகள்

தனியார்மயமே இந்த அரசின் கொள்கைகளின் மையமாகும். பி. பி. சி. எல்., சி. இ. எல்., ஏர் இந்தியா, பவன் ஹான்ஸ் போன்ற செழிப்பான பொதுத் துறை நிறுவனங்களை, அவர்கள் விரும்பிய வேகத்தில் விற்க முடியவில்லை. எனவே அரசாங்கம் தேசிய பணமாக்கல் திட்டத்தை (நேஷனல் மானிட்டைசேஷன் பைப்லைன்) கொண்டு வந்தது.

மக்கள் பணத்தில் கட்டப்பட்ட பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களின் சொத்துக்களை, பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களிடம் ஒப்படைத்து, எவ்வித முதலீடும் இல்லாமலேயே பொதுத்துறை சொத்துக்களை, அவற்றின் வருமானத்தைக் கொள்ளையிட வழிசெய்தது. விமான நிலையங்கள், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், இரயில் பாதைகள், இரயில் நிலையங்கள் என அனைத்தும் பறிகொடுக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

கல்வி தனியார் மயமாக்கப்படுகிறது. பொதுத்துறை வங்கிகள் இணைக்கப்பட்டு தனியார்மயமாக்க ஆயத்தப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆயுள் காப்பீடு, பொதுக் காப்பீட்டு நிறுவனங்கள் தனியார்மயமாக்கலுக்கு இலக்காகின்றன. ராணுவத்துக்கு ஆயுதங்கள், கருவிகள், உடைகளை உற்பத்தி செய்யும் 41 ஆயுதத் தொழிற்சாலைகள் கூட, 7 கார்ப்பரேஷன்களாக மாற்றப்பட்டு, தனியாருக்குத் தர தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.இந்த தேச விரோத நடவடிக்கையால், 80,000 தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். பாதுகாப்பு, ரயில்வே போன்ற துறைகளுக்குச் சொந்தமான பெரும் பரப்புள்ள நிலங்கள் மீதும் ஒன்றிய அரசு கண் வைத்துள்ளது. அவை மலிவான விலையிலோ அல்லது இலவசமாகவோ, கார்ப்பரேட் பெருமுதலாளிகளுக்குத் தரப்படலாம்.

சுழற்சி அடிப்படையில் இந்தியா பெற்ற ஜி20 தலைவர் பதவியை ஏதோ பிரதமருக்குத் தரப்பட்ட உலக அங்கீகாரம் போல, ஆடம்பரமாகக் காட்சிப்படுத்துவது வேதனை அளிக்கிறது

மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் ஐ.டி.யு.சி.யின் எதிர்ப்பையும் மீறி, எல்20 தலைமையேற்கும் பொறுப்பை, ஆளும் கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கத்துக்கு தன்னிச்சையாக ஒன்றிய அரசு வழங்கியது.

பெரும் பணக்கார கார்ப்பரேட்டுகளுக்கு வரிகளைக் குறைத்து விட்டு, அதிகமான ஜிஎஸ்டி வரி மற்றும் அனைத்து பொது பயன்பாட்டு சேவைகளின் பயனர் கட்டணங்களை உயர்த்தி சாதாரண மக்கள் மீது சுமத்துவதால், அவர்கள் வாழ்க்கை நடத்த முடியாமல் திணறி வருகின்றனர். மத்திய அரசை தவிர மற்ற கட்சிகளால் ஆளப்படும் மாநில அரசுகளுக்குரிய நிதிப் பங்கீட்டைத் தர மறுப்பதால், நூறு நாள் வேலை மற்றும் இதரத் திட்டப் பணியாளர்களுக்கான ஊதிய நிலுவைத் தொகைகள் போன்றவை வழங்கப்படாமல் உள்ளன.

வங்கிக் கடன்களை வேண்டுமென்றே திருப்பிச் செலுத்தாதவர்கள், மோசடி செய்பவர்கள், "பேச்சுவார்த்தை தீர்வுகளுக்கு" அழைக்கப்படுகிறார்கள், அதே நேரத்தில் வைப்புத் தொகையாளர்களுக்கு ரூ.5 லட்சத்திற்கு மட்டுமே காப்பீடு செய்கிறார்கள். கடந்த 9 ஆண்டுகளில் பொதுத்துறை வங்கிகளால் ரூ.14.56 லட்சம் கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது, ஆனால் விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்யவோ அல்லது அவர்களின் விவசாய விளைபொருட்களுக்கு குறைந்த பட்ச ஆதார விலை தரவோ, விவசாய செலவுகளில் 50% கூடுதலாக விலை நிர்ணயிக்கவோ இந்த அரசு தயாராக இல்லை. அதே நேரத்தில் நாட்டின் கடன் ரூ.153 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது

# அரசு வீழ போராடுவோம் வாரீர்

## அனைத்திந்திய கூட்டு மாநாடு பிரகடனம்



### விளைவுகள்

இந்தக் கொள்கைகளின் விளைவாக, மிகப் பெரும்பான்மையான மக்களை வறுமை கவ்விப் பிடித்திருக்கிறது. அதன் ஆழம் அச்சுறுத்தும் அளவுக்கு அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அத்தியாவசிய பொருட்களை கூட வாங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

தேசிய பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள தேக்கம், தொழில் நலிவு, நாட்டின் தொழில்துறையின் அடித்தளம் அழிக்கப்படுவது, சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள் சீரழிக்கப்படுவது, தற்சார்பை இழப்பது போன்றவற்றால், நமது பெரும்பான்மையான மக்களின் மீதான சுமைகளை நாள்தோறும் அதிகரித்து வருகின்றன.

பெரும் கார்ப்பரேட் வர்க்கத்தினர் அபரிமிதமான பெருஞ்செல்வத்தைக் குவிக்கும் போது, உழைக்கும் மக்களோ படுஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்தியாவின் மேல்தட்டில் உள்ள 10% பேருக்கு மொத்த தேசிய வருமானத்தில் முறையே 72 சதத்தொகை போய்விடுகிறது. அதிலும் முதல் ஒரு சதத்தினர் (அதாவது 1.4 கோடிப் பேர்) 40.5% வருமானத்தை அள்ளுகிறார்கள். மற்றும் கீழ் அடுக்கில் உள்ள 50 சதத்தினரின் (70 கோடிப் பேர்) மொத்த வருவாய்ப் பங்கு வெறும் 3%க்கு கீழே போய்விட்டது. பட்டினி, வறுமை, குழந்தைப் பராமரிப்பு, பெண்கள் பாதுகாப்பு, கருத்து சுதந்திரம், மனித உரிமைகள் போன்ற அனைத்து குறியீடுகளிலும் இந்தியா வீழ்ச்சியடைந்து வருகிறது.

நமது குழந்தைகளுக்கு வேலை கிடைக்காதது குறித்து கவலையில் தவிக்கிறோம். அரசுப்பணிகளின் காலி யிடங்கள், அவர்களின் வரம்புக்குள் இருந்தும் நிரப்பப்படாமலேயே உள்ளன

பல பொதுத்துறை நிறுவனங்கள் மூடப்பட்டு வருகின்றன அல்லது தனியாருக்கு விற்கப்படுகின்றன, அவர்கள் உடனடியாக “டௌன் சைசிங்” எனும் பெயரில், பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்களை வெளியே தூக்கி எறிவதால், பல்லாயிரம் தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர். குறிப்பாக, ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலை இழப்பு, ஆட்குறைப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனாவை எதிர்த்துப் போராடுவதற்காக அரசு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்கள், பின்னர் நிரந்தரம் செய்யப்படுவார்கள் என வாக்குறுதியளிக்கப் பட்டிருந்தும், தற்போது வேலையிலிருந்து தூக்கி எறியப்படுகின்றனர். கொரோனாவுக்குப் பிறகு, வாழ்க்கையை மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டு வர அவர்களின் பணி மிகவும் தேவைப்பட்டாலும், இனியும் அதைப் பற்றிக் கவலைப்பட அரசு தயாராக இல்லை.

தொழிற்சாலைகள் தொடர்ந்து மூடப்படுகின்றன. சட்டவிரோதமாகக் மூடுவதற்கும் அரசு அனுமதிக்கிறது, இதன் விளைவாக பெரிய அளவிலான வேலையின்மை ஏற்படுகிறது.

கொரோனா என்ற சாக்கை முன்வைத்து, மூத்த குடிமக்கள், பெண்கள், மாற்றுத் திறனாளிகள், விளையாட்டு வீரர்களுக்கான ரயில்வே சலுகைகள் திரும்பப் பெறப்பட்டன. கிராமப் பொருளாதாரம், விவசாயம், கால்நடை வளர்ப்பு போன்றவை அடிப்படையில் நமது கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்திற்கு பெரும் பங்காற்றுகின்றன. அவற்றுக்கு நிலையான விலையையும், விற்பனைக்கு உத்திரவாதமும் அளிக்காமல், திட்டமிட்ட முறையில் நசுக்கி அழிக்கப் படுகின்றன.

நாட்டின் தொழிலாளர் சந்தையில் முறைசாராத் தன்மை அதிகரித்து வருகிறது. தொழிலாளர்கள், பெரும்பாலும் பெண்கள், சுயதொழில் மற்றும் வீடுகளில் இருந்து வேலை செய்வதன் மூலமே வாழ்வின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

இந்தியாவில் விவசாயத் தொழிலாளர்களில் 33 சதமும், மற்றும் சுயதொழில் செய்வோரில் 48 சதம் பேரும் பெண்களாவர். சுயதொழில் மற்றும் வீட்டிலிருந்தே பணி செய்யும் அவர்களைப் பாதுகாப்பதற்கும் மற்றும் வேலையை ஒழுங்குபடுத்துவதற்கும் எந்த சட்டங்களோ, அரசுக் கொள்கைகளோ இல்லை. புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் நிலையோ இன்னும் மோசம். .

அவர்களது விபரங்களைத் தொகுக்க டிஜிட்டல் வசதிகள் எல்லாம் இருப்பதாக அரசு பேசுகிறது. ஆனால், அவர்களது கைக்கு எட்டும் வகையில் சமூகப் பாதுகாப்பு தரப்படவில்லை. கட்டுமானத் தொழிலில் அதிக நல வரி வசூலிக்கப்பட்டாலும் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அதன் முழுப் பயனும் கிடைப்பது இல்லை.

சமூகப் பாதுகாப்பை மிகவும் பயனுள்ளதாக்க, ஆன்லைன் வழியில் மட்டுமல்லாது, நேரடியாகவும் பதிவு மற்றும் புதுப்பித்துக் கொள்ள கட்டுமானத் தொழிலாளர்களை அனுமதிக்க வேண்டும். மேலும் நல வரியிலிருந்து நிதிப் பங்களிப்பு செய்து இஎஸ்ஐ வசதி தரப்பட வேண்டும் .இஷ்ரம் போர்ட்டலின் கீழ் ஒன்றிய அரசு அமைப்புச் சாரா தொழிலாளர்களை பதிவு செய்துள்ளது தவிர அவர்களுக்கு எந்த சமூகப் பாதுகாப்பும் வழங்கப்படவில்லை.

இந்தத் தொழிலாளர்கள் அனைவரும், சுகாதார வசதி, ஆயுள் மற்றும் ஊனமுற்றோர் காப்பீடு, முதியோர் நலன், மகப்பேறு, குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்விப் பலன்கள் போன்ற அடிப்படை சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைப் பெற தகுதியானவர்கள். மாநில அரசுகள் தொழிலாளர்களின் வேலைத் திறன்களை மேம்படுத்தவும், தொழிலுக்கேற்ற குறிப்பிட்ட திட்டங்களை செயல்படுத்தவும் வேண்டும். இது அமைப்பு சாராத தொழில்களை முறைப்படுத்துவதை உறுதி செய்யும்.

ஆபத்துக்கு ஆளாகும் கூட்டாட்சி முறைமையும் சட்டத்தின் ஆட்சியும்

ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் நமது தேசத்தின் கூட்டாட்சி அமைப்புக்கு எதிரானவை. நியமிக்கப்படும் ஆளுநர்கள், ஒன்றிய ஆளும் கட்சியின் ஏஜெண்டுகளாக வெளிப்படையாக செயல்படுவதால், தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகள் இயங்குவது கடினமாகிறது, தங்கள் சொந்த கட்சி ஆட்சியை நிறுவுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பல மாநில அரசுகள் கவிழ்க்கப் படுகின்றன. மையத்தில் சேகரிக்கப்படும் ஜிஎஸ்டி நிதி மாநில அரசுகளுடன் பகிர்ந்து கொள்ளப்படவில்லை. தங்களுக்கு உரிய நிலுவைத் தொகையைப் பெற உச்ச நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டிய அவலம் நிலவுகிறது.

நாடாளுமன்றத்தில் தனக்குள்ள பெரும்பான்மையைப் பயன்படுத்தி, உச்ச நீதிமன்ற உத்தரவுகளை ரத்து செய்யும் வகையில் ஒன்றிய அரசு சட்டங்களைத் மூர்க்கமான வகையில் திருத்துகிறது. டெல்லி மாநில அரசின் அதிகாரங்களை பற்றிய உச்சநீதிமன்றத் தீர்ப்பை மாற்றி, அதிகாரிகளை நியமிக்கும் பணி வழங்கும் பொறுப்பு மாநில அமைச்சரவைக்கு இல்லை என சட்டம் இயற்றப்பட்டு விட்டது

தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்களை பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோர் கொண்ட குழு தேர்வு செய்யும் என்பதை மாற்றி, உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியை நீக்கிவிட்டு, அவருக்கு பதிலாக பிரதமரே மற்றொரு அமைச்சரை நியமித்துக் கொள்ளலாம் என சட்டம் திருத்தப்பட்டுள்ளது.

இந்திய தண்டனைச் சட்டம், குற்றவியல் சட்டம், இந்திய சாட்சிகள் சட்டம் ஆகியவற்றை, அவை பிரிட்டிஷ் அடிமைக் காலச் சட்டங்களை அகற்றுவதாகப் பெருமை பேசினாலும், உண்மையில் அவற்றை அடிமைக் காலத்தைவிட இன்னும் மோசமானவையாக மாற்றப்படுகின்றன. எல்லை பாதுகாப்பு படையின் அதிகார வரம்பு, நாட்டின் எல்லைக் கோட்டில் இருந்து 5 கிமீ வரை என்று தற்போதுள்ள அளவை, 50 கிமீ என அதிகரிக்கிறார்கள்.

இவை போன்ற மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் விரோதமான, தேசத்துக்கே விரோதமான ஒன்றிய அரசின் நடவடிக்கைகளை, பட்டியலிட்டால் நீண்டு கொண்டே செல்லும்.

### பிளவுபடுத்தும் வகுப்புவாத கொள்கைகள்

இவற்றையெல்லாம் விட மக்களுக்கும் நாட்டுக்கும் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகிற நடவடிக்கைகளை அரசு மேற்கொள்கிறது. ஒன்றிய அரசாங்கமும், பாஜக தலைமையிலான மற்ற மாநில அரசாங்கங்களும், தங்கள் கொள்ளைக்கார ஆட்சிகளை நிலைநிறுத்துவதற்காக, சமூகத்தில் விஷத்தை விட ஆபத்தான வகுப்புவாதத்தை விதைத்து, இரு துருவங்களாகப் பிரித்து மோதவிடுகின்றன.

தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் பொது மக்களை அவர்களது எரியும் பிரச்சனைகளிலிருந்து பிரித்து கவனத்தை திசை திருப்புகின்றனர். தமது நலன்களுக்காக மக்களை ஒன்றுபட்டு போராட விடாமல் தடுத்து, நியாயமான போராட்டங்களைப் பலவீனப் படுத்துகிறார்கள். மக்களின் கோபத்தை மடை மாற்றுவதன் மூலம், கார்ப்பரேட் பெருமுதலாளிகளுக்கு அதீத சுரண்டலுக்கு மேலும் மேலும் வாய்ப்பை அதிகரித்துத் தருவதோடு, பத்திரமாக பாதுகாத்தும் கொடுக்கிறார்கள்.

பெருநிறுவனங்களின் ஆளுகைக்கு உட்பட்ட ஊடகங்கள், காசு கொடுத்து வளர்த்து பராமரிக்கப்படும் சமூக ஊடக போலிப்படைகளின் ஆதரவோடு இந்த தீச் செயல்கள் நடைபெறுகின்றன.

மணிப்பூரில் தொடரும் இனக்கலவரம் பெரும் உயிர் இழப்புகளுக்கும் பெண்கள் மீதான அட்டூழியங்களுக்கும் வழிவகுத்தது,

ஹரியானாவிலும் மற்றும் நாட்டின் பிற பகுதிகளிலும் அண்மைக்காலத்தில் நிகழ்ந்த வகுப்புவாத மோதல்களும், ஆத்திரமூட்டல்களும் மத, இன ரீதியாக மக்களைப் பிளவுபடுத்துவதையே கொள்கையாகக் கொண்ட ஆட்சியால் வடிவமைக்கப்பட்டவை. ம.பி.யில் ஒரு பழங்குடி இளைஞன் மீதும், உ.பி.யில் இரண்டு தலித் சிறுவர்கள் மீதும் சிறுநீர் கழித்ததை அறிவோம். சமூகத்தின் அடி நிலையில் உள்ள தலித் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் மீதான தொடர் அட்டூழியங்கள் தொடர்கின்றன.

சர்வதேச அளவில் புகழ் பெற்ற பெண்கள் மல்யுத்த வீரர்கள், அவர்களை துன்புறுத்திய அன்றைய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவருக்கு எதிராக குரல் எழுப்பியதற்காக அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டனர்.

கர்ப்பிணியான பில்கிஸ் பானுவை கும்பல் பாலியல் வன்முறை செய்து, நீண்டகால சட்டப் போராட்டத்திற்கு பின் நீதிமன்றத்தால் சிறைக்கு அனுப்பப்பட்டவர்கள், முன்கூட்டியே விடுதலை செய்யப்பட்டனர். அவர்களை பாஜக கட்சி ஊர்வலமாக அழைத்து வந்து, தன் அலுவலகத்திலேயே இனிப்புகள் தந்து கொண்டாடியது. சமூகத்தைப் பிளவுபடுத்தும் ஆளும் குழுச் சூழ்ச்சிகளின் மிருகத்தனமான வெளிப்பாடே ஆகும்.

இவை அனைத்தும் சுரண்டலுக்கு எதிரான பொது மக்களின் ஒன்றுபட்ட போராட்டத்தைக் கிழித்து சீர்குலைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

தேசத்தின் கூட்டு மனசாட்சியை அதிர்வுறச் செய்யும் இந்த நிகழ்வுகள் அனைத்துக்கும் பிரதமர் வாயே திறக்காமல் இருப்பது அதிர்ச்சியளிக்கிறது.

மக்களையும், தேசிய பொருளாதாரத்தையும் கொள்ளை யிடுவதை ஊக்குவித்து நிலைநிறுத்தும் முழு நிர்வாக அமைப்பும் அம்பலமாகி நிற்கிறது.

உறுதியான ஒன்றுபட்ட போராட்டத்தால், இந்த ஆளும் குழுவை எதிர்த்து வெல்ல முடியும். சம்யுக்த கிசான் மோர்ச்சாவின் போராட்டத்திற்கு ஈடு இணையேது? அவர்களின் சமரசமற்ற போராட்டத்தால் வேளாண் சட்டங்களை அரசாங்கம் திரும்பப் பெற வேண்டியதாயிற்று.

நமது ஒருங்கிணைந்த போராட்டங்களின் மூலம், பிபிசிஎல், சிஇஎல், சில எஃகு ஆலைகள் போன்ற பல பொதுத்துறை நிறுவனங்களில் தனியார்மயமாக்கல்

செயல்முறை தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. விசாகப்பட்டினம் உருக்காலையை தனியார் மயமாக்கப்படுவதிலிருந்து காப்பாற்ற மக்கள் பெரும் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

மகாராஷ்டிரா, உ.பி., புதுச்சேரி, ஜம்மு காஷ்மீர், சண்டிகர், ஹரியானா ஆகிய மாநிலங்களில் மின்வாரிய ஊழியர்களின் ஒருங்கிணைந்த போராட்டத்தால், அரசுகள் பின்வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தங்களது போர்க்குணமிக்க ஐக்கியப் போராட்டங்களின் மூலம் பல்வேறு மாநிலங்களில் உள்ள திட்டப் பணியாளர்கள் தங்களது ஊதிய உயர்வு உள்ளிட்ட பல கோரிக்கைகளை வென்றெடுத்துள்ளனர்.

மின்சாரத் துறையில் சீர்திருத்தங்கள் என்று அரசாங்கம் முன்மொழிபவை அனைத்தும் மக்களுக்கு எதிரானவை. அவை மானியம் மற்றும் மின்சாரத் துறையில் அரசு வகிக்கும் பங்கை முடிவுக்குக் கொண்டுவருவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. இவை விவசாயம், சிறு, குறு, நடுத்தரத் தொழில்களுக்கு பெரும் அழிவை ஏற்படுத்தும். மின்சார வசதி என்பது மக்களால் எட்டிப் பிடிக்க முடியாததாக, கட்டுப்படியாகாததாக மாற்றி விடும்

## நாம் என்ன செய்ய வேண்டும்?

புதிய தாராளமயக் கொள்கைகளின் கழுத்தை நெரிக்கும் நெருக்கடிகளில் இருந்து தேசியப் பொருளாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும்

தேசிய பொருளாதாரத்தை இயங்க வைக்கும் அளவுக்கு நமது தேசிய செல்வத்தை உருவாக்கிய சாமானியர்களின் கைகளில் அதிக பணம் புழங்குவதற்கான வழிவகை காண வேண்டும். இதற்காக சட்டப்பூர்வ குறைந்தபட்ச ஊதியத்தை அதிகரிக்க வேண்டும். அனைவருக்கும் சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்த வேண்டும்.

விவசாயிகளுக்கு உரிய நிதியுதவியும், விவசாய இடுபொருட்கள் உள்ளிட்டவற்றுக்கு மானியமும், அரசுக்கு சொந்தமான மண்டிகளை உருவாக்கி விவசாயிகளின் பயன்பாட்டுக்கு தருவதும், பொருத்தமான குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயிப்பதும் விவசாய சமூகத்தினரிடையே உள்ள துயரத்தை தீர்க்கத் தேவையான நடவடிக்கைகளாகும்.

கார்ப்பரேட்டுகள், பணக்காரர்கள் மற்றும் பெரும் பணக்காரர்கள் மீதான வரிகளை அதிகரிப்பதன் மூலம், சொத்து வரி மற்றும் வாரிசு வரியை மீட்டெடுப்பதன் மூலம் இதைச் செய்யலாம். நோபல் பரிசு பெற்றவர்கள் கூட இதைத்தான் அறிவுறுத்துகிறார்கள்.

தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், மக்களுக்கும் அவர்களின் உண்மையான எதிரி, அவர்களின் துயரங்களுக்குக் காரணம், கார்ப்பரேட்டுகளால் வடிவமைக்கப்பட்ட தேசவிரோத அழிவு கொள்கைகளை அடி பிறழாது நிறைவேற்றும் ஒன்றிய ஆட்சிதான் என்பதை உணர்த்த வேண்டும். பாஜக அரசு, தனது கார்ப்பரேட் சார்புக் கொள்கைகளை மாற்றிக் கொள்ளும் என்று எதிர்பார்க்க முடியாது. அவர்கள் வெளியேற்றப்பட்டாக வேண்டும்

தொழிலாளர்கள் விவசாயிகளின் ஒன்றுபட்டு, ஒருங்கிணைக்கப் பட்ட வலிமை மிக்க போராட்டங்களை நடத்துவதன் மூலம், தொழிலாளர்கள், விவசாயிகளுக்கு எதிரான கொள்கைகளை எளிதில் செயல்படுத்தி விட முடியாது என ஒன்றிய, மாநில அரசாங்கங்களை உணர வைக்க வேண்டும். தொழிலாளி வர்க்க, விவசாயிகள் இயக்கம் இந்தப் பணியை மக்களுடன் சேர்ந்து, முன்னணியில் இருந்து வழிநடத்த வேண்டும்.

இது ஒரு அற்புதமான அவசர, அவசியப் பணியாகும், இதற்காக நாம் ஒவ்வொருவரும் அயராது உழைக்க வேண்டும். மக்களுக்கு எதிராக கார்ப்பரேட் ஆதரவு ஒன்றிய அரசு எடுத்து வரும் கொள்கை நிலைகளை தடுத்து நிறுத்தி மாற்றி அமைக்க நம்மால் முடியும்.

மத்திய தொழிற்சங்கங்கள், சம்மேளனங்கள், தனிச் சங்கங்களின் கூட்டமைப்பு இதற்கு முன்பு நடத்திய ஒன்றுபட்ட இயக்கங்கள், போராட்டங்களின் அனுபவம் நமக்கு உண்டு. சம்யுக்த கிசான் மோர்ச்சாவின் ஒருங்கிணைந்த இயக்கத்தை வெற்றிகரமாக நடத்திய அனுபவமும் உண்டு. இந்த இயக்கங்களில் ஒருவருக்கொருவர் ஆதரவளித்த கடந்தகால அனுபவங்களை முன்வைத்து, நமது நாட்டின் உழைக்கு மக்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து போராட்டங்களை புதிய உயரங்களுக்கு இட்டுச் செல்லுமாறு இந்த கூட்டு மாநாடு அறைகூவல் விடுக்கிறது.

இந்த 2023 முழுவதும், பிரச்சாரங்கள் மற்றும் போராட்டக் கிளர்ச்சிகளை உயர் மட்டத்தில் நடத்தும் போராட்ட ஆண்டாக அமைய வேண்டும்.




பின்வரும் கோரிக்கைச் சாசனத்தை வலியுறுத்தி, ஒன்றுபட்டு கூட்டாக போராட நாம் உறுதி ஏற்போம்.

### கோரிக்கைச் சாசனம்

- விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்து ! உணவு, மருந்துகள், வேளாண் இடுபொருட்கள் மற்றும் இயந்திரங்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் மீதான ஜிஎஸ்டியை நீக்கு !! பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் சமையல் எரிவாயு மீதான மத்திய கலால் வரியை கணிசமாகக் குறைத்திடு !!!
- மூத்த குடிமக்கள், பெண்கள், மாற்றுத் திறனாளிகள், விளையாட்டு வீரர்களுக்கு, கொரோனா என்ற சாக்குப்போக்கில் பறிக்கப்பட்ட ரயில்வே சலுகைகளைத் திரும்ப வழங்கு !
- உணவுப் பாதுகாப்பிற்கு உத்திரவாதம் அளித்திடு ! பொது விநியோக முறையை விரிவாக் கி செயல்படுத்து !
- இலவச கல்வி, சுகாதாரம், தண்ணீர் மற்றும் உடல்நல உரிமை அனைவருக்கும் வழங்குவதை உறுதிப்படுத்து ! தேசியக் கல்விக் கொள்கை, 2020ஐ ரத்து செய் !
- அனைவருக்கும் வீடு வழங்கப்படுவதை உறுதி செய் !
- வன உரிமைச் சட்டத்தை (திஸிகி) கறாராகச் செயல்படுத்து ! வனங்களை அழிப்பதை அனுமதிக்கும், வன (பாதுகாப்பு) சட்டம், 2023க்கான திருத்தங்களைத் திரும்பப் பெறு !!
- உழுபவருக்கே நிலம் சொந்தம் என்பதை உறுதிப்படுத்து !
- தேசிய குறைந்தபட்ச ஊதியம், மாதத்திற்கு ரூ.26,000/ என நிர்ணயம் செய் !
- இந்திய தொழிலாளர் மாநாட்டை மேலும் காலம் தாழ்த்தாமல் உடனே நடத்து ! குறிப்பிட்ட கால இடைவெளியில் தொடர்ந்து நடத்தப்படுவதை உறுதி செய் !!
- பொதுத்துறை நிறுவனங்கள், அரசு துறைகளை தனியார் மயமாக்குவதை உடனே நிறுத்து ! தேசிய பணமாக்கல் திட்டத்தை ரத்து செய் !! கனிமங்கள் மற்றும் உலோகங்கள் சுரங்கம் தொடர்பான தற்போதைய சட்டத்தில் திருத்தம் செய்து, நிலக்கரி உள்ளிட்ட சுரங்கங்களில் இருந்து கிடைக்கும் லாபத்தில் 50% பங்கு, உள்ளூர் சமூகங்கள், குறிப்பாக ஆதிவாசிகள் மற்றும் விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்படுவதை உறுதி செய் !
- மின்சாரம் (திருத்த) மசோதா, 2022ஐ திரும்பப் பெறு ! முன்பணம் செலுத்தும் வகையில் ஸ்மார்ட் மீட்டர்களைப் பொருத்தாதே !!.
- வேலை செய்வதற்கான உரிமையை அடிப்படையாக்கு ! அனுமதிக்கப்பட்ட பணியிடங்களை நிரப்பி வேலை யில்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கு !!

  மகாத்மா காந்தி கிராமப்புற வேலை உறுதி சட்டத்தின்படி, ஆண்டுக்கு 200 நாட்கள் வேலை மற்றும் நாளொன்றுக்கு ரூ.600/ ஊதியம் வழங்கும் வகையில் திட்டத்தை விரிவாக்கி செயல்படுத்து ! நகர்ப்புறத்துக்கும் இந்தச் சட்டம் பொருந்தும் வகையில் மாற்றி அமைத்து அமலாக்கு !!
- விவசாயிகளுக்கு விதை, உரம் மற்றும் மின்சாரத்திற்கான மானியத்தை அதிகரித்திடு !, விவசாயிகளின் விளைபொருட்களை கொள்முதல் செய்யப்படுவதை உறுதிப்படுத்தி, விவசாயச் செலவை போல் 50% அதிக விலையும், குறைந்தபட்ச ஆதார விலையும் வழங்கிட சட்டபூர்வ உத்தரவாதம் கொடு !! செலவுகளை மட்டுமே யோசித்துக் கொண்டிராமல், விவசாயிகள் தற்கொலையை தடுத்திட பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்திடு !
- கார்ப்பரேட் நலன்களை பாதுகாக்கிற பிஎம்ஜ ஃபஸல் பீமா யோஜனாவை திரும்பப் பெற்று, ஒரு விரிவான பொதுத்துறை பயிர்க் காப்பீட்டை நிறுவு ! பருவநிலை மாற்றம், வறட்சி, வெள்ளம், பயிர் சார்ந்த நோய்களால் ஏற்படும் இழப்புகளுக்கு, விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கிடும் வகையில் அனைத்து பயிர்களுக்கும் காப்பீடு திட்டத்தை அமலாக்கு !
- அனைத்து பண்ணைக் குடும்பங்களையும் கடன் சுமையிலிருந்து விடுவிக்க, விரிவான கடன் தள்ளுபடி திட்டத்தை அறிவித்திடு !
- வரலாற்று சிறப்புமிக்க விவசாயிகள் போராட்டத்தை நிறுத்தி வைப்பதற்காக, ஒன்றிய அரசு எழுதிக் கொடுத்த உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்து ! சிங்கு எல்லையில் போராடி உயிர் நீத்த தியாகிகளான அனைத்து விவசா யிகளுக்கும் நினைவிடம் எழுப்பு ! அவர்களது குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குவதோடு, மறுவாழ்வளிக்க நடவடிக்கை எடு ! நிலுவையில் உள்ள அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெறு ! ஒன்றிய உள்துறை இணை அமைச்சர் அஜய் மிஸ்ரா டேனியை தண்டனைக்கு உள்ளாக்கு !
- நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகளையும் திரும்ப பெறு ! குறித்த கால வேலைநியமனம் (ஃபிக்சட் டெர்ம் எம்பிளாய்மெண்ட்) முறையை ரத்து செய் ! வேலையில் சம ஊதியத்தையும் பணியின் போது பாதுகாப்பையும் உறுதி செய் ! கேஷுவல் முறையை முற்றாக ரத்து செய் !
- வீட்டிலிருந்து பணிபுரியும் தொழிலாளர்கள், நடைபாதை வியாபாரிகள், குப்பை பொறுக்குபவர்கள், வீட்டு வேலைத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், புலம் பெயர்ந்த தொழிலாளர்கள், திட்டப் பணியாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், கடைகள்,நிறுவனங்களில் வேலை செய்பவர்கள், சுமை ஏற்றி இறக்கும் தொழிலாளர்கள், ஜிக் தொழிலாளர்கள், உப்பளத் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள், பதநீர் கள் இறக்கும் தொழிலாளர்கள், ரிக்சா, மாட்டு வண்டி தொழிலாளர்கள், ஆட்டோ, டாக்சி ஓட்டுநர்கள், தாயகம் திரும்பியவர்கள், மீன்பிடித் தொழிலாளர்கள் போன்ற அனைத்து வகை அமைப்புசாரா தொழிலாளர்களையும் பதிவு செய்து, ஓய்வூதியம் உட்பட விரிவான சமூகப் பாதுகாப்பு திட்டங்களை உருவாக்கு ! இவர்கள் ஒரே தொழிலை நீண்ட காலம் செய்ய முடியாமல் வேறொரு தொழிலுக்கு மாறுபவர்கள் என்பதால், அந்தந்த தொழில்களுக்கான நலவாரியங்களில் இருந்தும் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு இயல்பாக எளிதில் மாறிக்கொள்ள பொருத்தமான வழிவகை செய் !
- கட்டுமானத் தொழிலாளர்களுக்கு நலவாரியத்தில் இருந்து நிதி பங்களிப்போடு இஎஸ்ஐ திட்டத்தை செயல்படுத்து ! இஷ்ரம் போர்ட்டலில் பதிவு செய்யப்பட்ட அனைத்து தொழிலாளர்களுக்கும் மருத்துவ வசதி, மகப்பேறு, ஆயுள் மற்றும் ஊனமுற்றோர் காப்பீட்டை உறுதி செய் !
- வீட்டில் இருந்து பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் வீட்டு வேலைத் தொழிலாளர்கள் பற்றிய ஐஎல்ஓ இணக்க விதிகளை அங்கீகரித்து, பொருத்தமான சட்டங்களை உருவாக்கு !
- புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பற்றிய விரிவான கொள்கையை உருவாக்கி, தற்போதுள்ள மாநிலங்களுக்கு இடையேயான புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு ஒழுங்குமுறை) சட்டம்1979ஐ வலுப்படுத்தி விரிவான சமூக பாதுகாப்பு விதிகளோடு செயல்படுத்து !
- புதிய ஓய்வூதிய திட்டத்தை முற்றாக கைவிட்டு, பழைய ஓய்வூதிய திட்டத்தை மீட்டெடுத்து, அனைவருக்கும் சமூகப் பாதுகாப்பை வழங்கு !
- பெரும் பணக்காரர்களுக்கு வரி விதித்திடு ! கார்ப்பரேட் வரியை அதிகப்படுத்து ! ரத்து செய்யப்பட்ட, செல்வ வரி மற்றும் வாரிசு வரியை மறுபடியும் அமுலாக்கு !
- கருத்து சுதந்திரம், கருத்தில் வேறுபடும் உரிமை, மத சுதந்திரம், பன்முகத்தன்மை கொண்ட பண்பாடுகள், மொழிகள், சட்டத்தின் முன் அனைவரும் சமம், நாட்டின் கூட்டாட்சி முறைமை போன்ற அரசியல் சாசனத்தில் அடிப்படை விழுமியங்கள் மீதான தாக்குதலை நிறுத்து !

### நாடு தழுவிய போராட்ட அழைப்பு!

மேற்குறிப்பிட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்பட நித்தம் பாடுபடுவதோடு, வரவிருக்கும் நாட்களில் பின்வரும் கூட்டு மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளில் பங்கேற்று வெற்றி பெறச் செய்ய முன்வருமாறு, நாடு முழுவதும் உள்ள அனைத்து தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு இந்த மாநாடு அறைகூவல் விடுக்கிறது !

1. அக்டோபர் 3ம் தேதி கருப்பு தினம்:

லக்கிம்பூர் கெரி என்ற இடத்தில் கூட்டம் முடிந்து திரும்பி வந்த விவசாயிகள் மீது, நேரடியாக கார்களை ஏற்றி படுகொலை செய்த சதிக்கு காரணமாக கூறப்படும் ஒன்றிய உள்துறை இணைய அமைச்சர் அஜய் மிஸ்ரா டெனியை அமைச்சர் பொறுப்பில் இருந்து விலக்குவது, அவர் மீது வழக்கு தொடர்ந்து தண்டனை வழங்க வேண்டும் என கோரி கருப்பு தினம் கடைபிடித்தல் (இந்த நாள் எவ்வாறு கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்ற வடிவம் பின்னர் அறிவிக்கப்படும்)

2. நவம்பர் 26, 27, 28 மூன்று நாள் பெரும் திரள் அமர்வு:

அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் தலைநகரங்களில் உள்ள ராஜ்பவன்கள் முன்பு, நவம்பர் 26, 27, 28 ஆகிய மூன்று நாட்கள் இரவும் பகலுமாக பெரும் திரள் அமர்வு போராட்டத்தை நடத்துதல்.

3. டிசம்பர் 2023 ஜனவரி 2024 மாதங்களில் நாடு முழுவதும் பரந்து விரிந்த, ஒன்றுபட்ட உறுதியான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல் (இதன் செயல் வடிவம் பின்னர் அறிவிக்கப்படும்)

தொகுப்பு: டி.எம்.மூர்த்தி

### விலைவாசி உயர்வை கட்டுபடுத்த கோரி

# செப்டம்பர் 12, 13, 14ல் தொடர் மறியல் போராட்டம்

**மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் ஈரோட்டில் பேட்டி**

தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்க மாநில நிர்வாகக் குழு உறுப்பினர்கள், மாவட்டத் தலைவர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் ஈரோட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக் குழு அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் கலந்து கொண்டார். முன்னதாக அவர், செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

மத்தியில் பா. ஜ. க., அரசு பொறுப்பேற்று பத்து ஆண்டுகள் ஆகின்றது. அக்கட்சி தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. மாறாக, விலைவாசி நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே வருகிறது. விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த ஒன்றிய அரசு எவ்வித முன் முயற்சிகளையும் எடுக்கவில்லை. பெட்ரோல், டீசல் விலையை தற்போதிருக்கும் விலையை காட்டிலும் குறைத்துக் கொடுக்க முடியும்.

ஏற்கனவே வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டபோது ஒரு பீப்பாய் 112 டாலருக்கு இறக்குமதி செய்யப்பட்டது. ரஷ்யா-உக்ரைன் போர் ஏற்பட்டு ஓராண்டுக்கு மேலாக இந்த நிலையில், கடந்த ஓராண்டுக்கும் மேலாக ஒரு பீப்பாய் 75 டாலர் என்ற கணக்கில் தான் இந்தியா இறக்குமதி செய்கிறது. அத்துடன் உள்நாட்டு உற்பத்தியும் இருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில் பெட்ரோல், டீசல் விலையைப் பெருமளவுக்கு குறைப்பதற்கான வாய்ப்புகள் இருக்கிறது. ஆனால் விலையை குறைப்பதற்கு மாறாக முன்பை காட்டிலும் விலை அதிகரித்திருக்கிறது. பெட்ரோல், டீசல் விலை உயர்வு மட்டுமின்றி அதனால் அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்து வித பொருட்களின் விலையும் பன்மடங்கு உயர்ந்துள்ளது. விலைவாசி உயரும் நேரத்தில் அதற்கு ஏற்ப மக்களின் வாழ்க்கை தரம் உயரவில்லை; அதாவது வேலையில் இருப்பவர்களுக்கு விலைவாசி உயர்வுக்கு ஏற்ப சம்பளம் உயரவில்லை. வருமானம் அதே இடத்தில் இருக்கிறது. செலவு மட்டும் அதிகரித்து வருகிறது. விலைவாசி உயர்வு முக்கிய பிரச்சினையாக உள்ளது. அடுத்து, வேலையின்மை இன்னொரு முக்கிய பிரச்சினையாக உள்ளது.

**தொடர் மறியல்**

விலைவாசி உயர்வை கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தமிழகம் முழுவதிலும் வரும் செப்டம்பர் 12, 13 மற்றும் 14 ஆகிய 3 நாட்கள் தொடர் மறியல் போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி, 12ம் தேதி மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்ட தலைநகர்களிலும், 13 மற்றும் 14 ஆகிய தேதிகளில் வட்ட மற்றும் ஒன்றிய அளவிலும் இந்த மறியல் போராட்டம் நடத்தப்படும். இத்தொடர் மறியல் போராட்டத்தில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்பதற்கு உரிய தயாரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதும், அவர்களின் படகுகள், வலைகள் போன்ற உடைமைகள் பறிமுதல் செய்யப்படுவதும், அவர்கள் சிறையில் அடைக்கப்படுவதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இப்போது இலங்கை கடற்கொள்ளையர்களாலும் தமிழக மீனவர்களுக்கு பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றன. இலங்கையுடன் நல்லநட்புநிலவி வரும் இச்சூழலில், தமிழக மீனவர்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு கிடைத்திட நடவடிக்கைகள் எடுக்க ஒன்றிய அரசை கேட்டுக் கொள்கிறோம்.

காவிரி நீர் பிரச்சினையில், கர்நாடக மாநில அரசு தவறான அணுகுமுறையை கையாளுகிறது. இதனால் இப்பிரச்சினை, இரு மாநில மக்களிடையேயான பிரச்சினையாக மாறுகிறது. அங்கு ஆளும் காங்கிரஸ் கட்சி ஒரு தேசியக் கட்சி என்ற நிலையில், அதற்கேற்ப இப்பிரச்சினையில் அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்' தமிழகம் முழுவதிலும் உள்ள அனைத்து அரசுத் தொடக்கப்பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தும் என்ற தமிழ்நாடு முதலமைச்சரின் அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

திமுக தலைமையிலான கூட்டணியில் எந்த சலசலப்பும் இல்லை. எங்கள் கூட்டணி பலமாக உள்ளது. வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் எங்களின் இந்த கூட்டணி நிச்சயம் வெற்றி பெறும். இவ்வாறு இரா. முத்தரசன் தெரிவித்தார். இப்பேட்டியின்போது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் நா. பெரியசாமி, க. மாரிமுத்து எம். எல். ஏ., தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்க மாநில பொதுச் செயலாளர் அ. பாஸ்கர், கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர் எஸ். டி.பிரபாகரன் மற்றும் கட்சியின் ஈரோடு வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் ஜி. வெங்கடாசலம் ஆகியோர் உடனிருந்தனர்.

# உதயநிதி மீதான தாக்குதல் தீய நோக்கம் கொண்டது!

**இரா.முத்தரசன் குற்றச்சாட்டு**

உதயநிதி மீதான தாக்குதல் தீய நோக்கம் கொண்டது என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு.

தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சனாதனம் குறித்து தெரிவித்த கருத்து, பகுத்தறிவாளர்கள் தொடர்ந்து முன்வைத்து வருவதுதான். கடந்த காலங்களில் வாய்மூடி கடந்து சென்ற பாஜகவும், "இந்துத்துவா" கும்பலும் தற்போது வானத்துக்கும், பூமிக்கும் எகிறிக் குதித்து வருகின்றன.

ஆதிப் பொதுவுடைமை சமூகம் தகர்ந்து தனியுடைமை சமூகம் உருவானபோது ஆதிக்க சக்திகளால் உழைக்கும் மக்களைப் பிரித்து, பிளவுபடுத்தி வைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் இறுதியாக உருவானதும், பல நூற்றாண்டுகளாக நடைமுறையில் இருப்பதும் சனாதனக் கருத்தியலாகும். இது பகுத்தறிவு சிந்தனைக்கும் அறிவியல் கண்ணோட்டத்திற்கும் எதிரானது என்பதுடன் சமூக வளர்ச்சியைத் தடுத்து நிறுத்த முயற்சிக்கும் அறிவீனமுமாகும்.

இது தொடர்பாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சனாதன எதிர்ப்பு மாநாட்டில் பேசும் போது, "மனித வளத்தை தாக்கி வரும் டெங்கு, மலேரியா காய்ச்சல், கொரோனா தொற்று நோய் போல் சமூக ஆரோக்கியத்துக்கு கேடு விளைவிக்கும் சனாதனத்தை எதிர்ப்பதுடன் நின்று விடக் கூடாது. அதனை அழித்தொழிக்க வேண்டும்" என்று கூறியுள்ளார். இது சமய நம்பிக்கையை இழிவு செய்யும் நோக்கம் கொண்டதல்ல என்பதை சாதாரண அறிவுள்ளோரும் அறிவர். ஆனால், பாஜகவும், சங்பரிவார் கும்பலும் உதயநிதி ஸ்டாலின் இந்து சமயத்தை இழிவுபடுத்தியதாக பச்சை புளுகு மூட்டை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதில் பாஜக தேசிய தலைவர் ஜே. பி. நட்டா, ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர் அமித்ஷா தொடங்கி, தமிழ்நாடு தலைவர் கே. அண்ணாமலை வரை சமய நம்பிக்கை கொண்டவர்களுக்கு மதவெறியூட்டும் மலிவான செயலில் இறங்கியுள்ளனர். வட மாநிலங்களில் உள்ள அரசு அதிகாரத்தைப் பயன்படுத்த, புனைவுக் குற்றச்சாட்டுக்களை வழக்குகளாக பதிவு செய்து வருகிறது.

இதன் மூலம் நாடு முழுவதும் பதற்றத்தை உருவாக்கி, ஒரே நாடு, ஒரே தேர்தல் என்னும் தனிநபர் மையப்பட்ட சர்வாதிகாரக் கட்டமைப்பை ஏற்படுத்தும் வஞ்சகச் செயலில் ஈடுபட்டு வருவதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. இந்த ஜனநாயக விரோதச் செயலுக்கு எதிராக 'இந்தியா' அணி நாடு முழுவதும் தீவிரமான இயக்கங்களை மேற்கொண்டு முறியடிக்கும் என்பதைத் வரலாறு உறுதி செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறோம் என மாநில செயலாளர் இரா. முத்தரசன் கூறியுள்ளார்.

# ஜெனரிக் மருந்துகள் மீதான கொள்கையை மறுமதிப்பீடு செய்க

**பினாய் விஸ்வம் எம்பி கடிதம்**



ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியாவுக்கு ஜெனரிக் மருந்துகள் குறித்த கொள்கையை மறுமதிப்பீடு செய்ய வலியுறுத்தி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தேசியக் குழு செயலாளர் பினாய் விஸ்வம் எம்பி 2023 ஆகஸ்ட் 22ல் எழுதிய கடிதம் வருமாறு:

"நமது குடிமக்களின் உடல்நலத்தையும், அவர்களது நிதிசார்ந்த நலனையும் குறிப்பிடத்தக்க அளவில் பாதிக்கும் ஒரு பிரச்சனை மீது தங்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக நான் இக்கடிதத்தை எழுதுகிறேன். மார்க்கெட்டில் விற்பனையாகும் பிராண்டட் நிறுவன அடையாளத்துடன் கூடிய மருந்துகளை விட, ஜெனரிக் மருந்துகளை ஆதரிப்பது குறித்து குறிப்பாக, தேசிய மருத்துவ ஆணையத்தின் நன்னெறி போர்டின் வழிகாட்டு குறிப்புகள் குறித்து சமூகத்தின் பல பிரிவுகளும் கவலைகளை, சந்தேகங்களை எழுப்புகின்றன.

அந்தக் குறிப்பாணைகள் மருத்துவர்களை ஜெனரிக் மருந்து பெயரைப் பரிந்துரைத்து எழுதுமாறு கேட்டுக் கொள்கிறது, ஆனால் அவர்கள் தற்போது நிலவும் நமது மருத்துவக் கொள்கைகளுக்கு விரோதமாக இருப்பதாகத் தோன்றுகிறது. உண்மையிலேயே அரசு ஜெனரிக் மருந்துகளை ஆதரிப்பதாக இருந்தால், அரசு எடுக்க வேண்டிய முதல் நடவடிக்கை வர்த்தக பிராண்டட் பெயர் மருந்துகளைக் கட்டுப்படுத்துவது அல்லது தடை செய்வதாக இருக்க வேண்டும் என்பது சுட்டிக்காட்டப்படுகிறது. அத்தகைய தீர்மானகரமான நடவடிக்கை இல்லாமல் போனால், மருந்து கடை விற்பனையாளர்களின் தனித்த விருப்பத்திற்கு எந்த பிராண்டு மருந்தையும் விற்பனை செய்ய அனுமதிப்பதாகிவிடும்; அது, குறிப்பாணை நோக்கத்தைக் குலைப்பதாகும்.

மருந்து தயாரிப்பு தொழிலில் வலிமையான வாய்ப்புக்களுடன் கூடிய இந்தியா, தரமான ஜெனரிக் மருந்து உற்பத்திச் செய்வதில் முன்னணியில் உள்ளது என்பதை நான் வலியுறுத்திச் சுட்டிக்காட்ட வேண்டும். இந்திய மருந்துவ வேதியல் பொருட்கள் மற்றும் மருந்துகள் லிமிடெட் (ஐடிபிஎல்) போன்ற பொதுத்துறை நிறுவன ஆலைகள் உள்நாட்டிலும் அயல் நாட்டிலும் மருத்துவச் சிகிச்சை செலவைத் தொடர்ச்சியாகக் குறைத்து வருகின்றன. துரதிருஷ்டவசமாக இந்த ஆலைகள் ஒன்று செயல்படாமல் உள்ளன அல்லது குறிப்பிடத்தக்க அளவு குறைந்த செயல்பாட்டில் இயங்குகின்றன. மேலும் பிராண்டட் மருந்துகளின் அதிகபட்ச சில்லறை விற்பனை விலை (விஎம்ஆர்பி) மற்றும் அவற்றை வாங்கும் விலையின் வேறுபாடு அச்சுறுத்தும் அளவு மிக அதிகமாக உள்ளன. இது அதிகபட்சமாகச் செலவிட வேண்டிய நிர்பந்தத்தை குடிமக்களுக்கு ஏற்படுத்துவதுடன், பார்மசூட்டிகல் கம்பெனிகளின் விலை நிர்ணய உத்தி குறித்த கவலைகளையும் ஏற்படுத்துகிறது. 2015ம் ஆண்டிலேயே மருந்துகளின் வர்த்தக லாப வரம்புகளைச் சீர்திருத்துவது குறித்த அறிக்கை கவலைகளை வெளிப்படுத்தியதாகவும் நான் அறிகிறேன்; ஆனால் அதன் மீது உறுதியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இப்படிப்பட்ட நிலையில், இப்பிரச்சனை குறித்து ஆழமாக விசாரித்துப் பரிசீலிக்குமாறு நான் தங்களை வற்புறுத்துகிறேன் என தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

# ஒரு கிலோ நெல்லுக்கு 7 பைசா மட்டுமே தமிழக அரசின் ஊக்கத்தொகை உயர்வு

**தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கண்டனம்**

வரும் குருவை மற்றும் சம்பாதாளடி அறுவடை காலமான கரீப்பருவநெல் கொள்முதலுக்கு ஊக்கத்தொகையாக குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் ஏழு பைசா மட்டுமே உயர்த்தி தமிழக அரசு அறிவித்துள்ளது என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் பி. எஸ். மாசிலாமணி தனது அறிக்கையில் கூறியுள்ளதாவது.

ஒவ்வொரு ஆண்டும் நெல் உற்பத்திக்கான இடுபொருள் மற்றும் நடைமுறை முதலீட்டு செலவு உயர்ந்து வரும் நிலையில்.. அவைகளை கணக்கில் கொள்ளாமல் ஏதோ ஒப்புக்கு இப்படி அறிவிப்பது பொருத்தமானதல்ல.

ஒன்றிய அரசோ.. நடப்பு பருவத்திற்கு நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் ரூ 143 மட்டுமே உயர்த்தி ரூ2183 மற்றும் 2203 என்று நிர்ணயித்துள்ளதை..அப்போதே தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் ஒன்றிய அரசுக்கு எதிர்ப்பை தெரிவித்தது. உற்பத்திக்கான செலவுகள் இரண்டையும் சேர்த்து.

இதில் 50% கூடுதல் படுத்தி.. வேளாண் ஆணையம் கூறியபடி நடைமுறைப்படுத்திட தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். ஆனால் ஒன்றிய அரசோ.. வழக்கம்போல் ஏமாற்றிவருகிறது.

இந்த நிலையில் தமிழ்நாடு அரசு கடந்த இரண்டு ஆண்டுகளாக சாதாரண நெல் குவிண்டாலுக்கு ஊக்கத் தொகையாக ரூபாய் 75 மற்றும் சன்ன ரகத்திற்கு ரூபாய் 100 என வழங்கி வந்தநிலையில்.. குவிண்டாலுக்கு தற்போது ஏழு ரூபாய் மட்டுமே உயர்த்தி உள்ளது.

ஆக தமிழக அரசு வழங்க உள்ள ஊக்கத்தொகை 82 ரூபாய் மற்றும் 107 ரூபாய் மட்டுமே. தேர்தல் காலத்தில் அறிவித்த வாக்குறுதியான நெல் குவிண்டால் ரூபாய் 2500, கரும்புக்கு 4,000 என்பது என்னவாயிற்று.

கடந்தமூன்று ஆண்டுகளில் நெல் உற்பத்திக்கான செலவு 2228 சதம் வரை கூடியுள்ள நிலையில்.. அதைபற்றி கவலை கொள்ளாது ஒரு கிலோவிற்கு ஏழு பைசா மட்டுமே உயர்த்தியது எந்த வகையில் நியாயம் ஆகும்.

ஆகவே தமிழ்நாடு அரசு இதை ஈடுசெய்து விலையை நிர்ணயிக்கும் நிலையில், ஊக்கத் தொகையை உயர்த்தி, தேர்தல் அறிக்கையில் கூறப்பட்ட விலையை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம் என தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# தென்காசியில் அரசியல் தத்துவார்த்த பயிற்சி முகாம்

தென்காசியில் "அரசியல் தத்துவார்த்த பயிற்சி முகாம்" மாவட்ட செயலாளர் த. இசக்கிதுரை தலைமையில் நடைபெற்றது. இதில் மாநில செயற்குழு உறுப்பினர் கே. சந்தானம், மாநில ஏ. ஐ. டி. யு. சி. தலைவர் எஸ். காசி விஸ்வநாதன் அரசியல் வகுப்பு நடத்தினர். மாவட்டத் துணைச் செயலாளர் எஸ். வேலாயுதம், மாவட்ட ஏ. ஐ. டி. யு. சி. பொதுச் செயலாளர் டி. சுப்பையா, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் எம். எஸ். கிட்டப்பா ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர். எஸ். மாரியப்பன், பி. வேலு, ஆர். சமுத்திரக்கனி , பி. சிங்காரவேலு, பி. பாலசுப்பிரமணியன், ஜெ. அந்தோணி ராஜ், ஏ. பரமசிவம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வீடுகள் இடிக்கப்பட்டதை கண்டித்து உண்ணாவிரதப் போராட்டம்



வெள்ளலூர் கிராம வெள்ள நாயகன் பட்டியில் வசிக்கும் பட்டியல் இன மக்கள் செல்வி மற்றும் பஞ்சு ஆகியோர் குடியிருந்த வீட்டினை இடிக்கப்பட்டதால், சம்மந்தப்பட்ட மதுரை மாவட்ட ஆட்சியர் நிர்வாகம், ஆதிதிராவிடர் நலத் துறை மற்றும் மேலூர் வட்டாட்சியர் அதிகாரிகள் குடியிருக்க மாற்று இடம் வழங்கிடக் கோரிக்கை விடுத்து மதுரை புறநகர் பகுதியில் உள்ள மேலூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின், மாநில கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் காளிதாஸ் தலைமையில், வட்டாட்சியர் அலுவலகம் முன்பு சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் நடைப்பெற்றது. த.ஒ.வா.இ மூர்த்தி, துணைச் செயலாளர் மெய்யர், தாலுகாச் செயலாளர் சுரேஷ்குமார், மாவட்டக் குழு உறுப்பினர்கள் திலகர், பாண்டியன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர். முடிவில், தாசில்தார் செந்தாமரை சமரசம் செய்ததை தொடர்ந்து கலைந்து சென்றனர்.

# யாசர் அராஃபத் பிறந்தநாள் சிறப்பு கருத்தரங்கம்

அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டு கழகத்தின் சார்பில், யாசர் அராஃபத் பிறந்த தினத்தை முன்னிட்டு சிறப்புக் கருத்தரங்கம் தஞ்சை ஏஐடியுசி கூட்ட அரங்கில் நடைபெற்றது.

ஐப்சோ மாவட்டச் செயலாளர் முனைவர் கோ. பாஸ்கர் தலைமை தாங்கினார்.

கிளைச்செயலாளர் ஆர்.சிவஞானம் வரவேற்புரையாற்றினார். ஆர். கே. செல்வகுமார், சி. இராமலிங்கம், மா. சுந்தரமூர்த்தி முன்னிலை வைத்தனர் .

ஐப்சோவின் மாநில பொதுச் செயலாளர் டாக்டர் ஜி. ஆர். ரவீந்திரநாத், மாநில செயலாளர் டாக்டர் ஏ. ஆர். சாந்தி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை மாவட்டச்செயலாளர் முத்து உத்திராபதி உள்ளிட்டோர் கருத்துரை வழங்கினர்.

முனைவர் எம். சுந்தரமூர்த்தி நன்றி நவின்றார்.

# ஜனகம் இஸ்மாயில் 21ஆம் ஆண்டு நினைவு நாள்

பெண்ணுரிமை போராளி தோழியர் ஜனகம் இஸ்மாயில் அவர்களின் 21ம் ஆண்டு நினைவு அஞ்சலி இந்திய மாதர் தேசிய சம்மேளனம் சார்பில் மேற்கு பகுதி தலைவர் கே. ஆயிஷா தலைமையில் நடைபெற்றது.

இதில் மாமன்ற உறுப்பினர் க. சுரேஷ், கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகர் மாவட்ட செயலாளர் எஸ். சிவா, கட்சியின் மேற்கு பகுதி செயலாளர் இரா. சுரேஷ் முத்துசாமி, எஸ். எம். பி. வீரமணி, இந்திய தேசிய மாதர் சங்கத்தின் மாவட்ட தலைவர் எஸ் பார்வதி, மாதர் சங்க மாவட்ட செயலாளர் அ. அஞ்சுகம், மாதர் சங்கம் மாவட்ட பொருளாளர் எம். சுமதி, முன்னாள் மாமன்ற உறுப்பினர் வை. புஷ்பம் மற்றும் மணிமேகலை, சாந்தா உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## வினாடி - வினா விடைகள்

1. சோவியத் ரஷ்யா (1975 ஏப்ரல் 19)
2. 1999 ஆம் ஆண்டு
3. அமெரிக்காவில் 2008 ஆம் ஆண்டு நடைபெற்றது
4. பிரேசில்
5. ஒரு பூமி, ஒரு குடும்பம், ஒரு எதிர்காலம்
6. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார்

# ஜீவாவின் வழியில் படைப்புகளைத் தந்தவர் கவிஞர் வாய்மைநாதன்: இரா.முத்தரசன் புகழாரம்

எழுத்தாளர், கவிஞர் வாய்மைநாதன் படத்திறப்பு புகழஞ்சலி நிகழ்ச்சியை கவிஞரின் குடும்பத்தினருடன் தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்திடன் இணைந்து மாநில முன்னாள் பொதுச் செயலாளர் பேராசிரியர் இரா. காமராசு தலைமையில் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் பங்கேற்று கவிஞர் வாய்மைநாதனின் படத்தைத் திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்தினார். அப்போது அவர் பேசியது:

சமூகத்தில் சீர்திருத்த மாற்றங்களை ஏற்படுத்தும் ஆற்றல் நல்ல புத்தகங்களுக்கு உண்டு. அதற்கு உதாரணமாகிறது தாய் நாவல். முற்போக்கு இலக்கியங்கள்தான் இன்றைய தேவையாக உள்ளது. அந்த பணியை சமரசம் இல்லாது செய்தவர்களில் வாய்மைநாதன் குறிப்பிடத்தக்கவர்.

பேராசான் ஜீவாவின் தாக்கத்தைப் பெற்றிருந்ததால் அவரின் வழியில் நின்று சமூக அக்கறையோடு படைப்புகளைத் தந்தவர். நல்ல படைப்பாளிகள் மறைந்தாலும், அவர்களது பதிவுகளின் வாயிலாக நம்மோடு வாழ்வார்கள். அந்த வகையில் வாய்மைநாதனும் அவரின் படைப்புகளும் நம்முடன் இருக்கும். கவிஞர் வாமைநாதன் எழுதிய நூல்களை தமிழக அரசு நாட்டுடமையாக்க வேண்டும் என்ற கோரிக்கை இங்கே முன்வைக்கப்பட்டது. அதனை நிறைவேற்ற தேவையான முயற்சிகள் எடுக்கப்படும். மேலும், என்சிபிஎச் பதிப்பித்துள்ள வாய்மைநாதனின் புத்தகங்கள் அனைத்தையும் மறுபதிப்பு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் முத்தரசன். நிகழச்சியில், கலை இலக்கியப் பெருமன்றம், கவிஞரின் குடும்பத்தாருடன் இணைந்து அமைக்கப்பட்டுள்ள வாய்மைநாதன் கலை இலக்கிய, கல்வி அறக்கட்டளையை இரா.முத்தரசன் தொடங்கி வைத்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான கோ.பழனிச்சாமி, சட்டப் பேரவை உறுப்பினர்கள் நாகை.மாலி, கா.மாரிமுத்து, முன்னாள் உறுப்பினர் கே. உலகநாதன், சிபிஐ மாவட்டச் செயலாளர்கள் வை. செல்வராசு (திருவாரூர்), சிவருகு. பாண்டியன்(நாகை), கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாவட்டத் தலைவர் புயல் குமார், மாவட்டச் செயலாளர் தென்னடார் அம்பிகாபதி, தமுஎகச கவிஞர் இராம. இளங்கோவன், வழக்குரைஞர் இரா. முருகபாரதி உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர். பேராசிரியர் ஞா. பழனிவேல் நன்றி தெரிவித்தார்.

# கள்ளக்குறிச்சியில் அரசு கலைக்கல்லாரி அமைத்திடுக!

## மாதர் சம்மேளனம் வலியுறுத்தல்




இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் கள்ளக்குறிச்சி மாவட்ட முதல் மாநாடு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே. பி. ரீத்தா தலைமையில் கள்ளக்குறிச்சியில் நடைபெற்றது. மாவட்ட தலைநகரில் அரசு அறிவியல் கலைக்கல்லூரி அமைத்திடு, நாடாளுமன்றம், சட்டமன்றங்களில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்கிடு, பேரூராட்சிகளில் 100 நாள் வேலைத்திட்டத்தை கொண்டு வர சட்டம் இயற்று, பாலியல் மற்றும் வன்கொடுமைகள் ஆணவ படுகொலைகளை தடுத்து நிறுத்திடு, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பெண்கள் செயல்பாட்டிற்கு தடையாக இருப்பவர்கள் மீது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் மாநிலச் செயலாளர் மஞ்சுளா கொடியேற்றி வைத்தார். மாநிலத் துணைச் செயலாளர் ஆ. வளர்மதி வாழ்த்துரை கூறினார். மாவட்ட குழு மலர்கொடி, மாதூர் தேவி, சங்கீதா செல்வி, வாசுகி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பழங்குடி மக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்குக!

## தமிழ்நாடு பழங்குடி சங்க ஒன்றிய மாநாடு வலியுறுத்தல்

**திருப்போரூர்:** தமிழ் நாடு பழங்குடி மக்கள் சங்கம் திருப்போரூர் ஒன்றிய 5வது மாநாடு

ஏ. குமாரி தலைமையில் நடைபெற்றது. அஞ்சலி தீர்மானத்தை எம். வான்மதி வாசித்தார். அனைவரையும் பி. முரளி வரவேற்பு பேசினார். மாநாட்டை துவக்கி வைத்து மாநில துணை செயலாளர் ஜா. பூபாலன் பேசினார். வேலையறிக்கையை ஒன்றிய செயலாளர் தோழர் ஒய். ஹாருன்பாஷா முன்வைத்து உரைனார். அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் தோழர் எம். பார்த்திபன் வாழ்த்துரை வழங்கினார்.

சங்கத்தின் மாவட்ட தலைவர் க. ஜெகதீசன் நிறைவுரையாற்றினார். ஒன்றிய தலைவராக ஏ. அரசு, ஒன்றிய செயலாள ராக ஒய். ஹாருன்பாஷா, பொருளாள ராக எம். வான்மதி, துணைத்தலைவராக ஏ. குமாரி, துணைச்செயலாளராக பி. முரளி தேர்வு செய்யப்பட்டனர். இறுதியாக ஏ. அரசு அனைவருக்கும் நன்றி கூறினார்.

பழங்குடி மக்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும், இலவச மின்சாரம் வழங்க வேண்டும், அனைவருக்கும் பழங்குடியினர் சான்றிதழ் வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**திருக்கழுக்குன்றம்:** திருக்கழுக்குன்றம் 7வது மாநாடு ஏ.கார்த்திக் தலைமையில் நடைபெற்றது.

அஞ்சலி தீர்மானத்தை கே. புவனேஸ்வரி வாசித்தார். அனைவரையும் சி. முருகன் வரவேற்று பேசினார். மாநாட்டை துவக்கிவைத்து மாநில துணைச் செயலாளர் ஜா. பூபாலன் சிறப்புரையாற்றினார். ஒய். ஹாருன்பாஷா, க. சங்கர்,

க. ராமதாஸ், ஜி. அழகேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட தலைவர் க. ஜெகதீசன் நினைவுரையாற்றினார். ஒன்றிய தலைவராக ஜி. அழகேசன், ஒன்றிய செயலாளராக கே. சங்கர், பொருளாளராக க. ராமதாஸ், துணைத்தலைவர்கள் ஏ. கார்த்திக், சி. முருகன், துணைச் செயலாளர்கள் எஸ். கார்த்திக், ஆர். முருகன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். இறுதியாக ஏ. எஸ். கார்த்திக் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# ஏ.ஐ.டி.யு.சி சாலை சிறு வியாபாரிகள் சங்கம் துவக்கம்

காஞ்சி செங்கல்பட்டு மாவட்ட உடல் உழைப்பு தொழிலாளர் சங்கத்தின் கிளை சங்கமான மல்லை கடற்கரை சாலை சிறு வியாபாரிகள் சங்கத்தின் பேரவைக் கூட்டம் டி. தானியேல் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக ஏ. ஐ. டி. யு. சி மாநில துணைத்தலைவர் எம். ஜஹாங்கீர், ஏ. ஐ. டி. யு. சி மாவட்ட செயலாளர் க. ஜெகதீசன், ஏ. ஐ. டி. யு. சி ஊரக உள்ளாட்சி பொது பணியாளர்கள் சங்க மாவட்ட செயலாளர் ஏ. வரதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். கௌரவ தலைவராக க. ஜெகதீசன், தலைவராக டி. தானியேல், செயலாளராக, ஏ. பௌலி, பொருளாளராக கே. ஜெயலட்சுமி, துணைத்தலைவர்கள் டி. காந்தி, எஸ். செல்வி, துணைச்செயலாளர்கள் சி. கிருஷ்ணமூர்த்தி, டி. மணிகண்டன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

# போக்குவரத்து துறை அமைச்சரிடம் ஊதிய ஒப்பந்த கோரிக்கை

போக்குவரத்து ஏ. ஐ. டி. யு. சி. சம்மேளனத்தின் சார்பில், போக்குவரத்து துறை அமைச்சர் எஸ். எஸ். சிவசங்கர் அவர்களிடம் சம்மேளன பொதுச் செயலாளர் ஆர். ஆறுமுகம் ஊதிய ஒப்பந்த கோரிக்கைகள் சமர்ப்பித்தார். துணைப் பொதுச் செயலாளர் என். முருகராஜ், பொருளாளர் கே.நேருதுரை உடன் இருந்தனர்.

# ஜனசக்தி வளர்ச்சி நிதி




**திண்டுக்கல்:** திண்டுக்கல் மாவட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிதியளிப்பு மற்றும் சிறப்பு பேரவை கூட்டம் மாவட்ட செயலாளர் ஏ. பி. மணிகண்டன் தலைமையிலும், கட்சி பொருளாளர் பி. ஆர். சுதந்திரதேவி, மாவட்ட துணைச் செயலாளர் இரா. வினோத்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

தேசியக் குழு உறுப்பினர் க. சந்தானம் துவக்க உரையாற்றினார். மாநில செயலாளர் இரா. முத்தரசன் சிறப்புரை நிகழ்த்தினார். பேரவையில் கட்சி நிதியாக 120000 ரூபாயும், ஜனசக்தி ஆயுள் சந்தா 3, ஆண்டு சந்தா 34 க்குரியத்தொகை செலுத்தப்பட்டது. கூட்டத்தில் சுமார் 150 க்கு மேற்பட்டோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

**கோவை:** கோவை, சூலூர் தெற்கு வட்டாரச் செயலாளர், இளைஞர் பெருமன்ற மாநில துணைச் செயலாளர் வே. வசந்தகுமார்– ரம்யா தம்பதியரின் புதுமனை ''பாலவர்ஷினி – ஜீவதர்ஷினி இல்லம்'' திறப்புவிழா கண்ணம்பாளையம் ஸ்டாலின் சின்னையன் தோட்டத்தில் நடைபெற்றது.

இளைஞர் பெருமன்ற மாநிலச் செயலாளர் க. பாரதி, கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் மௌ.குணசேகர், மாவட்ட நிர்வாக்குழு உறுப்பினர் பெ.மௌனசாமி, மாவட்டக்குழு உறுப்பினர்கள் கே.கண்ணன் உள்ளிட்ட தோழர்கள் வாழ்த்தினார்கள். ஜனசக்தி வளர்ச்சி நிதி ரூ. 2000 அளிக்கப்பட்டது.

◆ கோவை, சூலூர் தெற்கு வட்டாரம், கட்சியின் வட்டாரக்குழு உறுப்பினர், சி.ஆர்.மணி – ஆர்.சித்ரா தம்பதியரின் மகன், எம்.ஜவஹர்–எஸ்.இந்திரா ஆகியோர் மணவிழா வரவேற்பு ஹசன்–அக்சரா ஹாலில் நடைப்பெற்றது.

மாவட்ட துணைச் செயலாளர் மௌ.குணசேகர், மாவட்ட நிர்வாக்கக்குழு உறுப்பினர் பெ.மௌனசாமி, வட்டாரச் செயலாளர் வே.வசந்தகுமார், மாவட்டக்குழு உறுப்பினர்கள் கே.கண்ணன், பி.சுப்பிரமணியம், எஸ்.கோட்டியப்பன் வட்டாரக்குழு தோழர்கள் வி.பேரின்பன், வெ.பாலதண்டாயுதம், எம்.சீனிவாசன் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்று வாழ்த்தினார்கள். ஜனசக்தி வளர்ச்சி நிதி ரூ.2000 அளிக்கப்பட்டது.

◆ கோவை மாநகர் மேற்கு மண்டல குழுவிற்கு உட்பட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கோகுலம் காலனி கிளையின் முன்னால் செயலாளர் எஸ் .கார்திகேயன் கே. தனபாக்கியம் அவர்களின் அன்பு மகள் கே. பிரியதர்ஷினி எஸ். கமல்ராஜ் ஆகியோர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி வடவள்ளியில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட செயலாளர் சி. சிவசாமி, துணை செயலாளர் ஜே. ஜேம்ஸ்,பொருளாளர் சி. தங்கவேல், மேற்கு மண்டல செயலாளர் என். சாந்திரன், கோவை மாநகராட்சி 41வது வார்டு உறுப்பினர் சாந்தி சந்திரன், மற்றும் ஆர். சாமிநாதன், பி. அன்பரசன் உள்ளிட்டவர்கள் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர். மணமக்களின் சார்பில் கட்சி வளர்ச்சி நிதியாக ரூ.1000, ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூபாய் 2000 வழங்கப்பட்டது.

◆ **சேலம்:** ஜனசக்தி துணை ஆசிரியராகவும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் மாவட்ட தலைவர்களில் ஒருவராக இருந்த வாழப்பாடி சந்திரன் அவர்கள் நினைவாக, மாவட்ட குழு உறுப்பினர், ஜனசக்தி முகவர் ஈ. ஆர். கே. ஜனசக்தி வளர்ச்சி நிதி ரூபாய் 500 வழங்கினார்.

**மதுரை புறநகர்:** மதுரை புறநகர் மாவட்டக் குழு உறுப்பினரும், ஏஐடியுசி சங்க பொதுச் செயலாளருமான பாலகிருஷ்ணன் வளர்மதி தம்பதியினரின் மகன் முனீஸ்வர ரெங்கநாத், கோவிந்தராஜ் குருலட்சுமி தம்பதியினரின் மகள் பாலம்மாள் (எ) அமுதா ஆகியோரது திருமண நிகழ்ச்சி திருப்பரங்குன்றம் அருகிலுள்ள ஏழுர் சாலியார் திருமண மஹாலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ. 2,000 மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் முத்துவேலிடம் வழங்கப்பட்டது.

## ஆட்டோ தொழிலாளர்கள் மதுரையில் ஆர்ப்பாட்டம்




மதுரை மாவட்ட ஏஐடியூசி ஆட்டோ தொழிலாளர் சங்கத்தின் சார்பாக வெளிப்படை தன்மை கொண்ட தடையில்லாத அனுமதியை உடனடியாக அனைத்து ஆட்டோக்களுக்கும் வழங்க கோரி, மதுரை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் அருகே மாவட்ட செயலாளர் சித்திக் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர மாவட்ட செயலாளர் எம்.எஸ். முருகன், துணை செயலாளர் சி.தாமஸ், ஏஐடியூசி ஆட்டோ தொழிலாளர்கள் சங்க மாவட்ட தலைவர் அலாவூதீன், பொருளாளர் சதீஷ் குமார் உள்ளிட்ட ஆட்டோ தொழிலாளர்கள் திரளாக பங்கேற்றனர்.

## கோயில்மனையில் குடியிருப்போர் சங்க ஆலோசனை கூட்டம்

தமிழ்நாடு கோயில்மனை குடியிருப்போர் சங்க மேற்கு அண்ணாநகர், திருவல்லீஸ்வரர் நகர் நல கழக மண்டபத்தில் தென்சென்னை, வடசென்னை, மத்திய சென்னை, திருவள்ளூர் மாவட்ட, நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் மாநில தலைவர் வி. அ. பாலசுப்பிரமணியன் தலைமையில், மாநில பொருளாளர் எஸ். ஏழுமலை முன்னிலையில் நடைபெற்றது, திருவல்லீஸ்வரர் நகர் நல கழக செயலாளர் அனைவரையும் வரவேற்று பேசினார், தமிழக இந்து சமய திருக்கோயில்களின் வீட்டுமனை வாடகைதாரர்கள் சங்க பொதுச் செயலாளர் கே. மணி, பாடி பகுதி சங்க மூத்த தலைவர் சுப்பையா, மகளிர் அணி அமைப்பாளர் ஆர். பூங்கொடி ஆகியோர் சிறப்புரையாற்றினர். தென்சென்னை மாவட்ட தலைவர் பென்ஜமின், செயலாளர் லலித்குமார், வடசென்னை மாவட்ட தலைவர் காமராஜ், மத்திய சென்னை மாவட்ட தலைவர் சரவணன், பொருளாளர் சீனிவாசன், திருவள்ளூர் மாவட்ட தலைவர் ஆணந்தன், செயலாளர் பிரபாகரன் உரையாற்றினர்.

## வ.உ.சி.யின் 152ஆவது பிறந்தநாள்

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை

செக்கிழுத்த சிதம்பரம் என்று போற்றப்பட்ட வ.உ.சிதம்பரம் அவர்களின் 152 வது பிறந்தநாள் விழா நிகழ்ச்சி கோவை வ.உ.சி. மைதானத்தில் உள்ள வ.உ.சி. சிலைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர், மாலை அணிவித்தனர். இந்த நிகழ்ச்சிகளுக்கு கட்சியின் மாவட்ட செயலாளர் சி.சிவசாமி தலைமை தாங்கினார். தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் ப.பா. ரமணி நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். மாவட்ட துணை செயலாளர் எம்.குணசேகர், மாவட்ட பொருளாளர் சி.தங்கவேல் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் சாந்தி சந்திரன், வழக்கறிஞர் எஸ்.ராதாகிருஷ்ணன், முன்னாள் மாவட்ட பொருளாளர் யு.கே.சுப்பிரமணியன், வழக்கறிஞர் கே.சுப்பிரமணியன், மேற்கு மண்டல செயலாளர் என்.சந்திரன், வங்கி ஊழியர் சங்கம் மாநில செயலாளர் எம்.வி. ராஜன், மதுக்கரை கே.ஆர்.தங்கராஜ், தொலைதொடர்பு துறை கோட்டியப்பன், முன்னாள் மாமன்ற உறுப்பினர் கே.புருஷோத்தமன், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட செயலாளர் ஏ.அஷ்ரப் அலி, பேராசிரியர் திலிப் குமார், ஆர்.கந்தசாமி, மத்திய மண்டல துணைச் செயலாளர் ஏ.பி.மணிபாரதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். 'கப்பலோட்டிய தமிழனின் பன்முக ஆளுமை' என்ற நூலை இஸ்கப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் எஸ்.ராதாகிருஷ்ணன் வெளியிட, அதை தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் ப.பா. ரமணி பெற்றுக் கொண்டார்.

## கட்டடத் தொழிலாளர் சங்க தொழிலாளர் அரசியல் விளக்க பேரவை


தமிழ்நாடு ஏ. ஐ. டி. யு. சி. கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகளுக்கான அரசியல் விளக்க பேரவை கூட்டம் அன்று திருச்சியில் நடைபெற்றது. பேரவை கூட்டத்திற்கு சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் சுரேஷ் தலைமை தாங்கினார்,

பேரவை கூட்டத்தில் தொழிலாளி வர்க்க அரசியல் என்ற தலைப்பில் ஏ. ஐ. டி. யு. சி. தேசிய துணைத் தலைவர், திருப்பூர் பாராளுமன்ற உறுப்பினர் கே. சுப்பராயன் எம்பி அவர்களும், ஏ. ஐ. டி. யு. சி. தேசிய செயலாளர் டி. எம். மூர்த்தி பறிக்கப்படும் தொழிலாளி உரிமைகள் என்ற தலைப்பிலும், தமிழ்நாடு ஏ. ஐ. டி. யூ. சி. பொதுச் செயலாளர் எம். ராதாகிருஷ்ணன் தொழிலாளி வர்க்கம் எதிர்கொள்ளும் சவால்கள் என்ற தலைப்பிலும் உரையாற்றினார். சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் கோவை என். செல்வராஜ் நமது சங்கம் செயல்படுத்த வேண்டிய முடிவுகளை விளக்கி பேசினார். நிகழ்ச்சியில் திருச்சி மாநகர் மாவட்ட செயலாளர் எஸ். சிவா, கட்டட தொழிலாளர் சங்க மாவட்ட தலைவர் எம். ஆர். முருகன், மாவட்ட செயலாளர் செல்வகுமார் மற்றும் சங்கத்தின் மாநில நிர்வாகிகள், மாவட்ட செயலாளர், மாவட்ட நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## தினமலர் எரிப்பு போராட்டம்



**சத்தியமங்கலம்:** பவானிசாகர், சத்தியமங்கலம், சத்தி கலைக் கல்லூரியில் தினமலர் பத்திரிக்கையை எரித்து மாணவர் பெருமன்றத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



**மதுரை மேலூர்:** மதுரை மேலூர் பேருந்து நிலையத்தில், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம், மாணவர் பெருமன்றம் இணைந்து தமிழக அரசின் காலை உணவு திட்டத்தை இழிவாக விமர்சனம் செய்த தினமலர் செய்தி நிறுவனத்தையும், அதன் ஆசிரியரையும் கண்டித்தும் தினமலர் செய்தித்தாளை எரித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# போலி ஆவணங்கள் மூலம் ஏழை மக்களின் வீடுகளை இடிக்க அனுமதிக்காதே!

### வி. தொ. ச. தெருமுனை கூட்டம்

திருவள்ளூர் மாவட்டம் சோழவரம் ஒன்றியம் எம்ஜிஆர் நகர் ,வி.பி. சிங் நகரில், கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக வீடு கட்டி குடியிருந்து வரும் பொதுமக்களை போலி ஆவணங்கள் மூலம் அப்புறப்படுத்த முனையும் சமூக விரோதிகளை குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்ய வலியுறுத்தி, மேற்கண்ட நகர் பொதுமக்களுக்கு உடனடியாக இலவச வீட்டு மனை பட்டா வழங்க கோரி தெருமுனை கூட்டம், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் திருவள்ளூர் மாவட்ட துணைத் தலைவர் கே. போஸ் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் என். எஸ். பிரதாப் சந்திரன், சோழவரம் ஒன்றிய செயலாளர் கே. குமரேசன், ஒன்றிய தலைவர் ஆர். பஞ்சநாதன், துணைத் தலைவர் எஸ். கருப்புசாமி, இளைஞர் பெருமன்ற மாவட்ட குழு உறுப்பினர் பிரபு. ஊராட்சி மன்ற உறுப்பினர் சீனு என்கிற சுரேந்திரன் மற்றும் ரமேஷ், வேலுச்சாமி உள்ளிட்ட ஏராளமான பெண்கள் கிராம நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 130. இன அறிவு

**உடையான் உரைகள் உடையானுக் காகும்**
**அடையானுக் காவ தெது**

செல்வம் உடையவனுடைய அறிவுரைகள்யாவும், செல்வம்உடையவனுக்கு உதவி செய்வதாகவேஇருக்கும். ஏழைக்கு அது சிறிதும் உதவாது.

**உடையனென்று மூதிய மோர்ந்தே உரைப்பான்**
**மடையன் மதிக்கு மவன்**

செல்வம் உடையவனின் ஒவ்வொரு பேச்சும் அவன் மேலும் செல்வம் பெருக்குவதற்காகவே இருக்கும். அவனது அறிவுரைகளை அறிவற்றவன் மட்டுமே பின்பற்றுவான்.

# நூல் நயம்

## மானுடம் போற்றும் மக்கள் தலைவர்கள்




இந்தியநாட்டின்விடுதலைப்போராட்டத்திலும், உழைக்கும் மக்களின் உரிமை போர்களத்திலும் முன்நின்ற மகத்தான மக்கள் தலைவர்களைபற்றி, மானுடம் போற்றும் மக்கள் தலைவர்கள் என்கிற இந்நூலை எம். ஆர். ரகுநாதன் தொகுத்துள்ளார்.

இந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் என்கிற பெருமையுடன், சமூக விடுதலைக்காக தொடர்ச்சியாக களமாடிய சிந்தனை சிற்பி சிங்காரவேலர் முதல், மகத்தான தொழிற்சங்க தலைவர் பி. சக்கரை செட்டியார், கே. முருகேசன், சி. எஸ். சுப்பிரமணியம், வ. சுப்பையா, எஸ். ஏ. டாங்கே, ஹிரேன் முகர்ஜி, அஜய் குமார் கோஸ், ஏ. கே. கோபாலன், அஹில்யா ரங்னேகர், பி. சீனிவாச ராவ், ப. ஜீவானந்தம், பி. சி. ஜோசி, எம் .ஆர். வெங்கட்ராமன், இந்திரஜித் குப்தா, கே. பி. ஜானகி அம்மாள், சி. அச்சுதமேனன், பி. ராமமூர்த்தி, கே. பாலதண்டாயுதம், சி. ஏ. பாலன், எம். கல்யாணசுந்தரம், பார்வதி கிருஷ்ணன், மோகன் குமாரமங்கலம், ஐ. மாயாண்டி பாரதி, ப. மாணிக்கம், ஏ. பி. பரதன், ஹர்கிஷன் சிங் சுர்ஜித், ஆர். கே. கண்ணன் உள்ளிட்ட மகத்தான தலைவர்களை பற்றிய வாழ்க்கை சரிதமாக இந்நூல் உள்ளது.

இவர்களது சமூக அரசியல் பங்களிப்பு இல்லாமல் இந்த நாடு இவ்வளவு வளர்ச்சியும் முன்னேற்றமும் பெறவில்லை. இவர்கள் இந்திய விடுதலைக்கு மட்டுமல்ல, தொழிலாளர்களும், விவசாயிகளும் பெற்று இருக்கிற பல்வேறு உரிமைகளுக்கு அடித்தளம் இட்டவர்கள். இவர்களது தொலைநோக்குப் பார்வையும், கூறிய சிந்தனையும், விடாப்பிடியான போராட்டமும் தான் நமது நாட்டையும், இந்திய சமூகத்தையும் இவ்வளவு தூரம் முன்னேற்றிருக்கிறது என்பதை நாம் இந்நூலின் மூலமாக அறிந்து கொள்ள முடியும். இதற்காக இவர்கள் பட்ட துன்பமும், இடர்பாடுகளும் கொஞ்ச நெஞ்சம் அல்ல, அது ஒரு வரலாற்று வீர காவியம் என்பதையும் நமது நெஞ்சில் பசுமரத்து ஆணிபோல் பதித்து விடுகிறார் நூலாசிரியர். பல்வேறு தலைவர்களை ஒரே நூலில் நம்மால் தரிசிக்க முடிகிறது. இந்த மகத்தான மனிதர்களை நாமும் அறிந்து கொள்ள இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம்.

– இன்சுவை பாரதி

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | எம். ஆர். ரகுநாதன் |
| பக்கம் | : | 244 விலை : 330 |
| வெளியீடு | : | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை–50 |

## சமஸ்கிருதம் செம்மொழி அல்ல




சமஸ்கிருதம் மொழி செம்மொழி என வரையறுத்து இந்திய அரசு பல நூறு கோடிகளை அதற்கு செலவழித்து வருகிறது. உண்மையில் சமஸ்கிருதம் செம்மொழி அல்ல என்கிற கருத்தை வலியுறுத்தும் வகையில் பேராசிரியர் முனைவர் ப.மருதநாயகம் வடமொழி ஒரு செம்மொழியா என்னும் நூலை எழுதியுள்ளார். அது குறித்து வடமொழி செம்மொழி அல்ல எனும் ஒரு ஆய்வு நூலை இலக்குவனார் திருவள்ளுவன் எழுதியுள்ளார்.

சமஸ்கிருதம் என்றைக்கும் மக்கள் மொழியாகப் பேச்சு நிலையில் இருந்ததில்லை. ஆனால் மத்திய அரசு அறிவியல் மொழி போல் பொய்யாக புகழ்ந்து அதை மேற்கோளாகக் காட்டி பரப்பி வருகின்றனர். கலைகள், சமயம், மொழி, தத்துவம் ஆகிய எல்லா துறைகளிலும் சமஸ்கிருதம் தோற்றம் பெறுவதற்கு தமிழ் பண்பாடே தூண்டுகோலாகவும், அடித்தளமாகவும் அமைந்திருந்தது என்பதை தனது ஆய்வின் மூலம் நிறுவுகிறார் முனைவர் ப. மருதநாயகம்.

வடமொழி இலக்கியங்கள் பெண்களை போகப் பொருளாகவே காட்டுகிறது. பெண் குழந்தைகளுக்கு எதிராகவே வேதங்கள் பேசுகின்றன. வேதங்களில் வன்முறையும், அதிகார வெறியும் போற்றப்படுவதோடல்லாமல், அவையே உலக நெறி என்றும், உலக நோக்கம் என்றும் கூறப்படுகின்றன. ரிக் வேதம் முழுமையும் பேராசை கொண்ட புரோகிதர்களின் தந்திர வேலை. அதில் உள்ள சில அழகிய வரிகள் புரோகிதர்கள் மது, மாதர்பால் கொண்டிருந்த இச்சையையும், சூதாட்ட ஈடுபாட்டையும் காட்டுபவை. யசுர் வேதமும், சாமவேதமும் இலக்கிய தரம் உடையவை அல்ல. எக்குற்றம் செய்தாலும் பிராமணனுக்கு கொலை தண்டனை கிடையாது. பிராமணர் எல்லா உரிமைகளும் பெற்று தலைமை நிலையில் இருந்தனர். கி.மு. மூன்றாம் நூற்றாண்டுகளிலேயே சமஸ்கிருத இலக்கியங்களில் பரத்தையருக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. பெண்கள் இவ்வாறு இழிவு செய்யப்பட்டனர்.

சமஸ்கிருத நாடகங்களில் கலைமகள் தன் கணவனான பிரம்மனிடம் சமஸ்கிருதம் தெரியாததால், பிராகிருத மொழியில் தான் பேசுவாளாம். ஆகக் கல்விக்கடவுளுக்கு சமஸ்கிருதம் தெரியவில்லை என்றால் அது மக்கள் மொழியாக விளங்கவில்லை என்பதை புரிந்து கொள்ளலாம். காளிதாசனின் சாகுந்தலமும் தமிழ் சாயல் உடையது என சில ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளதாக குறிப்பிடுகிறார் நூலாசிரியர். நாம் சமஸ்கிருதம் என்று அழைக்கின்ற கலப்பு மொழி உருவானது வெகுகாலத்திற்கு பின் தான். அதன் பின்னே வேதங்கள் தோன்றின. எனவே, சமஸ்கிருதத்தை செம்மொழி என்று சொல்வது ஏற்புடையது அல்ல என்று இந்நூலில் குறிப்பிடுகிறார் நூல் ஆசிரியர். இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்கவும்.

–சமரன்

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | இலக்குவனார் திருவள்ளுவன் |
| பக்கம் | : | 88 விலை: 100 |
| வெளியீடு | : | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை–50 |

சந்திரயான்–3 வெற்றிக்கான பங்களிப்பைச் செய்த

# ஹெச்இசி ஊழியர்களின் ஊதிய நிலுவைத் தொகையை உடனே வழங்குக

### தொழிற்சங்க தலைவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் வேண்டுகோள்

ஏஐடியுசி பொதுச்செயலாளர் அமர்ஜீத் கவுர் மற்றும் ஐஎன்டியுசி, எச்எம்எஸ், சிஐடியு, எல்பிஎப், ஏஐயுடியுசி, ஏஐசிசிடியு, சேவா உள்ளிட்ட ஒன்றிய தொழிற்சங்க தலைவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சந்திரயான்3 ஐ சாத்தியமாக்கிய பொறியாளர்கள், விஞ்ஞானிகள், தகவல் தொடர்பு வல்லுநர்கள் மற்றும் பலரின் குழுவிற்கு மத்திய தொழிற்சங்கங்கள், துறை சார்ந்த சம்மேளனங்கள், தனிச் சங்கங்களின் கூட்டமைப்பு வணக்கம் செலுத்துகிறது. அவர்களின் அயராத உழைப்பு இந்தியா பல துறைகளில் முன்னேற எண்ணற்ற வாய்ப்புகளைத் திறந்து வைத்துள்ளது.

சந்திரயான்3 கதை விரிவடையும் போது, திட்டத்திற்காக தன்னலமின்றி உழைத்தவர்களின் இதயத்தை பிளக்கும் கதைகள் வெளிவருகின்றன.

சந்திரயான்3 திட்டம் வெற்றி பெறுவதற்கான இயங்கு ஏவுதளம் மற்றும் இதர முக்கிய கருவிகளை ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் உள்ள ஹெவி எஞ்சினியரிங் கார்ப்பரேஷனின் ஆயிரக்கணக்கான பொறியாளர்களும் தொழிலாளர்களும் வடிவமைத்து தயாரித்து தந்துள்ளார்கள் ஆனால் அவர்களுக்கு கடந்த 17 மாதங்களாக ஊதியம் வழங்கப்படவில்லை.

இஸ்ரோவில் பணியாற்றும் விஞ்ஞானிகள், பொறியாளர்களுக்கு பல ஆண்டுகளாக பதவி உயர்வு வழங்கப்படவில்லை. ஆனாலும் முழு மனதோடு திட்டத்தின் வெற்றிக்கா பணியாற்றினர்!

சந்திரயான்3 திட்டத்திற்கு இன்றியமையாத தகவல் தொடர்பு ஒருங்கிணைப்பை, மற்றொரு பொதுத்துறை நிறுவனமான பிஎஸ்என்எல் பிரத்தியேகமாக கையாண்டது. இதைத்தான் ஒன்றிய அரசு வேண்டுமென்றே கழுத்தை நெரித்துக் கொண்டிருக்கிறது.

முழு திட்டமும் பொதுத்துறை நிறுவனங்களால் கையாளப்பட்டது என்பதில் வியப்பில்லை. இந்தியாவின் நலன்களை காப்பதற்காகவே பொதுத்துறை உருவாக்கப்பட்டது. நுட்பம் மிகுந்த எந்திரங்கள் கருவிகளை உற்பத்தி செய்ய கூடுதல் காலமாகும். அதில் தனியார் துறை முதலீடு செய்யத் தயாராக இல்லை. அவர்கள் விரைவான உறுதியான லாபத்தையே விரும்புவார்கள்.

ஹெச்இசி ஊழியர்களின் நிலை, கொரோனா பெருந்தொற்றின் போது தன்னலமின்றி உழைத்த ஆஷா மற்றும் அங்கன்வாடி ஊழியர்களின் கதையை நினைவுக்குக் கொண்டு வருகிறது, "முன்னணி வீரர்கள்" என்று அரசு அவர்களைப் பெருமையாய்ப் புகழ்ந்தது. ஆனால் அவர்களின் பரிதாபகரமான மாதாந்திர கவுரவ ஊதியத்தை மட்டும் அதிகரிக்கவே இல்லை! வேலை முடிந்ததும், உயிரை பணயம் வைத்து உழைத்த தற்காலிக ஊழியர்கள் வெளியேற்றப்பட்டனர்.

ஆரோக்கியமான குழந்தைகளை வளர்ப்பது முதல் விண்வெளியை ஆராய்வது வரை நமது தேசத்தின் முதுகெலும்பாக இருப்பது பொதுத்துறைதான் என்பதை பிரதமர் ஒப்புக்கொள்வாரா? பொதுத்துறை நிறுவன ஊழியர்களை ஊதியம் தராமல் வாட்டி வதைக்கும் நிலையில், தனது முன்னுரிமைகளைத் தவறாகப் பயன்படுத்தி, பிரம்மாண்ட சிலைகளை அமைப்பதற்காக ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து ஒன்றிய அரசு கொள்ளையடித்தது.

சந்திரயான் 3 வெற்றியைக் கொண்டாடும் வகையிலாவது, அந்த வெற்றிக்கான பங்களிப்பைச் செய்த ஹெச்இசி ஊழியர்களின் ஊதிய நிலுவைத் தொகையையும், இஸ்ரோவில் உள்ள பொறியாளர்கள் மற்றும் அறிவியல் பணியாளர்கள் மற்றும் இந்தத் திட்டத்தில் முக்கியப் பங்காற்றிய பிற பிரிவுகளில் உள்ளவர்களுக்கு தாமதப்படுத்தப் பட்டுவரும் பதவி உயர்வுகளையும், ஒன்றிய அரசு உடனடியாக வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

# கலை இலக்கியப் பூங்கா




### நூல் வெளியீட்டு விழா

தமிழ்நாடு ஏ. ஐ. டி. யு. சி. கட்டட தொழிலாளர் சங்கத்தின் மாநில செயலாளர் அம்பத்தூர் இரா. துரைசாமி தொகுத்து, நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள, உழைக்கும் வர்க்கத்தின் உத்தமத் தலைவர்கள் என்ற நூல் வெளியீட்டு விழா, திருச்சி கட்டட தொழிலாளர் சங்க பேரவை கூட்டத்தில் வெளியிடப்பட்டது.

வெளியீட்டு நிகழ்ச்சிக்கு சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் கோவை என். செல்வராஜ் தலைமை தாங்கினார். ஏ. ஐ. டி. யு. சி. தேசிய துணை தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் நூலை வெளியிட்டார். முதல் பிரதிகளை ஏ. ஐ. டி. யு. சி. தேசிய செயலாளர் டி. எம். மூர்த்தி, தமிழ்நாடு ஏ. ஐ. டி. யு. சி. மாநில பொதுச் செயலாளர் எம். ராதாகிருஷ்ணன், திருச்சி மாமன்ற உறுப்பினர் சுரேஷ், மாநகர் மாவட்ட கட்சி செயலாளர் எஸ். சிவா உள்ளிட்டோர் பெற்றுக் கொண்டனர். நிகழ்ச்சியில் கட்டுமான தொழிலாளர் சங்கத்தின் மாநில மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர். நிறைவாக நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் திருச்சி மண்டல மேலாளர் எஸ். குமார் நன்றி தெரிவித்தார்.

### இலக்கிய கூட்டம்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் கோவில்பட்டி கிளையின் சார்பில் எழுத்தாளர் உதயசங்கர் அவர்களுக்கு பாராட்டு நிகழ்வு மற்றும் இலக்கிய கூட்டம் எழுத்தாளர் கி.ரா நினைவரங்கத்தில் நடைபெற்றது இந்நிகழ்வில் கோவில்பட்டி கலை இலக்கிய பெருமன்றத்தினுடைய நிர்வாகிகள் மற்றும் கலை இலக்கிய ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

### நூல் வெளியீட்டு விழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றமும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனமும் இணைந்து கவிஞர் சுந்தரசோமன் எழுதிய செய்தொழில் நேசி! நூல் வெளியீட்டு விழா திண்டுக்கல்லில் நடைபெற்றது.

பால சாகித்திய அகாதமி விருதாளர் மா. கமலவேலன் மாவட்டச் சிறப்புத் தலைவர், தகஇபெ தலைமை வகித்தார். என்.சி.பி.ஹெச், நெல்லை கிளை மேலாளர், கவிஞர் பூர்ணா வரவேற்றார். பொ.அன்பரசன் நூலை வெளியிட கே. சி. சுதாகர் முதல் பிரதியினைப் பெற்றுக் கொண்டார்.

முனைவர் ரெ. விமலாதேவி நூலினை அறிமுகம் செய்து உரையாற்றினார். என்.சி.பி.ஹெச் மேலாண்மை இயக்குநர் க.சந்தானம் விழாப் பேருரையாற்றினார். என்.சி.பி.ஹெச் மதுரை மண்டல மேலாளர் அ.கிருஷ்ணமூர்த்தி வாழ்த்துரை வழங்கினார்.

கவிஞர் சுந்தரசோமன் ஏற்புரை வழங்கினார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாவட்டச் செயலாளர் சு.பிரபாகரன் நன்றி கூறினார்.

நிகழ்வில் நாவலாசிரியர் சுப்ரபாரதிமணியன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

### நூல் அறிமுக விழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் கோவை கிழக்கு சார்பில் நூல்அறிமுகம் பேரா.தங்கம் தலைமையில்நடைபெற்றது. முனைவர் கி.முருகேசன் கவிஞர் அப்துல் ரகுமான் எழுதிய பித்தன் கவிதை நூலையும்,முனைவர் மாலா அவர்கள் ஆன்டன் செக்காவ் சிறுகதைகளை அறிமுகபடுத்தினார்

இந்திய
கம்யூனிஸ்ட் கட்சி

CPI

மாநிலம் தழுவிய மாபெரும்

# தொடர் மறியல் போராட்டம்

செப்டம்பர் - 12, 13, 14.

- விலைவாசி உயர்வுக்கு காரணமான
- வேலையின்மையை அதிகரித்துள்ள
- மக்களின் ஒற்றுமையை சீர்குலைக்கிற
- சொந்த லாபங்களுக்காக நாட்டை விற்கிற
- இந்தியைத் திணித்து, தமிழைப் பழிக்கிற

## பாஜகவே ஆட்சியை விட்டு வெளியேறு!



JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 09.09.2023 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

கம்போடிய கலை மற்றும் பண்பாட்டு துறை
அங்கோர் தமிழ் சங்கம்
சீனு ஞானம் பயண ஏற்பாட்டாளர்கள்

இணைந்து நடத்தும் மாபெரும்....

# இரண்டாம் உலக கவிஞர் மாநாடு - 2023

உலக கவிஞர்களே கவிபாட வாருங்கள் !!!

இது இரண்டாம் உலக கவிஞர் மாநாடு!!!

## நவம்பர் 21 முதல் நவம்பர் 26 வரை
## சியம் ரீப், கம்போடியா.

இரா.ஞானசேகரன்
(இயக்குநர்)
சீனு ஞானம் டிராவல்ஸ் கம்போடியா
+855 81412179

சீ.தாமரை
(துணைத் தலைவர்)
அங்கோர் தமிழ் சங்கம்
+91 948992060



## பயணத்திட்டம்

21/11/23 - 26/11/23

21/11/23 : முதல் நாள் வருகை,உணவு,உள்ளூர் சுற்றுலா
22/11/23 : உலக கவிஞர்கள் மாநாடு தொடக்க விழா.
23/11/23 : உலக கவிஞர்கள் மாநாடு 2ம் நாள் மற்றும் நிறைவு விழா.
24/11/23 : அங்கோர்வாட்,தா ப்ரோம் சுற்றுலா.
25/11/23 : நாம் குள்ளென் மலைச் சுற்றுலா .
26/11/23 : நிறைவு நாள்,தாயகம் புறப்படுதல்.

- உலக கவிஞர் மாநாடு நவம்பர் 21 முதல் 26 வரை (2023)
- 5 இரவுகள்,6 நாட்களின் தங்குமிடம், உணவு, சுற்றுலாவின் மொத்த கட்டணம்: 500 அமெரிக்க டாலர்.
- கம்போடிய விசா, குளிரூட்டப்பட்ட பேருந்து வசதி,
- 4 தர நட்சத்திர விடுதி,சைவ,அசைவ உணவுகள்.
- இரண்டு நாட்கள் மாநாட்டு நிகழ்வு மற்றும் கம்போடிய அரசின் சான்றிதழ்கள்,3 நாட்கள் சுற்றுலா (அங்கோர் வாட்,1000 லிங்கங்கள், டோன்லே சாப் படகு சுற்றுலா, உள்ளூர் சுற்றுலா) என அனைத்தும் இக்கட்டணத்தில் அடங்கும்.

இம்மாநாட்டில் கலந்துக் கொள்பவர்களின் கவிதைகள்,கட்டுரைகள் வரவேற்க்கப்படுகின்றன. அதனுடன் தங்களைப் பற்றிய குறிப்புகளும்,அலைபேசி எண்,மின்னஞ்சல் ஆகிய அனைத்தையும் பிழையில்லாமல் அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். அனுப்ப வேண்டிய கடைசி தேதி : செப் 30,2023.

அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி :
kavingar2023@gmail.com. Fb : Angkor Tamizh Sangam Cambodia.

1. அயலகத்தில் தமிழர் வாழ்வு
2. அயலகத்தில் தமிழ்
3. தமிழின் இன்றைய நிலை
4. தமிழின் வளர்ச்சியே தமிழனின் வளர்ச்சி.
5. கீழடிச்சான்றுகள்.
6. மரபு வழி வாழ்க்கை
7. கம்போடியா தமிழ்ச்சங்கப் பணிகள்
8. தமிழால் இணைவோம்
9. இனியும் சிந்திக்காவிடில்
10. மாற்றம் ஒன்றே மாறாதது
11. பெரியாரும் பெண்ணியமும்
12. தமிழால் நாம்
13. தொல்காப்பியமும்,தமிழர் மரபும்
14. நதிகளின் மரணங்கள்
15. தமிழ் தரும் தலை நிமிர்வு
16. பாரதிதாசனின் தமிழ் பற்று
17. இறைவியின் போராட்டம்
18. என் உயிர் நண்பனே
19. இயற்கையின் எதிரி மனிதன்
20 ஏதாவது எழுதலாமே
21. ஏர் முனையும்,பேனா முனையும்
22. கனிம வளமும், கார்ப்பரேட்டுக்களும்

குறிப்பு:

மரபுக்கவிதை 24 வரிகள். (எந்த யாப்பில் எழுதினாலும்)
புதுக்கவிதை என்றால் 80 சொற்களுக்குள் இருக்க வேண்டும்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.